
காயத்திரி சித்தர்

# ஸ்ரீ முருகேசு மகரிஷி

## வாழ்வும் பணிகளும்



இராஜேந்திரநாத்

கொட்வின்-சாமுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி சித்தர்
# ஸ்ரீ முருகேசு மகரிஷி
# வாழ்வும் பணிகளும்

## இராஜேந்திரநாத் கொட்வின்-சாமுவேல்

ஸ்ரீகாயத்திரி பீடம்,

நுவரெலியா - இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

தலைப்பு
காயத்திரி சித்தர் முருகேசு மகரிஷி
வாழ்வும் பணிகளும்

வெளியிடுபவர்
சக்திவேல் சந்திரமோகன்
நிர்வாக அறங்காவலர் , ஸ்ரீ காயத்திரி பீடம்,
நுவரெலியா , இலங்கை

கணினி தட்டச்சு:
முருகேசு பாக்யலக்ஷமி, சிவலிங்கம் பிரேமானந்தி
குகனேஸ்வரி சண்முகநாதன்

பிரதி திருத்தம்
அனுசூயா (கெனத்) பிலிப்ஸ்

கணினி வடிவமைப்பு:
அழகையா விக்னேஸ்வரன்

அச்சகம்
ஜெட்ரோ கொமியுனிகேசன் - பார்க் ரோட் -நுவரெலியா

எழுதியவர்
இராஜேந்திரநாத் கொட்வின் -சாமுவேல்

முதற் பதிப்பு 2009ம் வருடம் 200 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு 2009ம் வருடம் 1000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு 2012ம் வருடம் 1000 பிரதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம யோக ஞான சபை

மானச - யோக - ஆன்மீக - ஆஸ்ரமம்

அம்பத்தூர், மதருஸ்.

தேதி 25-10-62

ஆன்மீக அருளாளர் ஸ்ரீ முருகேசு
அவர்களின்

௨௯வது பிறந்தநாள் வாழ்த்துரை

வாழிய! அருளாளா நீ
வையத்தும் உய்யவென்று
ஆழியல் போல் வாரிந்த
ஆன்மீகப் பணியைக் கொண்டு

ஆத்ம யோக ஞான சபை
அகத்தியனின் சிவ சபை
அத்தலையின் இலங்கை கிளை
அமைத்திட்ட அறிஞன் நீ!

இலங்கை மக்கள் இன்பம் காண
நயங்கள் கூறும் யோகம் ஞானம்
தலங்கள் தோறும் பரத்திக்க
தவமும் பெற்று பலமும் அருள்வாய்

வாழி - வாழி - வாழி

யோகி கண்ணையா

பரமகுருநாதர் பண்டிட் கண்ணையா யோகிஸ்வரர் அவர்கள் எமது குருநாதரின் 29வது அகவை நிறைவை முன்னிட்டு வழங்கிய வாழ்த்து மடல்.

இராஜேந்திரநாத் கொட்வின்-சாமுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Grams: "DIVINELIFE" Phone : 40

# THE DIVINE LIFE SOCIETY

(REGISTERED)

Propagates Yoga and Vedanta, and the Ethical and Spiritual Culture of India, promotes Universal Love, the Unity of Religions, the Ideal of Brotherhood, and the Spirit of Service, by Tuition and Training, Publication of Texts, Correspondence and Propaganda.

Founder-President
Sri Swami Sivananda

P.O. SIVANANDANAGAR,
via Rishikesh,
Dt. Tehri-Garhwal,
(Himalayas), India.

14-4-1963

ஸ்ரீ சிவாநந்தம் முருகேசு
கொழும்பு- 14.

அமராத்மாவே

ஓம் நமோ நாராயணாய!

தங்களுடைய லெட்டர் கிடைத்தது.

தங்களுக்கு [illegible] இருக்கிறது. தங்களுடைய முயற்சியால் [illegible] 10 லட்சம் [illegible] பாபங்களும் ரோகங்கள் யாவும் நாசம் [illegible]. [illegible] ஜபம், [illegible] மஹேசன் சிவபெருமான் [illegible]. கடவுளை நம்பிக்கை [illegible].

எல்லாம் வல்ல சிவபெருமான் தங்களுக்கும், மக்கள் யாவர்க்கும் நீண்டாயுளும், தேகாரோக்கியத்தையும், மன சாந்தியையும் கொடுத்து ரக்ஷிப்பாராக!

ஆசி -

தங்கள் சொந்த ஆத்மா

எம்குருநாதருக்கு ரிஷிகேஷில் இருந்து சுவாமி சிவானந்தர் அவர்கள் 14.04.1963 ல் வரைந்த அஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01. | முன்னுரை | i |
| 02. | உங்களுடன் ஒரு வார்த்தை........ | iii |
| 03. | விதை ..... | V |
| அத்தியாயம் | | |
| 01. | பிறப்பும் பால்யமும் | 01 |
| 02. | தலைநகரில் தொழிலும் ...... | 09 |
| 03. | ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரர்............. | 14 |
| 04. | ...கொல்லிமலை அநுபவங்கள் | 19 |
| 05. | ஆந்திரமாநிலத்தில் ........ | 25 |
| 06. | ஸ்ரீ ஞானானந்தகிரி யோகியாருடன் ..... | 31 |
| 07 | இமயத்தில் சிவானந்தசரஸ்வதி ........... | 36 |
| 08 | ரிஷிகளின் சூட்சும ஆஸ்ரமங்களும் ... | 41 |
| 09. | காயத்திரிபீடத்தில் இலங்காதீஸ்வரர் ஆலயம் | 45 |
| 10. | கிழக்கு மாகாணத்தில் காயத்திரி சித்தர் | 54 |
| 11 | மக்கள் பணியே மகேசன் சேவை | 61 |
| 12 | தெய்வமனிதர் | 67 |
| 13. | மனிதநேயம் | 71 |
| 14. | உலக ஞானி | 73 |
| 15. | அருட்சம்பவங்கள் | 76 |
| 16. | மகாசமாதியில் காயத்திரி சித்தர் | 79 |
| ✤ | முருகேசு சுவாமிகளின் திருப்பாத பூஜை. | 83 |
| ✤ | திருவிளக்கு | 84 |
| ✤ | ஸ்ரீ மஹரிஷி முருகேசு நாமாவளி | 85 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்த நூலின் ஆசிரியர் இராஜேந்திரநாத் கொட்வின்-சாமுவேல் அவர்கள் நமது குருதேவரை நன்றாக அறிந்தவர் மட்டுமல்லாது முழுமையாக உணர்ந்தவருமாவார். அநேக எழுத்தாளர்களும் கல்விமான்களும் நமது குருதேவரின் நிரந்தர அபிமானிகளாகவும் தீவிர பக்தர்களாகவும் இருப்பினும் அவரின் வரலாற்றினைத் தொகுத்து எழுதும் பிராப்தம் இவருக்கே கிடைத்திருப்பதுவுங் கூட எமது சற்குருநாதரின் திருவருளேயாகும்.

அடியேனும் பிறப்பு முதல் இன்றுவரை குருநாதரின் அருட்பார்வையில் வளர்ந்தவன். தாய், தந்தை, குரு, தெய்வமாக என்னை வழிநடத்திக் கொண்டிருப்பவர் எம் சத்குருநாதர். அவர் பார்வைப்பட பிறந்திருந்தாலும் எனது ஐந்தாவது வயதினில் தான் அவருடனே சேர்ந்து வாழும் பாக்கியம் ஆரம்பமானது.

ஒவ்வொருவரும் குருவுக்கு எவ்வாறு பணி செய்தோம் என்பதில் தான் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் என்மட்டில் அது நேர்மாறாக நடந்தது. அடியேனை சிறு வயதில் துயிலெழுப்பி, காலைக் கடன்களை முடிக்கச் செய்து, உணவு தயாரித்து ஊட்டி பாடசாலைக்கு அனுப்புவது முதல், திரும்பி வந்தவுடன் மறுபடி படுக்கைக்குப் போகும் வரை ஒவ்வொரு விடயத்திலும் என் குருநாதரே வழிநடத்தினார் என்பதை கண்ணீருடன் நினைவு கூருகின்றேன்.

அவர் தனது தந்தையின் மூத்த சகோதரனும், நான் அவரின் பெறாமகனும் என்ற உறவு நாளடைவில் அவரே அனைத்தும் என்ற நிலை வந்தது. அவர் பணிகளில் சிலவற்றிலாவது பங்கேற்கும் பாக்கியம் கிடைத்தது. சிறுவயது முதல் அவருடன் ஆலய, ஆச்சிரம சூழலில் வாழ்ந்த காரணத்தினால் மந்திர ஜபங்கள், பூஜைகள், பஜனை என்பன மனதில் ஆழமாக பதிந்தன. அவருடன் இணைந்து ஆலய நிர்வாக பணிகளில் ஈடுபட்ட அனுபவம் இன்று எம் கடமைகளை செய்வதற்கு உதவுகின்றது.

குருவின் பார்வை, பேச்சு, தொடுகையாலும் அடியேனும் தீட்சை பெற்றிருப்பேன் என்பது எனது நிலைப்பாடு. சிலர் சுவாமி முருகேசு என்ன சித்து செய்தார்? எனக் கேட்பார்கள். குருநாதரின் வாழ்வே ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாகும், நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து சிறு வயதினிலேயே வறுமையில் வாடியவர் ஒரு மகானாக, மகரிஷியாக இன்னும் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருப்பதுவும் சித்துகள்தான்.

பாழடைந்த ஒரு இடத்தைத் தெரிவுசெய்து, லோகமாதாவான காயத்ரி தேவிக்கும் இலக்காதீஸ்வர பெருமானுக்கும் திருப்பதி வெங்கடாசலபதிக்கும், தாந்திர மகா காளிக்கும் ஆலயங்கள் அமைத்தார்.

இன்றும் அவர் சிரஞ்சீவியாக வாழ்ந்து தம் பக்தர்கள் வேண்டும் வரங்களை அள்ளியள்ளி கொடுக்கின்ற சமாதி ஆலயம் அனைத்தையும் உருவாக்கியதும் சித்துதான்.

மேலும் கிழக்கு மகாணத்தில் கல்லடியில் கலாசார மண்டபம்,நாவலடியில் சப்தரிஷிகளுக்கென்றே ஒரு கோவில், மகாமேரு ஆலயம்,மகா விஷ்ணு ஆலயம்,தம்பிலுவில் காயத்ரி தபோவனம், திருகோணமலை ஆத்மஞானசபா அனைத்தும் பிரமாண்டமான கட்டடங்கள் மட்டுமல்ல தெய்வங்கள் நடமாடிக் கொண்டிருக்கின்ற பேசும் ஆலயங்கள் அனைத்தும் அவரின் சித்துகளே.

ஒரு சிலரால் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு வந்த காயத்ரி மஹாமந்திரத்தை இன்று உலகில் அனேகர் செபித்து பயன்பெற செய்தமை அவர்தம் மகா சித்துவாகும்.

பூவுடன் சேர்ந்த நாரும் மணப்பது போல் அவரின் அரவணைப்பில் அவர்தம் அருள் மகா சமுத்திரத்தில் அடியேனும் ஒரு துளியை பெற்றனுபவித்த பாக்கியம் எனக்கு உண்டு.

எனை ஈன்ற பெற்றோருக்கும் வழிநடத்தும் சத்குருநாதர் காயத்திரி சித்தர் ஸ்ரீமுருகேசு மஹரிஷிக்கும் பலகோடி வணக்கங்கள். அவருடன் நாமும் வாழ்ந்த காலத்தையும் சம்பவங்களையும் அவருடைய வரலாற்று சிறுநூலின் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

குருவின் பணியே இறைவன் பணி என்பதை ஆழமாக மனதிற் கொண்டு தொடர்வோம் அவர் பணியையு

**சக்திவேல் சந்திரமோகன்**

நிர்வாக அறங்காவலர்

ஸ்ரீ காயத்திரி பீடம்

நுவரெலியா ,இலங்கை

(2012 ம் வருடம் மகா சிவராத்திரி தினத்தன்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் ஒரு வார்த்தை.......

" புனிதர்களை நீங்கள் தனியாக அடையாளங் காணமுடியாது, ஏனெனில் அவர்கள் நம்மில் ஒருவராகவே வாழ்கின்றார்கள்" என ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உள்ளது.

நம்மில் ஒருவராகவே வாழ்ந்த காயத்திரி சித்தர் ஸ்ரீமுருகேசு மகரிஷிகளின் வாழ்வையும் பணிகளையும் பற்றிய விபரங்களை அன்பர்களிடம் கேட்டும், பத்திரிகைகளில் வாசித்தும் அறிந்தது எனது அதிர்ஷ்டமென்றாலும், அவரை உணர்ந்து அனுபவிக்க முடிந்தது பரத்திலிருந்து எனக்கென வாய்த்த அரிதான கிருபையாகும்.

**நீயே செஞ்சிருப்பா! ஓனக்கு கெடைச்ச பிராப்தமப்பா!** என்று சுவாமிஜியின் மொழியில் அநேகருக்கு கிடைக்கும் ஆணையாக நினைந்தே எனது உந்துதலை கணிணியில் எழுத்தாக பதிவுசெய்ய ஆரம்பித்தேன்.

அன்று சுவாமிஜியவர்கள் என்னை ஒரு சமூக-இணைப்பாளனாக மட்டுமே தெரிந்து அன்புகூர்ந்திருந்தார். பலரை தனது எழுத்துப் பணிக்கென்றே வரித்திருந்தார். அவர்கள் பதிவுசெய்து வைத்திருந்த அநேக வரிகள் இந்நூலுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன. அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் (மறைந்த) நண்பர் செ.சிவானந்ததேவன் மற்றும் தம்பி த.குணரெத்தினம் இருவருமாவர்.

மேலும் குருதேவர் எழுதிய நூல்களின் ஒரு சில பகுதிகளையும் இந்நூலில் இணைத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சுவாமிஜியைப் பற்றிய அரிய தகவல்களை சுவைப்பட எனக்கு தந்தவர்களில் பெரியவர் சின்னசாமி, (காயத்திரி) கதிர்வேல் மாஸ்டர், ஜீவராணி அம்மையார், விசேடமாக சுவாமிஜியின் பெறாமகன் சக்திவேல்-திலகரத்தினம் ஆகியோர் முதன்மையானவர்கள்.

காயத்திரி பீடத்தின் அறங்காவலர் குழுவினருக்கு நான் என்றும் கடமைப் பட்டுள்ளேன். அவர்களில் எனக்கு நேரடியான ஊக்குவிப்பாளர்களான நிர்வாக அறங்காவலர் திரு. சக்திவேல்-சந்திரமோகன் மற்றும் பீடத்தின் செயலாளர் இரா.ஞானசேகரனுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் நன்றி.

எனது உறவுகள் அனைவருக்கும் எனது நன்றிகளை அறிவிக்க என்னை வேலை வாங்கும் அம்மணிகளான ஜோதிமலர், தேஜஸ்வினி மற்றும் (ஏமி)தீக்ஷனா மூவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**இராஜேந்திரநாத் கொட்வின்-சாமுவேல்**

**"ஜோதி நிகேதன்"**
**த.பெ. 05 , ஹல்தும்முல்லை, இலங்கை**
**077-9476132 , 075-8709287**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை
(அன்று நடந்தது)

காயத்திரி சித்தர் ஸ்ரீமுருகேசு மகரிஷியவர்கள் ஜீவசமாதியடைவதற்கு இருபது வருடங்களுக்கு முன் ஒருநாள். இன்று அவரின் ஸ்ரீதேகம் நல்லடக்கம் செய்யப்படிருக்கும் மணிமண்டபம் அமைந்திருக்கும் இடம் அந்தநாட்களில் கட்டிடங்கள் எதுவுமின்றி ரோஜாச்செடிகளும் மல்லிகைக்கொடிகளும் எலுமிச்சை மரங்களும் காணப்படும் தோட்டமாக இருந்தது.

அன்று மாலைவேலையில் சுவாமிஜி அந்த இடத்தில் ஓய்வாக உலாவிக் கொண்டிருந்தார். நாலுமுழ வேஷ்டி, வெற்றுமார்பில் போர்த்திய ஒரு சால்வையுடன் வழமையானகைத்தடியுமே அவரை அலங்கரித்திருந்தன.

சுவாமிஜியுடன் அவ்வேளையில் அவரின் பேரபிமானியும் அன்புபக்தருமான கர்னல். ஜெயக்குமாரும் அவருடைய துணைவியாரும் உடனிருந்தனர். சுவாமிஜி அவர்களிருவரையும் பார்த்துச் சிரித்தபடியே இந்த இடத்தில் தானப்பா நான் நிரந்தரமாக ஓய்வெடுக்கப் போகிறேன் என்று கூறியபடி கைத்தடியால் தரையைத் தட்டிக்காட்டினார்.

இருபது வருடங்களுக்குப் பிறகு காயத்திரி சித்தர் முருகேசு மகரிஷியின் பொன்னுடலை அவருக்கென்றே உருவான பூரணைத் திங்களில் கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாயிரத்தேழாம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபத்தாறாம் நாளன்று அதே இடத்தில் மண்ணில் விதைத்தோம்.

அன்று மக்களின் அஞ்சலிகளுக்கு ஒத்தாசைப் புரிய இயற்கையுங் கூட காலையிலிருந்தே தனது பங்களிப்பைச் செய்து கொண்டிருந்தது.

ஆனால் அன்றுமட்டும், காலையிலிருந்து மகரிஷியின் இறுதி மங்களாபிஷேக பூஜைகள் மாலையில் பூர்த்தியடையும் தருணம் வரை இயற்கை தன் இயல்புக்கு மாறாக நடந்துக் கொண்டது. விடியலிலிருந்தே கதகதப்பான இளவெயில் நிலவி குளிரை விரட்டிக் கொண்டிருந்தது.

விருந்தோம்பலுடன் சகமனிதனின் உடல் உளச்சிரமங்களை மெய்யுணரும் மஹரிஷி முருகேசுவின் மனிதநேயம் இயற்கையையும் வெகுவாக ஆட்கொண்டு, அந்த மகாசமாதி நாளன்று கிரியை செய்தமையை அனைவரும் உணர்ந்தனர்.

அந்த தெய்வமனிதரின் ஸ்ரீதேகம் பல நூறு வருடங்களானாலும் சிதையாமலிருக்க அரிதான மூலிகைகள் விபூதிப் பொதிகளும் மருத்துநீர் கலவையுடன் பத்மாசன கோலத்தில் சமாதி ஆலயக் கருவறையில் இறக்கப்பட்டது.

கடைசிப் பிடிமண்ணை எவரோ போட்டு முடிக்கும் வரைப் பொறுத்திருந்த சூரியன் அக்கணமே தனது கருமேகக் கம்பளிக்குள் முக்காடிட்டு கதறியழத் தொடங்கினான். கதிரவனின் ஒப்பாரி இடியோசையாக உருவெடுத்து அவன் கண்ணீர் கடும்மழையாக சொரிந்து கூடியிருந்த ஆயிரமாயிரம் விழிகளின் உப்பு நீருடன் கலந்து வழிந்தோடியது.

இன்றும் சுவாமிஜியவர்கள் நம் அநேகரில் வாழ்ந்து கிரியைகள் செய்வதுவும், பலரையும் புதுமையாக வழி நடத்துவதும், நாளாந்த சம்பவங்களாகி காயத்திரி சித்தரின் மகிமைக்கு தொடர்ந்தும் சான்றுகள் பகர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பிறப்பும் பால்யமும்

ஆதியில் எங்கும் பேரமைதி குடிக்கொண்டிருந்தது. யுகங்கள் கடந்தன. சரியானதொரு தருணத்தில் ஒருநாள் அம்மௌனத்தின் முழுமை பேரோசையாக உருப்பெற்றது. இப்பேரொலிகள் படைப்பாற்றல் மிக்க நாதப் பிரம்மங்களாகும். தொடர்ந்து காலங்கள் கடந்தன. நாதப்பிரமங்கள் பிரபஞ்ச வெளியினைப் படைத்தன. பின் பிரபஞ்சத்திலிருந்து கோள்கள் உருவாயின. கோள்களின் செயற்பாட்டினால் உயிர்தரும் மகாஜோதி உருவாயிற்று. இந்த ஜோதிப்பிரம்மம் பேரன்பாக பரிணமித்து அண்டம் எங்கிலும் வியாபித்தது.

இந்த பிரபஞ்சப் பேரன்பு, யுகத்திற்கு யுகம், காலத்திற்குக் காலம், பூவுலகில் மகான்களாகப் பிறந்து வெளிப்படுவது பரத்தின் இயல்பான பணியாகும். அந்த ஜீவன்முக்தர்கள் மனிதகுலத்துக்கு ஒளிதந்து சிரஞ்சீவிகளாக வாழ்கின்றனர். அப்படியான ஒரு ஞானகுருவின் சரிதையே காயத்ரி சித்தர் முருகேசு மகரிஷியின் வரலாறுமாகும். குருதேவர் முருகேசு இறையருளால் மனிதகுலம் பெற்றதொரு மகிமைப் பிரசாதமாவார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், 1933ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபத்தாறாம் திகதி, சுவாமிஜி முருகேசு அவர்கள் சந்தனம்மாள்-இராமன் காளிமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வராக தென்னிந்தியாவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி என்னும் ஊரருகேயுள்ள ஆவுடையார் கோயில் என்னும் சிறுநகரில் பிறந்தார்.

ஆவுடையார்கோயிலுக்கு பெருமை சேர்க்க நகரின் மையத்தில் அமைந்திருக்கும் ஆத்மநாதர் ஆலயம் விளங்கியது. திருப்பெருந்துறை எனவும் பெயர்ப் பெற்ற இப்புனிதத் தலத்திலிருந்தே சமயக் குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் திருவாசகம் என்னும் பெருநூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினார் எனவும் வரலாறு உள்ளது . புலஸ்தியர் மகரிஷியின் சமாதியுங்கூட இவ்வூரில்தான் அமைந்திருக்கின்றது. ஆன்மீகஞானி இராமலிங்க வள்ளளாரும் இவ்வூரில் வாழ்ந்திருக்கின்றார்.

ஆத்மநாதர் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான மிகச்சிறிய சிலைகள் சிற்பக்கலையினுக்கே பெருமை சேர்ப்பவை. சில அங்குலங்களே உயரமான இச்சிலைகளில், கைநரம்புகள் இழையோடுவதைக்கூட அன்றைய சிற்பிகள் மிகநுணுக்கமாக செதுக்கியிருக்கிறார்கள். இக்கோயிலின் கற்பக்கிருகத்தில் மூலவிக்கிரகம் அமைக்கப்படாததுவும் வியப்புக்குரியதாகும். இங்கிருக்கும் மூலவரை பக்தர்கள் உருவமற்ற பரமாத்மாவாக மட்டுமே நினைந்து வழிபடுவதனால் அவர் ஆத்மாநாதர் என்றே அழைக்கப்படுகிறார்.

குழந்தை முருகேசு சகல இனத்தினரையும், ஏனைய மதங்களையும் மதித்து, இணைக்கும் ஒரு மாமனிதராக எதிர்காலத்தில் மாறுவாரென்பதை காலமும் அன்றே தெரிந்துக் கொண்டது போலும். ஏனெனில் அவரின் பிறப்பு இஸ்லாமிய ரமலான் மாதத்தில் பௌத்த வப் காலத்தில், கிறிஸ்துமஸ் பருவங்களில் அவ்வருடத்தின் தீபாவளிப் பண்டிகைக்கு மூன்று வாரங்களுக்கும் முன்னதாக நிகழ்ந்தது.

முருகேசு மகரிஷிக்கு நான்கு தம்பிமார்களும், மூன்று சகோதரிகளும் இருந்தனர். அவருக்கு நான்குவயது பூர்த்தியானவுடன், அவரோடு இளைய சகோதரன் சக்திவேலுவுக்கும் காதணியணிவிக்கும் வைபவம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. நாட்கள் செல்ல அக்காலக் கட்டத்தில் ஏற்பட்ட சமூகச்சூழல் மாற்றத்தின் பாதிப்பினால் இராமன் காளிமுத்து தனது மனைவி பிள்ளைகளுடன் இலங்கையின் கண்டிச் சீமையை நோக்கிப் புலம்பெயர்ந்தார்.

கண்டியில் குண்டசாலைப் பகுதியில் அமைந்திருந்த பல்லேகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் சுவாமிஜியின் தகப்பனார் தனது குடும்பத்துடன் குடியமர்ந்தார். பல்லேகல்ல அக்காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு சொந்தமான தோட்டமாக இருந்தது. அங்கு கோப்பி, கொக்கோ, தென்னையுடன் ஏலம், கிராம்பு, கறுவா போன்ற வாசனைப்பயிர்களும் விளைவிக்கப்பட்டன.

பல்லேகளைக்கு வந்த சிலவருடங்களுக்குப் பின் சுவாமிஜியின் பெற்றோர் ஐந்து வயது முருகேசுவுடன் ஏனைய தமது பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கண்டியிலிருந்தும் மீண்டும் இடம்பெயர்ந்து நுவரெலியா நகரில் கெலேகால என்னும் கிராமத்தில் குடியேறினர். நமது குருநாதருக்கு வனங்களுடன் பூர்வஜென்மத் தொடர்புகள் நிச்சயமாக இருந்ததெனவே கூறவேண்டும். ஏனெனில் அவர் இலங்கையில் குடியமர்ந்த முதல் இடம் கீழ்க்காடு எனத் தமிழில் அர்த்தந்தரும் பல்லேகல தோட்டம். வளர்ந்த இடம் காட்டுப்பட்டியென பொருள்படும் கெலேகால ஆகும்.

தூயவர் முருகேசு நுவரெலியா நகரிலுள்ள புனிதத் திரித்துவ கல்லூரியில் தலைமையாசிரியர் விஜயரட்ணசிங்கம் என்பவரின் வழிகாட்டலின் கீழ் கல்விபயின்றார்கள். சிறுவயதில் முருகேசு படிப்பில் மிக அக்கறை காட்டியதுடன், சிறந்த கால்பந்தாட்ட வீரராகவும் திகழ்தாரென அவருடைய பால்ய சிநேகிதர்கள் கூறுவர். இயல்பில் அமைதியானவராக இருந்தாலும் கூடவே சாகசச் செயல்களில் ஈடுபாடுள்ளவராகவும் இருந்திருக்கின்றார். அந்நாட்களில் நானுஓயாவிலிருந்து நுவரெலியா ஊடாக இன்றைய இராகலை நகருக்கும் புகையிரத்தில் பிரயாணஞ்செய்ய வசதியிருந்தது. சிறுவன் முருகேசு ஓடும் புகையிரத்தில் பாய்ந்து ஏறவும் சாமர்த்தியமாக குதித்து கீழே இறங்கவும் வல்லவர்.

அவரின் தகப்பனார் நுவரெலியாவில் பிரசித்திப் பெற்ற கிராண்ட் ஓட்டலில் பணிபுரிந்ததுடன் கூடவே கெலாகால கிராமத்தில் பெரிய ள் செய்யும் நேர்த்தியான சிற்பியாகவும் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுப் பண்ணையொன்றையும் நடாத்தி வந்தார். மேலும் அவர் நுவரெலியா கதிரேசன் ஆலய அறங்காவலர்களில் ஒருவராகவும் பதவி வகுத்துள்ளார். சுவாமிஜியின் தாய்மாமன் சிங்கமுத்து கடவுள் சிலைகள் செய்யும் நேர்த்தியான சிற்பியாகவும் இருந்தார்.

சிறுவன் முருகேசுவும் அவரது குடும்பத்தினரைப் போன்றே பசுக்களைப் பராமரித்து வளர்ப்பதில் பிரியமுள்ளவராயிருந்தார்.

சுவாமிஜி அந்நாட்களில் பாடசாலை செல்லும் வழியில் இருந்த நாற்சந்தியொன்றில் சிறு கல்லொன்றை நாட்டி, தனது பள்ளி நண்பர்களுடன சேர்ந்து பூசை செய்து வழிபடுவார். வாரநாட்களை ஒழுங்குப்படுத்தி தனது நண்பர்களையும் கிரமமாக பூசைகளை பொறுப்பேற்கச் செய்வார். தினமும் சாமிக்கு கற்பூரத் தீபமேற்றி வீசுகின்ற நுவரெலியாவின் கடுங்காற்றில் அத்தீபம் அணைந்துவிடாமலிருக்க தனது கைகளாலும் உடலாலும் மறைத்துப் பாதுகாப்பார் என அவருடைய பால்ய நண்பர்கள் இன்றும் பரவசத்துடன் கூறுவார்கள்.

மேலும் தான் வளர்ந்து பெரியவனானதும் இதே நுவரெலியாவில் மக்கள் வியக்கும் மாபெரும் கோயிலொன்றை என்றாவது ஒருநாள் நிர்மாணிப்பேனென்று அச்சிறுவயதிலேயே தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமும் உறுதியுடன் கூறியிருக்கின்றார்.

இளவயதில் சுவாமிஜியின் உடற்தோற்றம் சிறிது வித்தியாசமாக காணப்பட்டது, அவரின் தோற்பட்டை வளைந்து முதுகும் சிறிது கூனலாகவிருந்தது. தினமும் முருகேசு நம்பிக்கை மிகுந்த பக்தியுடன் தன்வீட்டுப் பூஜையறையில் எரியும் விளக்கின் எண்ணையை சுடச்சுட எடுத்து தினமும் தனது முதுகில் பூசிக்கொள்வார். சுவாமிஜியின் உறுதியான விசுவாசம் அற்புதமாக கிரியைசெய்து நாளடைவில் அவருடைய கூனலும் மறைந்து அவர் மிக வனப்பான சிறுவனாக மிக கம்பீரத்துடன் தோற்றமளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்குப்பின் சுவாமிஜி எழுதிய ஏகாக்ர விஞ்ஞானம் என்ற நூலை வாசிக்கும்பொழுது அவருக்கு சிறுவயதிலிருந்தே இவ்வகையான மனோசக்திகள் இயல்பாகவே அமைந்திருந்தனவென அறியலாம்

சுவாமிஜி ஏகாக்ர விஞ்ஞானத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

மனிதர்களுக்கு இருமனங்கள் இருக்கின்றன. ஒனறு வெளிமனம் மற்றது உள்மனம் எனப்படும். வெளிமனம் நமக்கு வேண்டியதை நினைக்கும். உள்மனம் நமது கட்டுப்பாட்டில் இயங்காமல் சுதந்திரமாகவே செயற்படுகின்றது. பெரும்பாலானவர்களுக்கு இந்த உண்மை புரிவதில்லை. ஆனால் இதனை அறிந்திருந்த நம் முன்னோர்கள் உள்மனதையும் தமது கட்டுக்குள் வைத்து தாம் விரும்பியவாறு அதனை இயக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். அதனால் அநேக அற்புத சித்துக்களைச் செய்ததோடு அரியபல வெற்றிகளையும் அடைந்து வந்தார்கள். ஆரம்ப யோகசாதகர்கள் தமது மனதைக் கட்டுப்படுத்தி, பிராணனை வசப்படுத்தி சித்தத்தைப் பலப்படுத்தி ஆன்மாவை வளப்படுத்தி சைதன்ய யோகானுபவம் பெற, ஏகாக்ர விஞ்ஞானம் வழிசமைக்கின்றது.

சமாதிஞானத்தின் ஆரம்பப்படி ஏகாக்ரநிலையாகும். உதாரணமாக உங்கள் குடும்பத்தில் ஒருவர் (பிறர் குடும்பத்தவரில் இதனை பரீட்சிக்கக் கூடாது) பிழைகள் புரிபவராய் இருந்தால் தினமும் அவர் உருவை மனக்கண்ணில் இருத்தி, உறுதியான ஏகாக்ரத்துடன் அவர் எப்படி திருந்த வேண்டுமோ, அப்படியாகவே ஆகவேண்டுமென்று உறுதியாகச் சொல்லிவாருங்கள். நாளடைவில் அவர் உங்கள் விருப்பின்படியே மாறிவிடுவார்.

உங்களுக்கும் உடல் உபாதைகள் ஏதும் இருந்தால், உங்கள் எண்ணவோட்டத்தை பாதிக்கப்பட்ட உறுப்பில் ஏகாக்ரப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகுறைகிறது மறைகிறது என்று உறுதியாகச் சொல்லி வாருங்கள். தற்காலிகமாக வலி மறைந்து விடும். (பின்பு வலியேற்பட்டதன் காரணத்தினையறிந்து தகுந்த சிகிச்சையைச் செய்துகொள்ள மறவாதீர்கள்.)

மற்றும் உங்கள் குடும்பத்தினரில் (மற்றவர்களுக்கல்ல) யாருக்காவது நோயிருந்தால், அதற்கான மருந்து கொடுப்பதன்முன், மருந்துப்புட்டியில் கைவைத்து மனதை ஏகாக்ரப்படுத்தி குணமாகிவிடும் என்று உறுதியாகச் உச்சாடணம்செய்து பின்னர் மருந்தைக் கொடுங்கள். விரைவில் குணமேற்படும்.

எவரிடமாவது உதவிநாடும்போது அல்லது தூரத்திலுள்ள உறவினர் நெடுநாள் உமக்கு கடிதம் எழுதவில்லையானால் கூட சாதனையில் அவரைநினைத்து கடிதம் எழுது என்று உறுதியாகச் சொல்லிவாருங்கள் சிலநாட்களில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

மேற்கூறிய சாதனைகளின்போது பிராணயாமம் செய்தபின் ஏகாக்ரம் செய்தால் மிகப் பலன்கிடைக்கும். இதனால் வாசகர்கள் ஏகாக்ரத்தால் சாதிக்ககூடிய பலவிஷயங்களைத் தாமாகவே ஊகித்தறியலாம்.

ஆரம்பசாதகர்கள் ஏகாக்ரசித்தியை பாவித்து புகழும் பணமும் சம்பாதிக்க எண்ணுவது தவறு. தனக்கும் குடும்பத்தினருக்கும் மாத்திரம் ஏகாக்ரசித்தியால் பலன்களைப் பெற முயற்சிக்கலாம். யோகசாதனைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாதலால் ஏகாக்ரசித்தியுடன் பிரணாயாமம், தியானம் முதலியவைகளயும் செய்வது மிக அவசியமாகும் என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

மகான்களின் இளமைக்கால வாழ்க்கையிலும் நடந்தான வியத்தகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதங்கள் சுவாமிஜியின் வாழ்க்கையிலும் நிகழ்ந்திருக்கின்றன. மிகச்சிறுவயதில் தன் வீட்டருகில் அவர் விளையாடிக் கொண்டிருந்தபோது கம்பீரத் தோற்றமுடைய ஒரு பெரியவர் அவ்விடத்திற்கு வந்தார்.


அம்முதியவர் சிறுவன் முருகேசுவிடம் ஒரு ரூபாயை யாசகமாகக் கேட்டார். சுவாமிகள் என்னிடத்தில் பணம் இல்லையெனக் கூறிவிட்டு விளையாட்டைத் தொடர்ந்திருக்கிறார். எனினும் அவருடைய மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது. அவரால் தொடர்ந்து விளையாட்டில் ஈடுபட முடியவில்லை. வீடுதேடி வந்த சந்நியாசிக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமேவென நினைந்து மீண்டும் தன்வீட்டுக்குள் சென்று இருபதுசத சில்லறை நாணயங்களை மாத்திரம் எடுத்துவந்து அப்பெரியவரிடம் கொடுத்தார். அதனை மகிழ்வுடன் பெற்றுக் கொண்ட பெரியவர் சுவாமிஜியின் தலையைத் தொட்டு, நீ நற்புகழுடன் வாழ்வாய் என வாழ்த்தினார். அவ்வேளையில் சுவாமிஜி தன்னுள் தெய்வீக அதிர்வலைகள் ஏற்படுவதை உணர்ந்தார். உடனே மறுபடியும் வீட்டுக்குள் ஓடி பெரியவர் கேட்டபடி ஒரு ரூபாயை எடுத்துவந்து அப்பெரியவரை தேடியபொழுது அவர் திடீரென மறைந்து போயிருந்தார்.

மேலும் சிறுவன் முருகேசு அவரது பதினோராவது வயதில் நுவரெலியா குதிரைப்பந்தய திடலில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது எதிர்ப்பாராத விதமாக வந்த இன்னொரு முதியவர் முருகேசுவின் பூர்வீகத்தை கூறியிருக்கிறார். வியப்படைந்த முருகேசு அப்பெரியவருக்கு அங்கிருந்த உணவுக்கடையில் ரொட்டி வாங்கிக் கொடுத்திருக்கிறார். பெற்றுக்கொண்ட அம்மகான் சிறுவன் முருகேசுவுக்கு விநாயகக்கவசம் என்னும் சிறுநூல் ஒன்றினை அன்பளிப்பு செய்ததுடன் 'நீ பார்புகழும் உத்தமனாக உயர்வாய் என மனமார வாழ்த்தியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுவாமிஜி அச்சம்பவம் நடப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே தனது ஒன்பதாவது வயதில் அவருடைய சிறிய தந்தையுடன் திருவண்ணாமலை சென்று மகான் ரமணமகரிஷிகளை சந்தித்து அவரின் அருளாசியைப் பெறும் வாய்ப்பையும் அடைந்தார்.



Gayathri Siddhar
Swami Dr. R. K. Murugesu Mahar Shi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்றைய பக்தி நிறைந்த இளைஞர்
இன்று ஆன்மிக ஞானியாக...........





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மகரிஷியின் பெற்றோர்



மகரிஷியின் அன்றைய அனுசரணையாளர்
திருமதி. தம்பையா



உலக ஆன்மீக தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தலைநகரில் தொழிலும் ஆன்மீகப் பணிகளும்

சுவாமி முருகேசு 1947ம் ஆண்டு தன் பதினான்காவது வயதில் நுவரெலியாவை விட்டு தலைநகர் கொழும்புக்கு சென்றார். சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்புடன் விளங்கிய அவர் தனது தாய்தந்தையினர் மற்றும் உடன்பிறப்புகளின் சுபீட்சத்தில் மிகவும் அக்கறைக் கொண்டவராக இருந்தார். பின்னாட்களில் அவருடைய சகோதரர்களின் பிள்ளைகள் அவரைத் தங்கள் சொந்தத் தந்தையாகவே மதித்து "கொழும்பப்பா" என்றே அழைத்து வந்தனர்.

சுவாமிஜி இளம்வயதில் அவர் புரிந்த தொழில்களை மிகநகைச்சுவையுடன் கூறி நினைவுபடுத்திக் கொள்வார். அவற்றில் தேயிலைப்பெட்டி தூக்கியது, கயிற்றுக்கடையில் வேலை செய்தது, புண்ணாக்கு மண்டியில் உதவியாளராகவும் மற்றம் ஓட்டல் சேவகனாய் இருந்ததையும் மறக்காமல் சொல்வார். இப்படி சிற்றூழியம் செய்துவந்த அவர் தனது முயற்சியால் நாளடைவில் குருசாமி என்பவரின் ஆடிட் அலுவலகத்தில் குமாஸ்தாவாக கடமையாற்றினார்.

பின்பு, 1953 ஆண்டில் ஆண்டர்சன் நிறுவனம் எனும் உலகலாவிய விட்டோல்போஸ்டட் கம்பனியின் கிளையில் இணைந்தார். அவருடைய இளவயது படங்களில் சுவாமிஜி தீர்க்கமான நாசியும் முழுமையாக மழித்த முகத்துடன் வெள்ளை ஷேர்ட்டும் நீண்ட காற்சட்டையும் அணிந்து மிகநளினமாக தோற்றமளிப்பார்.

ஆண்டர்சன் நிறுவனத்தில் அவருடன் பணியாற்றியவரும் மூத்த குடும்பஸ்தருமான திரு.அழகனின் மகளான ஜீவராணி அம்மையார் தனது ஐந்தாவது வயது தொடக்கம் , ஐந்து தசாப்தங்களுக்குப் பிறகும் சுவாமிஜியின் பணிகளுக்கு உறுதுணையாக இருந்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நாட்களில் சுவாமிஜியின் நண்பர்களாக இருந்தவர்களில் வடகொழும்பு இந்துமகா சபையின் தலைவராக விளங்கிய கணகரத்தினம் அவர்களும் குறிப்பிடத்தக்கவராவார்.

இக்காலகட்டத்தில் தலைநகரில் பெரும் செல்வாக்குடைய பெண்மணியான திருமதி. தம்பையா என்னும் அம்மையாரின் அறிமுகம் சுவாமிக்கு கிடைத்தது. இப்பெண்மணி இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் பிரிட்டிசாருடன் சட்டவாதம் புரிந்து சாதனைப் படைத்த சேர். பொன்னம்பலம் இராமநாதனின் பேத்தியாராவார். சுவாமிஜியவர்கள் இவ்வம்மையாரின் எஸ்டேட் , கடைகள் மற்றும் காணிகளின் நிர்வாக வேலைகளுக்கு மிகவும் உதவியாக இருந்தார். அவ்வம்மையார் சுவாமிஜியை தனது சொந்த மகனாகவே நேசித்தார். அவரின் வேண்டுகோளின்படி அந்நாட்களில் கொழும்பு சைவமங்கையர் கழக மண்டபத்தில் மன்றத்தின் உருப்பினர்களுக்கு சுவாமிஜி யாகம் நடத்தியதுடன் உபன்னியாசமும் செய்திருக்கிறார்.

கூடவே தனது அலுவலக வேலைக்கு மத்தியிலும் கொழும்பு நகரில் மட்டக்குளிய என்னும் இடத்தில் ஆன்மயோக ஞானசபையை நிறுவி பக்திமார்க்கத்தில் பலரையும் உற்சாகமாக ஈடுபடுத்தினார். சுவாமிஜியின் அருட்காந்தச் சக்தி பலரையும் அவர்பால் ஈர்க்க வழிவகுத்தது. சுவாமிஜி தனது மனிதகாந்தம் என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

மனித வாழ்க்கையில் ஓர் அரிய தத்துவம் "மனித காந்தம்" . இவ்வருளை மனிதன் முறையாக பயன்படுத்தினால் மிக அரியதான பேறுகளை அடைவான்.

ஆனால் தம்மிடம் இப்படியொரு காந்தசக்தியிருக்கிறது என்பதையே பலர் அறிந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்தின் இரகசியங்களையறிய ஆர்வங்காட்டும் மனிதன் தனக்குள் என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள முயல்வதில்லை. அதற்கான சந்தர்ப்பங்கள் வரும்பொழுதும் அவன் அதனைப் பொருட்படுத்துவதில்லை. இதுபற்றி உணர்ந்த சித்தர்கள் மனிதன் தன்னை மறந்து, தேவையற்ற எதையெதையோ அறிவதிலும், பயனற்றவைகளைச் செய்வதிலும் பிறவிப்பயனை வீணாக்குவதனை தங்களுடைய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

மனிதன் அவன்தன், மனம், உடல் இவையிரண்டினதும் செயற்பாடுகளை ஆழ்ந்துகவனித்து தெரிந்துகொண்டாலே பிரபஞ்சரகசியம் முழுவதையுமறிந்து வசப்படுத்தும் பேராற்றலுக்கும் பெரிதான சக்திகளை அடையமுடியும்.

'அண்டத்தில் உள்ளவை அனைத்தும் உன் பிண்டத்திலும் உண்டு என ஆன்றோர் கூறுவர். எங்கோ கண்ணுக்கெட்டாத தொலைவில் இருப்பதாக நாம் கருதும் கடவுள்தானும் மனிதனுள்ளேயே குடியிருக்கின்றார். தனக்குள்ளிருக்கும் தெய்வத்தைக் கண்டு அவரருள் பெறுவதை விடுத்து, மனிதன் கடவுளை எல்லாவிடங்களிலும் தேடியலைகிறான்.

மனிதகாந்தம் நமக்கிடையே இருக்கின்றது என்பதற்கு நல்லதொரு உதாரணம்: நாம் ஒருசிலரை சந்திக்கும் வேளையில் திருப்தியடைகின்றோம். வேறுசிலருடைய சந்திப்பால் சங்கடமடைகிறோம். குறிப்பிட்ட சிலருடன் நெடுநேரம் பேசினாலும் அலுப்புத் தட்டுவதில்லை. வேறொருவருடன் மிகவிரைவில் வார்த்தைகளை முடித்துக்கொள்ள விரும்புகிறோம். ஒருவர் வேண்டுவதை செய்ய உற்சாகமாக முயல்கின்றோம். மற்றவர் கேட்கும் காரியத்தை அசட்டை செய்கின்றோம்.

சிலருடன் நெருங்கிப் பழகுவதில் நமக்கு இன்பம் கிடைக்கிறது. மற்றவர்களுடன் பழகுவதில் வெறுப்புத் தட்டுகிறது. இவ்வேறுபாடுகளுக்கு முக்கியமாக அவர்களின் உடலோ, உடையோ, சொல்லோ, அவர்களைப்பற்றி நாமறிந்து வைத்திருக்கும் செய்திகளோ காரணமாயிருக்க முடியாது. இயல்பாகவே நமக்குள் இருக்கும் மனிதகாந்தசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கொருவர் சேர்ந்தும் வேறுபட்டும் இயங்குவதனால் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த உண்மையினை ஆராய்ந்தறிந்து நமக்குள் பிரவாகிக்கும் இந்த மாபெறும் அருட்சக்தியை நாம் வெளிக்கொணரும் வழிமுறைகளை பயிற்சிகளின் மூலம் சாதகர்களுக்கு புலப்படுத்துவதே மனிதகாந்த வசியத்தின் நோக்கமாகும்.

மகரிஷி முருகேசு தமக்குள் இயல்பாகவே குடிகொண்டிருந்த இத்தெய்வீக மனிதகாந்த சக்தியை மற்றவர்களுக்கும் பகிர்ந்து தீட்சையளிக்க மிகவிரும்பினார். அத்துடன் சுவாமிஜி ஒரு குருவை சரணடைந்து அவர் மூலம் பரமனை அடையும் வழியினை மிகவும் வலியுறுத்துவார்.

மின்சாரமானது உபகரணங்களின் ஊடாக செயற்படுவது போல இறைவனின் அருட்சக்தியும் மனிதவடிவான ஒரு குருவின் மூலமாகவே வெளிப்படுகின்றது.

குருவை சாதாரண மனிதனவுருவாக நினைக்கக்கூடாது. தெய்வீக தரிசனத்தின் முதல் அங்கமாக குருவைத்தான் சீடன் முதலில் காண்கின்றான். பிறகு அந்த குருவே இறைவனாக மறுரூபங்கொண்டு தனது இறைச்சொரூபத்தை சீடனுக்கு காட்டுகிறார். இறைவனும் குருவும் ஒருவரே என்று பகவான் ஸ்ரீ இராமகிருஸ்ணர் கூறியிருக்கிறார்.

ஞானகுருவின் வாய்மொழிகள் அனைத்தும் இறைவனின் சொற்கள். அவர்தம் செயல்கள் அனைத்தும் இறைவனின் கிரியைகள். இறைவன் குருமூர்த்தியாக வரும் போது சீடர்களின் ஆன்மீக நலனுக்கு எது நல்லது என்று நினைக்கின்றாரோ அதனையே செய்வார். (சுவாமி முருகேசு அவர்களும் இதனையே தன்னை சரணடைந்த பக்தர்களுக்குஞ் செய்தார்.)

மேலும் குடும்பஸ்தவர்கள் கடினமான சாதனைகள் செய்யும் முயற்சிகளில் காலவிரயஞ் செய்யாமலும், கோயில் பூஜைகள் என்று மாத்திரம் கிடக்காமல் உழைப்பு, மனிதநேயம், பெற்றோரைப் பேணுதல், உறவினரை உபசரித்து பிறருக்குத் தீங்கிழையாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து காயத்ரி உச்சாடணம் செய்தாலே சகலசித்திகளும் தானே அவர்களை வந்தடையும் என்பார்.

குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே தேவதேவராகிய மஹேஸ்வரன். குருவே சாட்சாத் பரப்பிரம்மம். அவரை நான் வணங்குகின்றேன் எனற சுலோகத்தைக் கூறி கேட்ப்போர் மனதில் ஆணியறைந்தாற்போல் பதியும்படி விளக்கம் கூறுவார்.

குரு கூறுவதை பணிவுடன் காதால் கேட்பது மாத்திரமல்லாது, தனது குருவின் எண்ணங்களை தமது மனம் வாக்கு உடலால் செயற்படுத்துவதே, உண்மையான சீடர்களுக்கான இலக்கணமாக மகரிஷி முருகேசு கருதினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரர்
## காயத்திரி சித்தரின் குருநாதர்

சுவாமிஜி முருகேசு குருபக்தியைப் பற்றி பின்வருமாறு கூறுவார். நீ குருவைத் தேடவேண்டியதில்லை. உன் தேடலில் சத்தியம் இருக்குமாயின் அவரே உன்னைத் தேடிவருவார். யாரொருவருடைய பிரசன்னத்தில் மெய்சிலிர்த்து, பேரன்புமிகுதியால் உன் விழிகளில் கண்ணீர் சொரிகின்றதோ, அவரே உன் குரு என அறிந்துகொள். அவரே உன் வாழ்வின் வழியாகவும் ஜீவனுமாய் இருப்பார் என்பார்.

சுவாமிஜியின் குருபரம்பரை வரலாற்று சிறப்புமிக்கது. பாரெங்கும் பரந்தோடும் கங்கையை தன் சிறுகுடத்தினுள் அடக்கிய குருமுனி என்று அழைக்கப்பட்டவர் அகஸ்த்தியர் சித்தர்களுக்கு எல்லாம் தலைவர். படைப்பாற்றல் மிக்க இமயம்.

இம்மஹரிஷியின் சூட்ச்சும ஆச்சிரமத்தில் வாழ்ந்து ஞானம் பயின்ற மகான் பண்டிட் ஸ்ரீகண்ணையா யோகி. இவரே நமது முருகேசு மகரிஷிக்கு குருவாக வாய்த்தவர்.

கண்ணையா யோகியார் வேற்று மதத்தவரின் உள்ளம் புண்படப் பேசியதில்லை. இந்த தெய்வீக குணம் நமது முருகேசு மகரிஷிகளிடமும் வெகுவாக வேறூன்றி நூற்றுக்கணக்காண பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தவர்களையும் அவர்பால் ஈர்த்தது.

கண்ணையாயோகி உலகுடன் ஒன்றி வாழ்ந்து இறைவனை உணர்ந்தவர். தம்மை அண்டி வந்தோர்க்கும் தெய்வமாக நின்று வழிகாட்டியவர். ஜீவன் முக்தரான இம்மகான் துறவு உள்ளத்தில் அன்றி வெளிவேடத்தில் இல்லை என அடிக்கடி வழியுறுத்திக் கூறுவார்.

வினைப்பயன், இலங்கையில் ஒரு ஆங்கிலேய நிறுவனமொன்றில் அலுவல் புரிந்து வந்த முருகேசு சுவாமிகளை குருநாதரான ஸ்ரீ கண்ணைய யோகீஸ்வரரிடம் தமிழ் நாட்டில் அம்பத்துார் மானசு யோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்றது. சுவாமிஜி காயத்ரி மந்திரத்தை அவரிடம் பயின்று தீட்சை பெற்று யோகீஸ்வரரின் பிரதம சீடராக உலக மக்களால் அங்கீகரிக்கப்பட்டார்.

சுவாமிஜி கண்ணையா யோகியிடம் தனக்கேற்பட்ட முதல் அனுபவத்தை பின்வருமாறு விபரித்துள்ளார். 1957 இல் சென்னையில் என் குருதேவர் கண்ணையா யோகீஸ்வரரிடம் சரணடைந்தேன். முதலில் அவரைக் குருவாக ஏற்றுக்கொள்ள என்மனம் தயங்கியது. தப்பான இடத்திற்கு வந்து விட்டோமோ? என்றும் சந்தேகப்பட்டேன். என் மனதில் அந்தக் காலக்கட்டத்தில் யோகிகளைப் பற்றி வரித்திருந்த படமே வேறு. அவர்கள் ஜடாமுடியும் கமண்டலமும் தரித்திருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவரோ சராசரி குடும்பஸ்தராக மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார்.

ஆனால் என் சந்தேகம் பயமெல்லாம் ஒருநாள் இரவில் நீங்கிவிட்டது. அவருடைய சிறிய வீட்டின் மொட்டை மாடியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். நள்ளிரவு பன்னிரெண்டு மணியிருக்கும். கீழே அநேகர் நடமாடும் சத்தம் கேட்டது. படுக்கையிலிருந்து எழுந்து சென்றேன். கண்ணையா யோகியார் நிஷ்டையில் ஆழ்ந்திருக்க அநேக சித்தர்களும் மகரிஷிகளும் அவரை சூழ்ந்து நின்று நமஸ்கரித்துக் கொண்டிருந்தார்கள். நான் அறைக்குள் சென்றவுடன் சித்தர்கள் மறைந்துவிட நான் கண்ணையா யோகியாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு மன்றாடினேன். அவர் என் சிரசில் கைவைத்து ஆசிர்வதித்தவுடன் என்னுள் ஒரு தெய்வகாந்த சக்தி பாய்ந்து ஊடுருவியது. அந்த இரவிலேயே குருநாதர் மகாயாகம் வளர்த்து காயத்திரி பிரம்ம தீட்சையும் அளித்தார். அக்கணம் முதல் அவர் என் குருவும் நான் அவர் சீடனும் ஆனோம்.

1962ம் ஆண்டு முருகேசு சுவாமிஜியின் இருபத்தொன்பதாவது ஜன்ம தினத்தன்று அவருடைய குருநாதரான ஸ்ரீகண்ணையா யோகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிய வாழ்த்து மடலில் இருவருக்கும் இடையிலிருந்த அன்புணர்வு தெளிவாகின்றது.

அதற்கு ஓராண்டுக்கு முன்னதாக 1961ம் வருடம் ஸ்ரீகண்ணையா யோகியாரை நமது சுவாமிஜி இலங்கைக்கு அழைத்து வந்து கண்டி, நாவலப்பிட்டி. வடக்கே யாழ்ப்பாணம் திருகோணமலை வவுனியா முதலான ஊர்களுக்கு அழைத்துச்சென்று அநேக ஆன்மீகக் கூட்டங்களும் யாகபூஜைகளும் ஏற்பாடுசெய்து நடத்தியுள்ளார்.

தமிழகத்தில் கண்ணையாயோகி ஸ்தாபித்த ஆத்மயோக ஞானசபையின் கிளையொன்றை இலங்கையிலும் அமைத்து தனது குருநாதரை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தினார். காயத்திரி மந்திரமும் யாகபூஜைகளும் முதன்முதலாக சாமான்யர்களையும் சென்றடைய இந்த நிகழ்வுகள் வழிசமைத்தன. இக்காலகட்டங்களில் சுவாமி முருகேசு நெடுங்காலம் இந்தியாவில் தங்கி ஆன்மீக யாத்திரைகளிலும் தியானத்திலும் ஈடுபட்டிருந்ததினால் அவரால் கொழும்பைத் தவிர்ந்த இலங்கையின் ஏனைய ஊர்களுக்கு அடிக்கடி செல்லமுடியாமலிருந்தது.

இக்காரணத்தினால் தோட்டப்பகுதிகளிலும் கிராமங்களிலும் வெளிமாகாண நகரங்களிலும் வாழ்ந்துவந்த அவருடைய உறவினர்களும் நண்பர்களும் அபிமானிகளும் கவலைப்பட்டிருந்தனர். கண்டிப்பிரதேசத்தில் குண்டசாலைப் பகுதிக்கு சுவாமிஜி நெடுநாட்களுக்குப் பிறகு விஜயஞ்செய்து ஒரு சிறிய வைபவத்தில் காயத்திரி யாகம் செய்த அன்றே அப்பகுதியில் சிலருடங்களுக்கும் அதிகமாக நிலவிவந்த கடும்வரட்சி நீங்கி பெரும்மழை பெய்ய ஆரம்பித்த அற்புதத்தை அவருடைய பக்தர் ஒருவர் சிலிர்ப்புடன் பகிர்ந்துகொண்டிருக்கின்றார்.

குருநாதர் ஆத்மீக பயிற்சி பெற்ற ஆச்சிரமங்களில் நீலகிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச்சாரலில் அமைந்திருந்த அகஸ்திய மாமகரிஷியின் சூட்சும ஆசிரமம், இமயத்தில் அருளொளி பரப்பிநின்ற சுவாமி சிவானந்தரின் தலம், ஸ்ரீஞானேந்திரரின் ஆன்மீக ஆசிரமம் என்பனவும் அடங்கும்.

ஸ்ரீகண்ணையா யோகீஷ்வரரின் சீடராக இருந்த போது சுவாமிஜி யோகவித்யா, பரிணாம பூர்த்திசாதனை, காயத்ரி குப்தவிஞ்ஞானம், சித்தயோகபாடம், மந்திர, தந்திர, யந்திர, வைத்திய, இரசவாத வித்தைகளையும் மற்றும் பல்வேறு உயர்ஞான இரகசியங்களையும் மிகச்சிரத்தையுடன் கற்றுத்தேர்ந்தார்.


சுவாமிஜி அவர்கள் சிறுபிள்ளைகளைப் போன்று தனது பழைய அனுபவங்களை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வார். அவர் சீடனாக இருந்தபொழுது நடந்த ஒரு சம்பவத்தை சொன்னார். அது ஒரு அமாவாசை தினம். இரவுப்பொழுது. ஒரு அடர்ந்த காடு. அந்தக்காட்டில் கண்ணையா யோகியவர்கள் சீடர் முருகேசு உட்பட தனது அனைத்து சீடர்களுடனும் நடந்துக் கொண்டிருந்தார். அனைவரும் குரு கண்ணையா யோகியின் அருகிலேயே அடியெடுத்து வைத்து நடந்தனர். அவ்வேளை குருநாதரின் இடப்புறமாக நடந்துக் கொண்டிருந்த சீடர் முருகேசுவின் காதில் புலியொன்றின் உறுமல் கேட்டது. தொலைவில் அதன் கண்கள் தெரிவது போல் ஒரு பிரமை. உடனே சுவாமி முருகேசு எவருக்கும் தெரியாமல் தனது குருநாதரின் வலப்புறத்துக்கு வந்துவிட்டார்.

கண்ணையா யோகி, முருகேசு! இதுவா குருபக்தி ? குருநாதரை முதலில் புலியடிக்கட்டும் நாம் தப்பித்துக்கொள்வோம் என்று நினைத்துத்தானே எனது வலப்புறமாய் வந்திருக்கின்றாய், என நகைச்சுவையுடன் வினவினார்கள். தமது கோழைத்தனத்தை நினைந்து வெட்கமும் வேதனையும் அடைந்த நம் சுவாமிஜி பின் தனது குருதேவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்களாம். சற்றுநேரம் இருளில் தனது சீடர்களைத் தவிக்கவிட்ட கண்ணையா யோகீஸ்வரரர் அவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை தெரியவில்லையா என வினாவினார். உடனே அந்த காரிருள் நீங்கி அவ்விடம் முழுதும் நண்பகற்போல் வெளிச்சமாயிற்று. கண்ணையாயோகீஸ்வரர் தான் ஜீவசமாதியடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக தமது பிரதமசீடரான முருகேசுசுவாமிகளை தம்மருகில் அழைத்து , என் பணியை நீதான் தொடர வேண்டும். என்னுடைய குருதேவர் அகஸ்தியரின் நேர்முக ஆசியைப்பெற்ற நீ உலகம்புகழும் ஆன்மீக உத்தமனாய் வாழ்வாய். நீ காயத்திரிசித்தர் என அழைக்கப்படுவாய் என அருள்வாக்கு உரைத்தருளினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. காயத்திரி சித்தரின்
# கொல்லிமலை அனுபவங்கள்

தலைநகர் கொழும்பில் தொழில்புரிந்த நாட்களில் சுவாமிஜி தனது ஆன்மீக தேடலையும் தொடர அடிக்கடி இந்தியப் பயணங்களை மேற்கொண்டு வந்தார்.

முருகேசு மகரிஷி எவரும் எளிதில் செல்லமுடியாத காடு மலைகளில் தங்கியும் பல யோகிகளின் சமாதிகளின் முன் அமர்ந்து தியானஞ் செய்தும் அம் மகான்களின் அருட்சக்தியினால் பூரணத்துவம் பெற்றிருந்தார்கள். தனது இறுதிநாட்களில் நோய்வாய்பட்டதற்கு, முன்னரைப்போல் அடிக்கடி மகான்கள் சூட்சுமமாக வாசஞ்செய்யும் இடங்களுக்கு சென்று அவர்களால் மீள்சக்தியூட்டப்பட தவறியதும் ஒரு காரணமென கூறியிருக்கின்றார்.

குருநாதர் முருகேசு மகரிஷி தரிசித்த தலங்களில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், பழனி, திருச்செந்தூர் முதலாக திருப்பரங்குன்றம், சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, ஆகியவற்றுடன் திருவேங்கடம், சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சி, ஸ்ரீரங்கம், திருப்பதி மட்டுமல்லாது , வடஇந்தியாவில் கேதார்நாத், பத்ரிநாத், காசி, ஹரித்துவார் ரிஷிகேஷம் முதலிய திருத்தலங்களும் குறிப்பிடத்தக்கவைகள்.

அந்நாட்களில் அவர் அடிக்கடி சென்று தங்கி தியானஞ் செய்த இடங்களில் தமிழ்நாட்டின் கொல்லிமலைக் குன்றுகள் விஷேடமாக அடங்கும். இங்கு மகாசித்தர் கோரக்நாதர் வாழ்ந்தார் எனவும் கூறுகின்றார்கள். ஆயிரத்தெட்டு நோய்தீர்க்கும் அபூர்வ மருத்துவ மூலிகைகளை தேடிக்கண்டறிந்து அவற்றிலிருந்து மருந்துகள் தயாரிக்கும் விதத்தையும் கோரக்கர் சுவடிகளில் எழுதிவைத்துள்ளார். அந்த சித்த வைத்தியமுறைகளில் மனோவசிய மூலிகைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கியிருப்பதுதான் மிகவிஷேசமாகும். இம்மலைக்குன்றுகளுக்கு வாகனமூலமாக செல்லவேண்டுமானால் எழுபதுக்கும் அதிகமான 'கொண்டை ஊசி "வளைவுகளை தாண்டிச் செல்லவேண்டும். இங்கிருக்கும் ஆகாசகங்கை நீர்வீழ்ச்சியில் குளித்தால் அநேக நோய்கள் குணமாகும். இந்த அருவியின் அருகிலிருந்து கீழே இராசிபுரம் சிவன்கோயிலுக்குப் போக இரகசிய சுரங்க வழியருப்பதாகவும் சொல்கிறார்கள்.

கொல்லிமலைக் குன்றுகளின் காவற்தெய்வமான கொல்லிப்பாவையை 'எட்டுக்கை அம்மன்" என்ற பெயரில் வழிப்படுபவார்கள். இம்மழைச்சாரலில் அமைந்திருக்கும் வனப்பகுதிகளில் தவத்தில் ஈடுபட்டிருக்கும் முனிவர்களை துன்புறுத்த முற்படும் தீயவர்களையும் அசுத்த ஆவிகளையும் எட்டுக்கை அம்மன் வதஞ்செய்து யோகிகளைப் பாதுகாப்பதாகவும் நம்பப்படுகிறது. எட்டுக்கை அம்மனின் முகத்தில் தவழும் புன்னகையும் இப்பகுதிவாழ் மக்களின் கர்ணபரம்பரைக் கதைகளில் மிக சுவாரஸ்யமாக விபரிக்கப்பட்டுள்ளது. அவளுடைய புன்னகையில் மயங்கியே அசுரர்கள் யோகிகளின் தவத்தை கலைக்காமல் சென்றார்கள் என்றும் கூறுவார்கள்.

கொல்லிமலைப் பாவையைப் போன்றே சப்தகன்னிகைளுக்கும் இவ்வனம் உறைவிடமாக விளங்குகின்றது. சப்தகன்னிகைகள் இசைக்கும் பாடல்களின் ஓசைகள் தங்கள் செவிகளில் அடிக்கடி ஒலித்த அனுபவங்ளை இன்றும் அநேகர் சொல்லி வருகின்றனர்.

கொல்லிமலைப் பிரதேசங்களை சில செவிவழிக் கதைகள் 'சாவின் மலைகள்' எனவும் குறிப்பிடுகின்றன.

எனினும் பல அறிஞர்கள் கொல்லிமலைக்காட்டில் காணப்படும் கிடைத்தற்கரிய மருத்துவ மூலிகைகள் எப்பேர்ப்பட்ட கடுமையான நோய்களைக்கூட குணமாக்கிவிடும் தன்மைக் கொண்டவையாதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குன்றுகள் 'நோய்களைக் கொல்லும் மலைகள்' என்றே அழைக்கப்படுகிறது என்றும் உரைக்கின்றனர்.

இக்கொல்லிமலையில் தனது தலயாத்திரையின்போது நடந்த இன்னுமொரு வியப்பூட்டும் சம்பவத்தை முருகேசு மகரிஷியவர்கள் கூறியிருக்கிறார். ஒருமுறை அவர் தமிழகத்தில் ஸ்ரீரங்கநாதர் கோயிலுக்கு வழிபட சென்றார். அப்பகுதியில் மகான் இராமானுஜரின் சமாதியின் முன்னமர்ந்து தியானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளையில் அவரது சிறுவயதில் நுவரெலியாவில் வீட்டருகே வந்து யாசகமாக ஒற்றை ரூபாய் கேட்ட அதே ஆன்மீகப் பெரியார் மறுபடியும் எங்கிருந்தோ அற்பதமாக அவ்விடத்தில் தோன்றியிருக்கின்றார்.

அவருடன் மகிழ்வுடன் அளவளாவிய முருகேசு அம்மகானின் அழைப்பின்பேரில் அவருடன் ஆலயத்திலிருந்து நீண்டதொருப் பயணஞ்செய்து கொல்லிமலைத் தொடரில் ஒரு வனத்தை வந்தடைந்தார்.

ஆனால் பயணத்தின் முடிவில் துணையாக வந்த அப்பெரியவர் திடீரென்று மறைந்து விட்டார்.

தனித்து விடப்பட்ட வாலிபர் முருகேசுவைக் கண்ட அங்குவாழும் காட்டுவாசிகள் சூழ்ந்து பிடித்து மரமொன்றில் கொடிகளால் இறுகக் கட்டிவைத்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்றனர். சுவாமிஜி தன்னை தனிமையில் கைவிட்ட அப்பெரியாரை திட்டியவாறே கட்டுகளை அவிழ்க்க பிரயத்தனஞ் செய்துகொண்டிருந்தார். அவ்வேளையில் மறுபடியும் அதேமுதியவர் தோன்றி சுவாமியின் இடதுகையின் நடுவிரலைப் பிடித்தார். உடனே சுவாமிஜிக்கு சுயநினைவு அற்றுப்போயிற்று. அவர் மறுபடியும் கண்விழித்த வேளையில் அவருடைய கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சுவாமிஜி மறுபடியும் வெகுதூரம் காட்டுக்குள் அலைந்து இறுதியில் ஒரு விநோதமான இடத்தை அடைந்தார். அவர் சேர்ந்தவிடம் ஒரு ஆச்சிரமம் . அந்தவிடத்தில் அநேக யோகிகளும் முனிவர்களும் தியானத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அந்த தெய்வ மனிதர்களில் இந்தியர்கள் மட்டுமல்லாது ஐரோப்பிய மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த யோகிகளும் காணப்பட்டனர். அவர்கள் மத்தியில் இருந்த அவ்வாச்சிரமத்தின் பிரதமரிஷி நமது முருகேசு சுவாமிகளின் சிரத்தில் கைத்தொட்டு ஆசீர்வாதம் செய்தார். மேலும் அந்த முனிவர் நமது சுவாமிஜியிடம் நீ வருங்காலத்தில் காயத்திரிசித்தர் எனப் பெயர் பெறுவாய் என தீர்க்கதரிசனமும் உரைத்தார்,

அந்த தலைமை ரிஷிகள் சூட்சுமவுலகில் இன்றும் உயிர்வாழும் அகஸ்திய மாமுனிவரே என சுவாமிஜியின் ஆன்மீகக் குருவான கண்ணையாயோகி அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் அவருக்கு தெளிவுப்படுத்தினார்.

மகரிஷி முருகேசு தனது "சூட்சும விஞ்ஞானம் " எனும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.:

ஸ்தூலப் பொருட்களெல்லாம் சூட்சுமப் பொருட்களிலிருந்தும்: ஸ்தூல சக்திகளெல்லாம் சூட்சும சக்திகளிலிருந்தும் ஸ்தூல கர்மங்களெல்லாம் சூட்சும கர்மங்களிலிருந்து தோன்றுகின்றன. மனிதன் மட்டும் இந்த இயற்கை நியதிக்கு மாறுபட்டிருக்க முடியுமா? ஒரு பொருளை அணுக்களாகவும் அணுக்களை மின்னிகளாகவும் மின்னிகளை ஆகாய பருக்கைகளாகவும், இப்படியே மூல இயற்கை நிலைவரையில் பிரிக்கக் கூடியது போல, மனிதனையும் அவன் இயற்கை நிலைவரை பரிணமிக்கச் செய்ய முடியுமல்லவா?

முதலில் மனிதனை சிறிது ஆராய்வோம். இந்த விடயத்தில் மிக நீண்ட விளக்கங்களுக்கு நாம் போக வேண்டாம். நெடுங்காலமாய் மனிதனைப் பற்றிச் சொல்லப்பட்டுவரும் உடல், மனம், ஆன்மா என்ற பிரிவை மட்டும் இப்போதைக்கு எடுத்துக் கொள்வோம். மனிதவுடலும் ஏனைய சடப்பொருளைப் போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுக்களாலானது. அது அணுக்களாகச் சிதைந்து விடும் என்பதையும் நாமறிவோம். மனித உடலும், சடப்பொருட்களும் அமைப்பில் வேறன்றி அடிப்டையில் வேறானதல்ல.

மனதைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும் இத்திரிபு பரிணாமவாதத்தை பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பர். ஆனால் அவர்களும் ஆழ்ந்து சிந்தனை செய்தால் ஒப்புக்கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

தனிமனிதனின் மனமும், ஆன்மாவும் எங்கிருந்து வந்தன? மனிதனின் உடல் பௌதிகப் பொருள்களின் மூலமான ப்ரக்ருதியால் ஆனதுபோல் அவன் மனமும் பிரபஞ்ச மனப்பொருளால் (மஹத்) ஆகியிருக்க வேண்டும். இதே போல் அவன் ஆன்மாவும் பிரபஞ்ச மூல ஆன்மாவான பரமான்மாவின் அம்சமாக ஆகியிருக்க வேண்டும். மகரிஷிகளும். யோகிகளும் இந்த உண்மையை அன்றே தெரிந்திருந்தகள். அதனாலேயே அவர்கள் பிண்டத்திலுள்ளதெல்லாம் அண்டத்திலுள்ளவையே என்று கூறிவந்தார்கள்.

மேற்சொன்ன உண்மையைச் சற்று விவரித்தால், பிரபஞ்சத்தில் நம் பூமி, சந்திர, சூரியயாதி கிரகங்கள் பௌதிக நிலையில் இருப்பதுபோல், சூட்சுமப் பொருளாலான சூட்சுமக் கோள்களும், அவைகளின் சூட்சும சரீரத்துடன் வாழும் உயிர்களும் இருக்கத்தான் வேண்டும். பௌதிகக் கோளங்களில் உயிர்கள் பௌதிக உடலாகக் கொண்டிருக்க வேண்டும். உண்மையை அறிந்தவர்கள் பிரபஞ்சத்தில் ஏழு நிலைகளில் பொருட்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அணுக்களையே ஏழு உலகங்கள் எனச் சொல்கிறோம்.

இந்த உண்மையை முன் சொன்னதுடன் ஒப்பிட்டால் மனிதன் தன்னில் இந்த ஏழு நிலைப் பொருட்களையும் கொண்டிருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் மனிதன் இப்பொது தன் பௌதிகத்தை மட்டும் உணர்பவனாய் இருந்து வருகிறான். ஆனால் அவன் அறிய முடியாத நிலையில் இயக்க முடியாத நிலையில் அவனின் ஆறு நிலை சூட்சும பொருட்கள் கவசங்களாக இருக்கின்றன.

'மனிதன் தன் உணர்வை பௌதிகத்தில் இருத்தி பௌதிக உலகை அறிவது போலவே மற்ற சூட்சும உடல்களில் இருத்தி சூட்சும உலகங்களை காண முடியும். இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபிக்க அவர்கள் கனவு நிலையைக் காட்டுகிறார்கள். கனவில் ஒருவன் பலவற்றையும் காண்கிறான். அபபோது அவன் தான் காண்பது உண்மையில் பௌதிகப் பிரபஞ்சப் பொருட்களையல்ல என்று அறிவதில்லை. தான் உண்மையாகவே விழிப்பு நிலையில் பௌதிகத்தைக் காண்பதாகவே கருதுகிறான். 'கனவில் காட்சிகள் பொய்' என்று சொல்வதானாலும் 'பொய்யோ, மெய்யோ கண்டது உண்மை' என்பதை யாறும் மறுக்க முடியாது. ஏனென்றால் கனவு கண்டவன் தான் கண்ட காட்சிகளை நினைவில் கண்டவன் சொல்லக் கூடியதைப் போலவே சொல்ல முடியும். காகிதத்தில் வரைந்தும் விளக்க முடியும். அவன் உண்மையாகவே எதையும் பாத்திராவிட்டால் எப்படி அதைப்பற்றித் தெளிவாக விளக்க முடியும்.

குருதேவர் முருகேசு அவர்கள் தனது ஆக்கங்களில் எழுதியது போன்றே அநேக இடங்களில் ஒரேசமயத்தில் சூட்சுமமாக நடமாடியிருப்பதற்கு அவருடைய பக்தர்கள் சாட்சி பகர்ந்துள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. ஆந்திரமாநிலத்தில் குருதேவரின் அனுபவங்கள்

சுவாமிஜியின் ஆன்மீக வளர்ச்சிக்கு நேரில் ஆசிகள் அளித்தவர்களில் ஆந்திரப் பிரதேசத்தின் சித்தர் பாலயோகேஸ்வரரும் ஒருவராவார்

சுவாமிஜிக்கு அப்போது இருபத்தைந்து வயதிருக்கும். ஒருநாள் குரு கண்ணையாயோகி அவரிடம் ஆந்திர மாநிலத்தில் இருக்கும் ஒரு மகானின் முகவரியைக் கொடுத்து அவரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுவருமாறு பணித்தார்.

முகவரியில் உள்ள இடம் ஆந்திர மாநிலத்தில் சனச்சந்தடியற்ற ஒரு சிறிய கிராமமாகும். சுவாமிஜி அந்த கிராமத்தை நோக்கி புகைவண்டியில் பயணமானார். பயணமுடிவில் புகையிரதத்தை விட்டிறங்கும் பொழுது பின்னிரவு இரண்டுமணியிருக்கும். புகையிரத நிலையம் கடும் இருளில் மூழ்கியிருந்தது. சுவாமிஜி செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் தூரத்தில் ஒரு வெளிச்சம் அடிக்கடி தோன்றி மறைவதை அவதானித்தார். அவ்வெளிச்சத்தில் ஒரு ஒற்றையடிப்பாதை தென்பட அதன்வழியே சுவாமிகள் நடக்க தொடங்கினார்.

சற்றுத் தூரம் நடந்தவுடன் தூரத்திலிருந்து ஒலித்த ராம்! ராம்! என்ற மந்திரசப்தங்கள் அவருடைய செவியில் விழுந்தன. நடையைத் தொடர்ந்த சுவாமிஜி தொலைவில் ஒரு மலையுச்சியிலிருந்தே அவ்வெளிச்சமும், சப்தமும் வருவதை அறிந்தார். விடாப்பிடியாக வெளிச்சத்தை நோக்கி நடந்து அவ்விடத்தை அடைந்தவேளையில் பொழுதும் நன்றாக விடிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வந்தடைந்த இடம் ஒரு பர்ணசாலையாகும். அங்கு ஒரு மகான் பத்மாசனத்தில் அமர்ந்து ராமநாமத்தை ஆழ்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அம்மகான் கண்விழித்து குடிலின் வாயிலில் களைப்புமிகுதியால் பரிதாபத்தோற்றத்துடன் நின்றுகொண்டிருந்த நம் முருகேசு சுவாமிகளைக் கவனித்தார். சுவாமிகள் தன்னிடம் குருநாதர் கொடுத்திருந்த முகவரியை ஆந்திரமொழி பேசுபவரான அம்மகானிடம் காட்டி தாம் வந்த காரணத்தை ஆங்கிலத்தில் விளக்கினார்.

அப்பெருமகன் சுவாமிஜி போகவேண்டிய இடத்திற்கு மேலும் சற்றுத் தொலைவு செல்ல வேண்டும் எனக்கூறினார். அத்துடன் முதலில் குளித்துவிட்டு தனது குடிலில் காலை உணவருந்தவும் அனுதாபம் கலந்த அன்புடன் அழைத்தார். அதன்படி சுவாமிஜி குளித்து பின் தரையில் சாப்பிட அமர்ந்தவுடன், குடிலுக்குள்ளிருந்து வெளிவந்த ஒரு அழகியப் பெண்மணி தன் கையால் நமது குருநாதர் முருகேசுவுக்கு சுவைதரும் உணவினைப் பரிமாறிவிட்டு மீண்டும் உள்ளே சென்றார். அம் மங்கையின் தோற்றம் பக்தியூட்டும் ஒரு தெய்வீக அழகுடன் விளங்கியது.

சுவாமிஜி மகிழ்வுடன் வயிறார உணவருந்தி முடித்தார். பின்பு தன்னை உபசரித்த அப்பெண்மணிக்கு நன்றிகூறி விடைப்பெற நினைந்தார். தன் விருப்பத்தை அம்மகானிடம் தயக்கத்துடன் கூற அவரோ வியப்படைந்து, சுவாமிஜியைக் கட்டியணைத்து கண்ணீர் சொரிந்தார். நடப்பதொன்றும் புரியாமல் விழித்த நம் சுவாமிஜியிடம் அவர் " தங்களுக்கு உணவு பரிமாறியவர் ஸ்ரீராமரின் தேவியார் சாட்சாத் சீதாப்பிராட்டியாரே எனவும் , அத்தெய்வமகள் என் கண்களுக்கு மட்டுந்தான் புலனாகிறார் என இதுவரையும் இறுமாந்திருந்தேன். ஆனால் இன்று உங்கள் கண்களுக்கும் அந்த பெண்தெய்வம் தென்பட்டுவிட்டார். நீங்களும் ஒரு மாபெரும் தவஞானி என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை அறியாமலிருந்தேன். இப்பொழுது தெரிந்து ஆனந்தக் கண்ணீர் விட்டேன் எனக்கூறினார். நம் சுவாமிஜி தனக்குக் கிடைத்த பெரும் பிராப்தத்தை எண்ணி மிகமகிழ்வுடன் மீண்டும் பயணத்தைத் தொடர்டந்தார்.

நமது குருதேவர் சிறுவயதியதிலிருந்தே சுறுசுறுப்பும் உற்சாகமும் நிறைந்தவராக காணப்பட்டிருக்கின்றார். பூஜை, யாகம், சமூகவேலைகள், பிரயாணங்கள் என அவருடைய வாழ்க்கை செயல்களால் நிரம்பியிருந்தது. எனினும் தொடர்ந்து நூல்களை வாசித்து தனது ஆன்மஞானத்தை வளர்த்துக் கொள்வதை பழக்கமாகக் கொண்டிருந்தார்.

இத்தனை கடமைகளுக்கு மத்தியிலும் குருதேவர் தமது எழுதும் பணிகளையும் மறவாமல் செய்து வந்தார். மகரிஷி முருகேசுவை நேரில் அறியாதவர்களுக்கு அவர் படைத்த நூல்களின் மூலமாகவே இன்றும் பேசிவருகின்றார்.

ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தமும் நமது குருதேவரின் மனதில் ஆழப்பதிந்த நூலாகும். பஜகோவிந்தத்திற்கு விளக்கவுரையெழுதிய பொழுது பின்வருமாறு தொடங்கியிருக்கிறார்.

ஆன்ம ஞானம் வளர்ந்த ஆசான் வாழி!, மாயத்தைச் சிதைத்துக் காட்டிய சங்கரன் வாழி! ,அவன் பாடிய பாட்டின் அமுதப் பொருளைத்தவத் தமிழில் சொல்லச் சிரியேனுக்கு,மொழி தந்த தாய் வாழி!

வயலில் சிறு வாய்க்காலைத் தாண்டுவது போல் பெரும் மாயக் கடலைத் தாண்டினார் ஸ்ரீ சங்கரர். பக்தி மார்க்கம் வேறு ஞான மார்க்கம் வேறு என்று பக்குவமடையாத சிலர் பேசுவதுண்டு. எடுத்து விவரிக்கும் விடயத்தைத் தனிப்படுத்திக் குறிப்பதற்காக இதைப் போன்ற சொற்றொடர்களைப் பண்டிதர்கள் ஆங்காங்கு பிரயோகப்படுத்துவார்கள். அதனால் நாம் குழப்பிக்கொண்டு பொருளைத் தவறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரலாகாது. அறிவு நன்றாக முற்றி இதயத்தில் அது ஞானமாகும். அந்த ஞானமானது வாழ்க்கையுடன் கலந்து ஒன்றாகச் சென்று செயலுருவமடைந்தால் அதுவே பக்தியாகும். முற்றிய அறிவு பக்தி என்று சொல்லப்படும். நன்றாகப் பதிந்து பக்தியாக உருக்கொள்ளாத அறிவு பயன்படாத ஒரு பண்டம். பொன் வேறு பித்தளை வேறு என்பதைப் போல் ஞானம் என்பது ஒரு தனி மார்க்கம் பக்தி என்பது வேறொரு தனி மார்க்கம் என்று எண்ணுவதும், பேசுவதும் அறியாமை. புலன்களை அடக்கினால் அன்றி, அடைந்த அறிவு முற்றி இதயத்தில் பதியாது. ஞானம் தோன்றாது. புலன்களின் இயற்கை வேகத்தை எப்படி அடக்கி ஆள்வது? மோகத்தையும் பற்றுகளையும் நீக்கினாலொழிய உள்ளத்தை திருத்த முடியாது.

ஒரு பற்றானது அடியோடு தீர்ந்துபோய் அதினின்று மனம் விடுதலையடைய வேண்டுமானால் மனதை சர்வேசுவரன் பால் செலுத்த வேண்டும். புலன்களை அடக்க வேண்டுமென்கிற எண்ணம் உண்மையில் சித்தியடைய வேண்டுமானால் பக்தியின்றி நிறை வேற்றவே முடியாது என்பதை உணரவேண்டும். புலன்களை அடக்க முயற்சி செய்த அனைவருடைய அநுபவமும் இதுவாகும்.

முக்திநெறி யறியாத மூர்க்கரோடு முயல்வேனைப் பக்தி நெறி அறிவித்து என்று பாடினார் மாணிக்கவாசக சுவாமிகள் மூர்க்கர் என்றால் மெய்ஞானத்துக்குத் தடையாக உள்ளத்துள் நிற்கும் அகங்காரமும், ஆசைகளும், பற்றுதலும். அவற்றை விட வேறுயாரோ தீய மூர்க்கர்? ஆசை மனம் செய்வது போல் எளிதாக ஞான சமுத்திரத்தை அள்ளி குடித்த ஆதி சங்கராச்சாரியாரே பக்தியை வளர்க்க வேண்டிய பாட்டுகளை பாடினார் என்றால் அதுவே போதும். புக்தியும் ஞனமும் ஒன்றே என்பதற்கு வேறு சான்று வேண்டியதில்லை. பல வேதாந்த பாடல்களை எழுதிய ஸ்ரீ சங்கரர், விடயம் அவ்வளவையும் வெகு சுருக்கமாக பஜகோவிந்த பாட்டினில் அடக்கி, பக்தியும் ஞானமும் ஒன்றாகக் கூடிய பேருண்மைப் பொருளுக்கு எதுகையும், சந்தமும் கூட்டி. வெகு இனிய வடிவம் தந்து பாடியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜகோவிந்தம் பாட்டை தமிழர் கேட்டிருக்கிறார்கள். புதிதல்ல இங்கும் அங்குமாக எடுத்துபாடுவதும் உண்டு. முழுவதையும் கிரமமாக படித்தறிவது நன்று. முப்பத்தொரு பாடல்களையும் நான் படித்தவுடன் அதை நானும் சொல்ல வேண்டும் என்கிற ஆசை மனதில் உதித்தது. இதுவும் ஒரு மோகமே என்பதை அறிவேன். ஆயினும் ஆசையைத் தீர்த்துக் கொள்கிறேன். பெரியோர்கள் மன்னிக்க வேண்டும்.

மனிதனை மயக்கும் மோகங்களில் கல்விச் செருக்கும் ஒன்று. சுகபோகத்துக்கும் பணத்துக்கும் மக்கள் ஆசைப் பட்டுத் துன்பமடைவது யாவரும் அறிந்த விடயம். அவற்றைப் போலவே கல்வி கற்பதிலடையும் புகழாசையும் ஒரு மோகம் என்கிறார் சங்கரர். மரணம் வந்து எதிரே நிற்கும் வரையில் நூல்களைப் படிப்பதிலேயே வாழ் நாட்களைச் செலவழித்து பக்தி செய்யாமல் கெட்டுப் போக வேண்டாம் என்கிறார். பல மோகங்களுள் கல்வி மோகத்துக்கு முதல் பாட்டிலேயே ஆச்சாரியர் இடம் வைத்தார்.

பாணினி இலக்கணச் சூத்திரங்களைக் குறிக்கும் 'யமன் முன்னிலையில் பாணினி சூத்திரங்களை ஒப்புவிக்கப் போகிறாயா? என்று பரிகாசமாகக் கேட்கிறார். ஈசுவர பக்தியில்லாமல் எவ்வளவு பாண்டித்யம் பெற்றாலும் பயனில்லை என்று படித்தவர்களுக்கு அழுத்திச் சொல்லுவதற்காகப் பாணினி சூத்திரங்களைப் பற்றிச் சொன்னதில் பக்தி செய்யாமல் கற்கும் எல்லாக் கல்விகளும் அடங்கும்.

பகவானை மறந்துவிட்டு வெறும் பாண்டித்தியத்துக்கும், அதனால் அடையக்கூடிய புகழுக்கும் ஆசைப்பட வேண்டாம் என்று முதல் பாட்டில் எச்சரித்து விட்டு அடுத்தபடி பணம் சேர்க்கும் மோகத்தைப் பற்றி ஸ்ரீ சங்கரர் சொல்லுகிறார்.

பணம் பணம் என்னும் ஆசை எண்ணிறந்த ஜனங்களுக்கு அளவற்ற துக்கம் உண்டாக்கி விடுகிறதை அனைவரும் கண்டாலும் கண்டதிலிருந்து மக்கள் அறிவு அடைவதில்லை.

புத்தியை ஏமாற்றும் இந்த அழகெல்லாம் உண்மையில் என்ன வென்பதை அடிக்கடி சிந்தனை செய்து மனதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார். இறைச்சியும் நிணமும் தவிர வேறென்ன? பொருள் இன்ன தென்று தெரிந்த பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவடிவத்தைக் கண்டு உண்மையை மறந்து விடக் கூடாதல்லவா? மனதில் உறுதியும் அறிவும் இருந்தால் கண்ணைப் பற்றிக் கவலையில்லை. அந்த உறுதி இல்லாமலிருக்க கண்ணை எதேச்சையாய் இங்குமங்கும் நோக்கவிட்டால் மோசம் போவோம்.

புலன்களை அடக்கப் பயில வேண்டும். இதைப் பயின்ற பின் உள்ளத்தில் சுதந்திரம் அடைவோம். அதன் மேல் சாந்தம் உண்டாகும். ஆசையும் மோகமும் மகிழ்ச்சி போலத் தோற்றம் கொண்ட துக்கமேயாகும்.

புலன்களின் வேகத்தை அடக்கி ஆபாசமில்லாமல் மனம் சாந்த நிலையில் நின்று, அதன் மேல் உண்டாகும் மகிழ்ச்சியே நிலையாக நிற்கும் ஆனந்தம். அதை அடைய வேண்டுமானால் முதலில் கண்களை அடக்கி ஆள வேண்டும். இவன் ஞானி, அவன் மகாத்மா என்று புகழ் பெறுவதற்கல்ல. ஒருவனுடைய உள்ளத்தின் அமைதிக்கு இது இன்றியமையாத சாதனம்.

படிப்பு மோகம், பண மோகம், பெண் மோகம், இம் மூன்றும் மனிதனை மோசம் செய்யும் என்றும் சொல்லிய பிறகு பொதுவாக வாழ்க்கையின் தன்மையை நான்காவது பாட்டில் சொல்லுகிறார். நீரின் மேல் மிதக்கும் தாமரை இலையை நம்பி அதன்மேல் ஒரு நீர்த்துளி தங்குகிறது. அதன் நிலைமையே வாழ்க்கையின் சுகம் என்கிறார். தாமரை இலையின் மேலுள்ள நீர்த் துளியானது துள்ளி யதிர்ந்து நிலையற்று அலைவது போல் மனிதன் உள்ளம் அலைகிறது. சபலமே அதன் நிரந்தரம். நோயால் உடல் பீடிக்கப்பட்டு பற்றுக்களால் உள்ளமும் பீடிக்கப்பட்டு மனித வாழ்க்கை எல்லா வகையிலும் துயரத்தில் மூழ்கி நிற்கிறது.

உலகத்தில் நாம் அடையும் எந்த விதமான பொருளும் துக்கத்தோடு கலந்தே நிற்கிறது. ஒரு பொருளை அடைந்தோமென்றால் உடனே அதைப் பற்றிக் கவலையும் சிந்தனையும் அந்தப் பொருளை இழக்கும் பயமும், துக்கமும் கூடவே வந்து சேருகின்றன. தேகத்தைப் பீடிக்கும் வியாதிகளுக்கோ கணக்கில்லை. உள்ளத்தை துன்புறுத்தும் பற்றுக்களுக்கும் அளவேயில்லை. பற்றுக்களாலும் அபிமானத்தாலும் நாம் அடைவது சுகம் போல் கண்டாலும் உண்மையில் சுகம் அன்று:

ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) ஸ்ரீ ஞானானந்தகிரி யோகியாருடன் காயத்திரி சித்தர்

சுவாமிஜி அடிக்கடி நினைவுகூரும் தவஞானி ஸ்ரீ ஞானானந்தகிரி அவர்களாவார். இவர் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக உயிர்வாழ்ந்தவர் என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. ஆதிகாலத்தில் இமயமலையில் வாழ்ந்த சிவரத்னகிரி மகரிஷியின் வழிவந்த ஜகத்குரு தோட்டக்காச்சாரியாரின் ஆறாவது குருபரம்பரைச் சீடராவார். ஞானானந்தகிரி சுவாமிகள் கங்கோத்தரியில் இமயத்தின் பனிக்குகைகளில் தங்கியிருந்து தவமியற்றியிருக்கிறார். நாமசங்கீர்த்தனம் செய்வதின் மூலம் இறைவனை அடையலாம் என்பதில் அசையாத நம்பிக்கைக் கொண்டவர். ஞானானந்தகிரி சுவாமிகளிடமிருந்த தெய்வீக இயல்புகளில் மிகவும் முதன்மையானது அவருடைய விருந்தோம்பல் பண்பாகும். தம்மைத் தேடிவருபவர்களிடம் “ தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள், களைத்துப்போயிருப்பீர்கள் , வாங்கப்பா சாப்பிடலாம், என்று ஆகாரம் உண்ண வற்புறுத்துவார்.

தன்னுடைய இளமைநாட்களில் இப்பெருமகானுடன் பலகாலந்தங்கி சாதகம் புரிந்த நமது முருகேசு சித்தருக்கும் இப்படியான விருந்தோம்பல் பண்பு இருந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. தமிழறிஞர் கி.வா. ஜகன்னாதன் அவர்கள் இப்பெருமகனைப்பற்றி குறிப்பிடுகையில் ' கல்விக்காக பள்ளியே செல்லாத இம்மாமுனிவர் சாதாரணமாக உரையாடும் வேளையிலுங்கூட அவர் வாயிலிருந்து தாயுமானவர் பாடல்களிலிருந்து கந்தரனுபூதியும் சித்தர்களின் பாடல்களும் ஆற்றொழுக்குப் போல வெளிவரும் என கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் இருந்த ஞானானந்தகிரியின் ஆச்சிரமங்களில் புத்தர் இயேசு முதலான மகான்களின் திருவுருவப் படங்களும் சுவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும். நமது காயத்திரிசித்தர் ஞானானந்தகிரியிடமிருந்து கற்றுக்கொண்ட ஒரு பாடத்தை நகைச்சுவை ததும்பக் அடிக்கடி கூறி மகிழ்வார். இளவயதில் சுவாமி முருகேசு நிறைய நூல்களை வாசிப்பாராம். அத்துடன் தான் போகுமிடங்களுக்கும் புத்தகங்களை கொண்டுசெல்வார். ஒரு சிறிய . பையில் உடைகளை வைத்துக்கொள்வார். ஆனால் எதிர்மாறாக பெரிய ஒரு டிரங்குப்பெட்டி நிறைய கிடைத்த புத்தகங்களை அடைத்துக் கொள்வாராம். இதனை ஒருநாள் கவனித்த ஞானானந்தகிரியவர்கள் ' ஏம்பா முருகேசு! ஆன்மீகத்தை மனசில் வைத்திருந்தால் போதாதா ? கழுதைமாதிரி புத்தகப் பொதியையும் சுமக்கணுமா ? எனக்கேட்டாராம். அன்றிலிருந்து கடைசிவரை நமது சுவாமிஜியவர்கள் பிராயாணஞ் செய்யும் சமயங்களில் ஒருசில நூல்களை மட்டுமே கொண்டுசெல்வார்.

சுவாமி முருகேசு அதிகாலையில் விழித்தெழுந்து இறைவழிபாடு செய்து தமது அன்றாட பணிகளை அன்றன்றே செய்துமுடிப்பதை ஒரு யோகமாகவே நடத்திவந்தார். தனது தொண்டர்களும் அப்படியே செய்ய வலியுருத்தியும் வந்தார். ஆதி சங்கரர் அருளிய ஸ்ரீ லலிதா பஞ்சரத்னம் எனும் பாமாலைக்கு பின்வருமாறு விளக்கவுரை எழுதியதிலிருந்து அவருடைய அதிகாலைத் துயிலெழும் ஆர்வத்தை நாம் அறிந்துக்கொள்ளலாம்.

வைகறைத் துயிலெழு என்பது ஆன்றோர் வாக்கு. மிக அதிகாலையில் எழுந்து இறைவனை வழிபடும்படி எல்லா மத நூல்களும் வற்புறுத்துகின்றன. காலையில் கண் விழிக்காதவனுக்கு ஆயுள் குறையும் என்று ஆரோக்கிய நூல்கள் கூறுகின்றன. வேதங்களில் அதிகாலையில் இறைவனைத் துதிக்கும் பல மந்திரங்கள் இருக்கின்றன. தெய்வ உபாசனைகளில் அந்தந்த தெய்வத்தின் பள்ளியெழுச்சிகள் - சுப்ரபாதங்கள்- கூறப்பட்டுள்ளன. இப்படி அதிகாலையில் விழித்து இறைவனைத் துதிக்கும்படி வற்புறுத்தப்பட்டிருப்பது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் கண்விழித்த போதிருந்து இரவில் கண்ணயரும் வரை மனிதர்களும், மற்றைய உயிரினங்களும் வெளியுலகத்தோடு தொடர்பு கொண்டு மனதை ஐம்பொறிகளின் வழியே வெளி உலகத்துடன் செலுத்தியபடி வாழ்கின்றன. இரவு நேரத்தில் புலன்கள் வழி மனதை யோட்டாமலும் மனம் வழி உணர்வை இயக்காமலும் தூக்கமெனும் அமைதியில் அடங்கிக் கிடக்கின்றன. உடலும், மனமும், பகலில் உழைத்த உழைப்பால் இழந்த சக்தியை பெற்றுச் சேமித்து பலமடைகின்றன. நோயாளிகள் அதிகமாய்த் தூங்கவேண்டுமென்பதுவும் இதனாலேயே காலை கண் விழிக்கும் போது முன்தினம் மாலைவரை உழைத்த களைப்பை போக்கிப் புதுப் பலத்துடன் உணர்வு, மனதிலும் மனம், பொறிகளிலும் இயங்கத் தொடங்குகிறது. அன்று செய்யப்பட வேண்டிய வேலைகள் பற்றி காலையில்தான் திட்டமிடப்படுகிறது.

இறைத்தியானத்தில் மனம் நிலைப்பட வேண்டுமானால் அது பலமாகவும் அமைதியுள்ளதாகவும் இருக்க வேண்டும். பகலெல்லாம் உழைத்ததால் சோர்வையும் உலகப்பொருட்களுடன் தொடர்பு கொண்டிருந்ததால் சலனத்தையும் கொண்டிருக்கும் மனம் இப்போது அதைத் தியான நிலையில் இருத்த முயற்சித்தால் எளிதில் நடவாது. ஆனால் பலம் பெற்று சோர்வையகற்றி சஞ்சலமொடுக்கி அமைதியடைந்த மனம் அதிகாலையில் தியானத்தில் ஈடுபட்டால் எளிதில் குவிந்து நிலைபெறும். இத்தகைய காரணங்களாலேயே காலை தியானம் சிறந்ததெனக் கூறுகிறார்கள். தியானத்துக்கு மட்டும் காலைப்பொழுது சிறந்ததல்ல. ஓர் புது விடயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க ஓர் பெரிய பிரச்சினைக்கு வழியைக் கண்டு பிடிக்கவும் காலைப் பொழுதே சிறந்தது.

இறைவன் அருள்பெற்று இகபரங்களில் இன்பம் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புபவன் காலைப் பொழுதை வீணாகக் கழிக்கக்கூடாது. மற்றெல்லா உலக காரியங்களைவிட இறைவனை வழிபடுவதை மேலாகக் கருதும் பக்தன் நாள்தோறும் முதல் கடமையாக இறைவழிபாட்டைச் செய்வது காலையாக இருக்கவேண்டும். காலை பொழுதில் மனம் குவித்து இறைவனில் லயமாவதுபோல் மற்றெந்த நேரத்திலும் ஆகாது ஆகையால் பக்தர்களின் முதற் கடமை காலை – வழிபாடு. காலை வழிபாடுகளில் இறைவனையும் தனக்கு அருள் செய்ய விழிக்குமாறு பள்ளியெழுச்சிகள், சுப்ரபாதங்கள், சாலச் சிறந்ததல்லவா? காலையில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழிப்படைந்த தனக்கு அஞ்ஞான தூக்கத்தைக் களைந்து மெஞ்ஞான விழிப்பைத் தந்தருள இறைவன் கண்விழிக்க வேண்டுமென்று பிரார்த்திப்பது மிகமிக பொருத்தமானதல்லவா? சோர்வகற்ற புதுப்பலம் பெற்ற மனவிழிப்பின் முதலில் இறைவன் ஞாபகத்தை ஊன்றி விட்டால் அன்று முழுவதும் மேற்கொள்ளும் மற்ற காரியங்களின் இடையிலும் இறைவன் ஞாபகம் மறவாதிருக்கும். அன்று செய்யும் மற்ற காரியங்களில் இறைவன் அருள் கலக்க வழிகோளும்.

லலிதா பஞ்சரத்னம்:- அதிகாலையில் அம்பிகை பராசக்தியின் எளிய அருள் வடிவை பள்ளியெழுச்சியாகத் துதி செய்யும் வகையில் அமைந்தது. லலிதா வடிவில் தான் ஜகத்ஜனனி (தாயார்) யாகிய பராசக்தி மக்களுக்கு எளிதில் வந்து அருள் புரிகிறாள். லலிதம் என்றால் எளிது விளையாட்டு என்று பொருள். விளையாடும் குழந்தைகளுக்கு வேளையறிந்து அழைத்து அமுதூட்டும் மண்ணுலக அன்னைபோல விளையாட்டாகவாயினும் தன்னைத் துதிக்கும் அருட்குழந்தைகளின் தேவையறிந்து ஓடிவந்து அருள் புரிவாள் லலிதை. இத்தகைய அன்னையை துதித்தால் அம்பிகையின் அருள் வெகு விரைவில் கிடைக்கப் பெறும் என்பதில் என்ன ஐயம்? அதிகாலையில் தெளிந்தமனதுடன் அன்னையை வழிபடும்பொழுது கிடைக்கும் இன்பத்துக்கு எதுவுமே ஈடாகாது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது குருநாதர்
ஸ்ரீ கண்ணையா யோகியாருடன்



ரிஷிகேசத்தில்
ஸ்ரீ சிவானந்த சரஸ்வதியுடன்



ஸ்ரீ ஞானானந்தகிரி
சுவாமிகளுடன்



ஸ்ரீ சிவபாலயோகி
மகராஜ் அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்றைய இலங்கை
ஜனாதிபதியுடன்



இந்துசமய கலாசார அமைச்சருடன்





அன்றைய
இலங்கைப் பிரதமருடன்





சர்வமத ஒன்றுகூடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் தாயின் அன்பை குழந்தை அணைப்பதன் மூலம் வெளிக்காட்டுகிறது. ஓடிவந்து தன் அன்னையைச் சேர்ந்து அணைத்துக் கொள்ளும் போது அன்னைக்கு உண்டாகும் இன்பத்தைப் பற்றி சொல்ல வேண்டுமா? குழந்தைகளான நாம் பராசக்தி அன்னையை நம் பௌதிகக் கண்களால் (கட்டியணைத்து மகிழ்ந்து) மகிழ்விக்க முடியாது. அவளுக்கும் நமக்கும் இடையில் ஓர் சூட்சுமத் தொடர்பு வேண்டும். அதன் ஒரு புறம் நம்மையும், மறுபுறம் அது அம்பிகையையும் பற்றியிருக்க வேண்டும். இத்தகையதோர் ஸ்தூல, சூட்சுமத் தொடர்பை உருவாக்கும் வண்ணம் ஆக்கப்பட்டது லலிதா பஞ்சரத்னம்.

பாக்களாம் இரத்தினங்களால் தொடுத்த இம்மாலையால் நாம் அன்னையை அடையமுடியும். அந்த ரத்னங்களை நாம் தினமும் உச்சரிப்பதன் மூலம் தொடுப்பதால் சூட்சும மாலையாகி அன்னையின் கழுத்தில் விழுந்து நம்முடன் தொடர்புகொள்ளச் செய்யும். இப்படிப்பட்டதோர் சக்தியை உண்டாக்கும் வகையில் தான் சிவபெருமானின் அவதாரமான சங்கரரால் லலிதா பஞ்சரத்னம் செய்யப்பட்டிருக்கிறது. இதனை தினமும் காலையில் படித்து அம்பிகையின் அருளைப் பெறுவீர்களாக!

ஸ்தூல, சூட்சுமத் தொடர்பு உண்டாக வேண்டுமானால் வாயால் உச்சரிக்கும் ஸ்தூல தோத்திரத்துடன் மனதால் பொருளை நினைக்கும் சூட்சுமத் தோத்திரமும் செய்யப்பட வேண்டும். வாயால் தோத்திரம் செய்யும் போது மனம் அதில் ஈடுபடாமல் சஞ்சரித்துக்கொண்டிருந்தால் பலன் கிடைக்காது. காயத்திரி சித்தரின் பிரத்தியேக நூலகத்தில் இருக்கும் நூல்களில் லலிதா பஞ்சரத்தினம் முதலிடம் வகிக்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. இமயத்தில் சிவானந்தசரஸ்வதி சுவாமிகளுடன்

சிவானந்த மகரிஷி சுவாமிஜிக்கு எழுதிய கடிதமொன்றில் சுவாமிஜியின் பெயரை ஸ்ரீசிவானந்த முருகேசு என்று குறிப்பிட்டுள்ளார். அன்றைய நாட்களில் நமது குருதேவர் தனது பெயரை ரிஷிகேசத்தில் குடியிருந்து உலகெல்லாம் ஆன்மீக ஒளிபரப்பிய சிவானந்தரின் பெயருடன் இணைத்து சிவானந்த முருகேசு தன்னை அடையாளம் காட்டி வந்திருக்கிறார்.

சுவாமிஜி 1950 களின் நடுப்பகுதியிலிருந்து அடுத்த பதினைந்து வருடங்கள் மட்டில், தொடர்ந்து இந்தியாவில் ஆன்மீகப் பயணங்களை மேற்கொண்டார். விசேடமாக இமயமலைப் பகுதிகளிலும் சில காலந் தங்கியிருந்து தியானம் புரிந்துள்ளார்.

இமயமலை இந்துக்கள் மட்டுமல்லாது பௌத்தர்கள் சீக்கியர்கள் அனைவரும் பயணஞ்செய்யும் ஒரு ஆன்மீக சாகரமாகும். 19ம் நூற்றாண்டில் கிடைத்த தகவல்களின்படி கிறீஸ்தவ, இஸ்லாமிய மதத்தினருக்கும் நெடுங்காலந்தொட்டே இமயத்தின் ஆன்மீகத் தாக்கம் இருந்துவந்துள்ளது.

இமயம் இயற்கையன்னை பூமித்தாய்க்கு அளித்த பெருங்கொடையாகும். ஆயிரக்கணக்கான வருடங்களாக உறைந்திருக்கும் பதினைந்தாயிரத்துக்கு அதிகமான வெண்பனிமுகடுகள் , குளிர் நீரூற்றுகளால் போஷிக்கப்படும் சதுப்பு நிலங்கள், விலைமதிக்கவியலாத விருட்சங்களும் கனிதரும் மரங்களும் நிறைந்த அடர்த்தியான காடுகள், வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் பரந்த சமவெளிகள், உணவுப்பயிர்கள் விளையும் வயல்வெளிகள் என இன்னோரன்ன அரும்பெருஞ் செல்வங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தியாவையும் சீனாவையும் மட்டமல்லாது சிக்கிம், பூட்டான், அருணாச்சல் திபேத், காஷ்மீர், இன்றைய பாகிஸ்தான் என பலநாடுகளையும் தன்னடியில் வைத்துள்ளது. சுமார் முனனூறு கோடிமக்கள் இமயமலைப் பிரதேசத்தை அண்டி வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-உலகின் மிக உயர்ந்த பிரதேசத்தில் அமைந்திருக்கும் பல ஏரிகள் இமயமலையில் அமைந்துள்ளன. இவற்றுள் மிகப்பெருமைவாய்ந் மானசரோவர் ஏரியின் கரைகளிலில் இருந்து மகரிஷிகள் தவம் புரிந்ததன் பலனாகவே பிரபஞ்சத்தின் படைப்பாற்றல் விரிவானதாக ஐதீகமுண்டு. சிவனின் முன்னோரான 'மான்தாதா' எனும் மகரிஷியின் தவத்தைக் கேட்டு பிரம்மா மானசரோவர் நீர்நிலையை உருவாக்கியிருக்கிறார். உலகிலேயே மிகத்துாய்மையான நீர் இந்த குளத்தின் நீர்தான் எனக்கூறப்படுகிறது. அடித்தளத்தில் 250 அடி ஆழத்திலிருக்கும் கற்கள்கூட நமது கண்களுக்கு தெரியுமளவிற்கு ஏரியின் தண்ணீர் தெளிவானது. மானசரோவரில் புத்தரின் தாய் புனிதநீராடியதன் பயனாகவே சித்தார்த்தர் அவதரித்தார் என்றும் திபேத்தியர்கள் கூறுகின்றார்கள். ஏரியைக் கடந்து யாத்ரீகர்ளுக்கு காட்சிதரும் மகாகைலாஷம் தரிசிக்கும் பக்தர்ளுக்கு பேரானந்த அனுபவத்தைத் தரும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதிகபழமையான பல ஆலயங்கள் இமயப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. திபேத்துக்கு செல்லும் வழியில் மலைமுகட்டில் காட்சிதரும் புலிக்கூண்டு ஆஸ்ரமம், ஜம்மு காஷ்மீரில் இருக்கும் வைஷ்ணதேவி ஆலயம், ஹரித்வார், பத்ரினாத் ஆலயங்கள் , கேதார்நாத்தின் பிரசித்தம்பெற்ற பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள், கோமுகி, தேவப்பிரயாகை, ரிஷிகேஷத்தில் அருள்பாலிக்கும் மகாகைலாசநாதர் ஆலயங்கள் என்பன தேடிவரும் பக்தர்களுக்கு வேண்டுவதை வாரிவழங்குகின்றன. அமர்நாத் பனிச்சிவலிங்கம் இயற்கையின் அதிசயங்களில் ஒன்றாகும்.

இமயம் பல இரகசியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. மலையேறும் சாகச சாதனைகளில் ஈடுபடும் பல மேல்நாட்டினர் பத்தடிக்கும் அதிக உயரமான “யெட்டி” என்றழைக்கப்படும் பிரமாண்டமான பனிமனிதனை இமயமலைகளில் கண்டதாகவும் தகவல் தந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955ம் ஆண்டு இளையவர் முருகேசு தனது 22ம் வயதில் பாரதநாட்டில் ரிஷிகேசத்தில் தியானாலயம் நிறுவி உலகெல்லாம் ஆன்மீக அருளொளி பரப்பிய சிவானந்த மகராஜ் அவர்களை சந்தித்தார்.

வடமாநிலமான உத்தர்கண்ட் டெஹ்ராடூன் மாவட்டத்தில் ரிஷிகேஷ்நகரம் அமைந்துள்ளது. இமயத்தின் நுழைவாயில் எனப் பெயர்பெற்ற ரிஷிகேசம் உயர்ந்த பர்வதங்களின் அடிவாரத்தில் நிறுவப்பட்ட ஆன்மீகம் கமழும் நகரமாகும். இந்தியநகரங்களிலேயே மதுவருந்துதல், மாமிசம் உண்ணுதல் இரண்டும் சட்டப்படி தடைசெய்யப்பட்ட நகரம் என்ற பெருமையும் இந்த ஊர் பெற்றிருக்கின்றது. ( இன்றுங்கூட சுற்றுச்சூழல் மாசடையாமல் பாதுகாக்குமுகமாக ரிஷிகேச நகரத்தின் வர்த்தகர்கள் பொலித்தீன் பைகளை விற்பனை செய்வதில்லை.) ரிஷிகேசத்திற்கு பக்கத்து நகரான ஹரித்துவார் மகாகும்பமேளா நடக்கும் நான்கு ஊர்களில் ஒன்றாகும். கின்னஸ் புத்தகத்தின் ஆய்வுப்படி முழு உலகித்திலுமே அதிகமக்கள் தொகையினர் ஒரே இடத்தில் கூடும் பிரமாண்டமான வைபவம் மகாகும்பமேளா எனக்கூறப்படுகிறது. கங்கையும் யமுனைநதியும் கடலில் கலக்கும் மகாபிரயாகை சங்கமும் இப்பிரதேசத்தில்தான் நடக்கிறது. கங்கையின் தண்ணீர் நீறுபூசிய சிவனைப்போல் வெண்மையாகவும் யமுனைநீர் விஷ்ணுவைப் போல் சியாமள வர்ணத்திலும் காணப்படுகிறது.

சிவானந்தருக்கும் நமது சுவாமிஜிக்குமிடையில் நடந்த முதற்சந்திப்பே மிக சுவாரஸ்யமாக நிகழ்ந்தது. அன்று ஒரு விடியற்பொழுதில் சிவானந்தர் கங்கையில் நீராடி விட்டு கரையேறிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் காசியில் தங்கியிருந்த நமது சுவாமிஜி அவர் முன்சென்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். ஆனால் ஆஜானுபாகுவான உடலமைப்பபைக் கொண்ட சிவானந்தரோ சற்றும் எதிர்பாராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமாக சின்னவர் முருகேசுவைத் அலாக்காகத் தூக்கி கங்கைநதியில் எறிந்துவிட்டார். சுவாமிஜி நுரைப்புரண்டோடும் நதிவெள்ளத்தில் மூழ்கித் தடுமாறியவேளையில் சிவானந்தர் தனது மேற்துண்டைவீசி மறுபடி அவரை கரைக்கு இழுத்துக் கொண்டார். அன்றுமுதல் இருவரின் நட்பும் ஆன்மத் தொடர்புகளும் மிகவளர்ந்து இருவரையும் அண்டிய ஏனையோருக்கும் பலன்தரும் அருட்கனிகளைத் தந்தது. அந்தநாட்களில் நமது காயத்திரி சித்தர் தம்மை சிவானந்த முருகேசு எனவும் அடையாளம் காட்டியிருக்கிறார்.

சிவானந்தமகரிஷி தனது ஆஸ்ரமத்தில் ஆன்மீகம்பயின்ற முருகேசுசுவாமிகளிடம் இலங்கையில் மலைநாட்டுப் பிரதேசத்தில் சிவாலயம் அமைத்து தொண்டாற்றுங்கள் என அன்றே அருள்மொழிந்தார். 1963ம் ஆண்டு சித்திரைப் புதுவருடத் தினத்தன்று, முருகேசு சுவாமிஜியின் வேண்டுகோளின்படி ரிஷிகேசத்தில் பாவனாராமம் செய்து, பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு பாவவிமோசனம் அளிக்கும் பேறுகிட்டியது என சிவானந்தர் சுவாமிஜிக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். .

சம்பாலாவென்றும் சாங்கிரிலாவென்றும் அழைக்கப்படும் ரிஷிகளின் சூட்சும ஆஸ்ரமமும் இமயத்தில்தான் அமைந்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் காயத்திரி சித்தர் கற்றுக்கொண்ட ஆன்மீக இரகசிய வித்தை காயத்ரீ குப்த விஞ்ஞானம் ஆகும். வெகு காலத்திற்கு பின் இவ்வித்தையினை மக்கள் இலகுவாக புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதனைப்பற்றிய நான்கு நூல்களை குருதேவர் முருகேசு பகுதி பகுதியாக வெளியிட்டு வந்தார் காயத்ரீ குப்த விஞ்ஞானம் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? அதன் மறை பொருள் என்ன? அதனை எப்படி எமது ஆன்ம, உலக முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவது? சாதனைக்கான நியமங்கள் என்னென்ன? காயத்ரீ உபாசனையின் அங்கங்கள் எவை? என்பவற்றிற்கான விளக்கத்தை இது தருகிறது.

இந்த வித்தை எமது குருநாதரான காயத்ரீ சித்தர் மட்டுமே முழுமையாக தனது குருவிடம் பயின்ற ஒன்று. முருகேசு சுவாமிகளுக்கு ஏன் காயத்ரீ சித்தர் என்ற பெயர் வந்தது என்பதற்கான விளக்கமாகவும் இந்தப் பாடத்தொகுப்பு உள்ளது என்றால் மிகையில்லை.

மொத்தமாக இதில் நூற்றியிருபத்தி ஐந்து பாடங்களைக் கொண்ட முதற்பகுதி, ஆரம்ப நிலைச் சாதனைகளை உயர்ந்த பஞ்சகோச சாதனைகளை புரியும் அடுத்த நிலைக்கு தயார் படுத்தும் சாதனைகளை உள்ளடக்கியது.

அடுத்த நாற்பது பாடங்களும் இவற்றை முறைப்படி பயின்று தகுந்த கோட்பாட்டு அறிவு பெற்றவர்களுக்கான செயன்முறை பயிற்சிகளைச் சொல்லுவன. இந்த வகையில் எண்பத்தி ஐந்து பாடங்களில் சாதனா பகுதி தவிர்த்து ரிசிகள் உபதேசித்த காயத்ரீ மந்திர மறைபொருள் விளக்கங்களை காயத்ரீகீதை , காயத்ரீஇராமாயணம் , காயத்ரீ ஸ்ம்ருதி. யாக விஞ்ஞானம் என நான்கு நூல்களாக குருதேவர் வெளியிட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. ரிஷிகளின் சூட்சும ஆஸ்ரமங்களும் சூஃபி இஸ்லாமிய ஞானியும்

இமயமலை அருகே திபேத்திய பீடபூமியில், அடர்ந்தகாடுகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த சம்பாலாவெனும் இடத்தின் நடுவில் , சூட்சும ஆசிரமத்தில், ரிஷிகளின் மத்தியகேந்திரம் இருக்கின்றது. இவற்றின் அமைப்பு உலகோர் கண்களுக்கு தெரியாதவண்ணம் உள்ளது. சம்பாலா ஆஸ்ரமத்தின் விபரங்கள் சாக்கியமுனி புத்தரால் எழுதப்பட்ட காலசக்ர தந்திரம் என்னும் ஆதிகால சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்குறிப்பின்படி சம்பாலா மஞ்சுஸ்ரீகீர்த்தி என்னும் மன்னனால் ஆளப்பட்ட ஒரு தனியான இராஜ்யம் எனவும அறிகிறோம். சம்பாலா என்பதன் அர்த்தம் அமைதியின் உறைவிடம் என்பதாகும். இந்த ஆஸ்ரமத்தை நேரில் தரிசிக்க விரும்புவர்கள் தமது முன்வினை நற்பயனகளின்படி சூட்சுமமாக சம்பாலாவை சென்றடையலாம். சம்பாலாவின் கிளை ஆஸ்ரமங்கள் வேறு பலவிடங்களிலும் இருப்பதாகவும் அவற்றில் பஞ்சாப் சுல்ஜித் பள்ளத்தாக்கு, சைபீரியாவில் மங்கோலிய பள்ளத்தாக்கு தமிழ்நாட்டின் நீலகிரி கொல்லிமலைத் தொடர்கள் இமயமலையில் தவ்லதார் பகுதிகள் (இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலாய்லாமாவின் வாசஸ்தலத்துக்கு சமீபமாக ) என்பன அடங்கும். எஸ்டாவோ காசல்லோ எனும் கத்தோலிக்க மதகுரு சம்பாலாவை 1627ம் வருடத்தில் ஆராய்ச்சி செய்துள்ளார். 1883 ஆண்டு ஹங்கேரிய நாட்டு அறிஞரொருவர் சம்பாலாவை இன்றைய கசாகிஸ்தான் நாட்டுக்கு அருகே வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார். 1928ல் ஐரோப்பிய நாட்டினரான நிக்கலஸ் ஹெலனா தம்பதியினர் சம்பாலாவை பற்றிய ஆராய்ச்சிகளை செய்து பல அரிய தகவல்களை வெளியிட்டுள்ளனர். -தியோசொபிகல் கழகத்தைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையார் சம்பாலாவில் ரிஷிகள் உலக சுபீட்சத்துக்காக யாகம் வளர்ப்பதை பற்றி எழுதியுள்ளார். மேலும் சிங்கடஷே லக்சோர் முதலிய இடங்களில் மகாத்மாக்கள் வசிக்சிறாாக்ள் என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

சுவாமிஜியின் ஆன்மீகத் தேடலில் அவருக்கு வழிகாட்டியவர்களில் இந்துசமய முனிவர்கள் மட்டுந்தான் இருந்தார்கள் என்பதில்லை. ஒருமுறை சுவாமிஜி இமயமலைச்சாரலில் அமைந்திருந்த ஒரு ஆச்சிரமத்தை தேடிச்சென்றார். அந்த தவச்சாலைக்கு பொறுப்பாக இருந்தவர் ஒரு சூ.்.பி இஸ்லாமிய தவஞானியாவார். அன்றைய நாள் முழுவதும் நடந்துக் களைத்துப்போன சுவாமிக்கு மாலைவேளையில் வனத்தின்மத்தியில் ஒரு இஸ்லாமிய மசூதி தென்பட்டது. அம்மசூதியில் பிரயாணிகள் தங்கி இளைப்பாற பூரணவசதிகள் கொண்ட விருந்தினர் விடுதியொன்றும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அன்றிரவு விடுதியில் உண்டுறங்கி இளைப்பாறிக் காலையில் எழுந்தார். விடிந்தவுடன் விடுதி பொறுப்பாளரிடம் தான் சந்திக்கவந்த இஸ்லாமிய ஞானியவர்களின் இருப்பிடத்தை அறிந்து மீண்டும் பயணமானார். முடிவில் வந்தடைந்த ஆச்சிரமத்தில் அவர் தேடிவந்த அத்தவஞானியைச் சந்தித்தபொழுது அம்மகான் கடந்த இரவு தன்னை விருந்தினர் விடுதியில் உபசரித்த விடுதிப் பொறுப்பாளரே என்பதை அறிந்து வியந்தார்.

அதனையுணர்ந்த அப்பெரியவர், உனது களைப்பினை நீக்கவே நான் அந்த விருந்தினர் விடுதியை உருவாக்கி, உன் பயணத்தையும் இலகுவாக்கினேன் என்று சொல்லி அநேக மெய்ஞான இரகசியங்களை உபதேசம் செய்து ஆசீர்வதித்து வழியனுப்பினார். மேலும் இன்னும் இருபதுவருடங்களின் பின் உனக்கு அதிசக்திவாய்ந்த பீஜாட்சரங்களையும் ஒலியமைப்பையும் கொண்ட அஸ்வாருடமந்திர அபிஷேகம் கிடைக்கும் என அந்த இஸ்லாமிய சித்தர் அருள்வாக்கு மொழிந்தார்.

சுவாமிஜி மறுபடியும் திரும்பி வரும் வேளை வழியில் அவர் முதல்நாளில் இரவைக் கழித்த அம்மசூதியும் விடுதிமாளிகையும் அவ்விடத்தில் காணப்படாததை அறிந்து பெரும் வியப்படைந்தார்.


சம்பாலாவெனும் கேந்திர ஸ்தானத்தை சூட்சுமசக்தியில் பூரணத்துவம் பெற்றிருக்கும் பலரும் சென்று பார்வையிட்டிருக்கின்றனர். சாதாரண மனிதர்கள் எவரும் இவ்விடங்களைக் கண்டுபிடித்துச் செல்லமுடியாது. இங்குள்ள ஆச்சிரமங்களைச் சேர்ந்த ரிஷிகள் எவரேனும் வ்ழிகாட்டி அழைத்துச் சென்றாலொழிய, தாமாக யாரும் இவ்விடங்களை அணுகவியலாது. ரிஷிகளின் உலக மத்தியக் கேந்திரமாக சம்பாலா இருக்க, பூமியின் வேறுபல பாகங்களிலும் பல கிளை ஆசிரமங்கள் சூட்சுமமாக இயங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவிலும் தவசிரேஷ்டர் அகத்தியனார் இன்றும் சிரஞ்சீவியாக உயிர்வாழ்ந்து நீலகிரி மலைச்சாரலின் நடுவில், ஒரு சூட்சும ஆசிரமத்தை வழிநடத்தி வருகின்றாரென சொல்லப்படுகிறது.

ஐரோப்பிய விஞ்ஞானியொருவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த ஆச்சிரமமொன்றில் பலகாலந் தங்கி சாதகம் பயின்றிருக்கிறார். இவ்வனுபவத்தின் பின் அவர் எழுதிய நூலொன்றில் நீலகிரி மலைச்சாரலில் ஒரு மாபெரும் தவமுனிவரைச் சந்தித்தேன் என்று அகத்தியரைக் குறிப்பிட்டு எழுதியுமிருக்கின்றார். இவ்விஞ்ஞானியே மகரிஷிகளின் உத்தரவின்படி ரிஷிகளின் முகத்தோற்றங்களை சித்திரங்களாக வரைந்து மேற்குலகினருக்கு முதன்முதலாக வெளியிட்டவராவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. காயத்திரிபீடத்தில் இலங்காதீஸ்வரர் ஆலயம்

1975 ஆம் ஆண்டு தனது நாற்பத்திரண்டாம் வயதில், காயத்ரி சித்தர் முருகேசு இலங்கையின் மத்திய மலைநாட்டில் நுவரெலியா நகரின் ஒதுக்குப்புறமான இடமொன்றில் ஒரு ஆச்சிரமம் அமைத்து தனது ஆன்மீகப்பணியின் மிகப்பாரிய திருப்பத்தை தொடங்கினார்.

மலையகத்தில் பேராலயம் அமைக்கும் அவருடைய பால்யகாலக் கனவு காயத்திரபீடத்தின் இலங்காதீஸ்வரர் பேராலயமாக உருப்பெறத் தொடங்கியது. இவ்வாலயம் அமைந்திருக்குமிடம் அன்று இராவணன் ஆட்சி செய்த இலங்கையின் இராஜதானியென்றும் நம்பப்படுகின்றது. இன்று நுவரெலியா லேடி மெக்கலம் பாதையில் ஸ்ரீநகர் என்று அடையாளம் காணப்படும் இப்பகுதி ஒரு காலத்தில் மனிதர்கள் அண்டமுடியாத இடமாக இருந்தது. அக்காலத்தில் நமது குருதேவருடன் தங்கியிருந்து அவருடன் இணைந்து செயற்பட்டவர்களில் திரு.சின்னசாமி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

நுவரெலியாவில் இன்று ஆலயம் அமைந்திருக்கும் நிலமும் அங்கு அன்று காணப்பட்ட ஒரு பழைய கட்டிடமும் தலைநகர் கொழும்பில் வாசஞ்செய்த சேர்ந்த ஒரு சிங்கள பௌத்த பெண்மணிக்கு சொந்தமாயிருந்தது. இவருடைய கணவன் இப்பெண்ணுடன் மனஸ்தாபப்பட்டு குடும்பத்தைக் கைவிட்டு பிரிந்து கடல்கடந்து இங்கிலாந்து சென்று விட்டார். அந்த நாட்களில் நம் சுவாமிஜி கொழும்பில் மட்டக்குளியில் தங்கியிருந்து காயத்திரி மந்திரம் மற்றும் யாகங்களை சிறிய அளவில் நடத்திவந்தார். அச்சமயத்தில் மேற் குறிப்பிட்ட பௌத்த பெண்மணி தனது கணவனுடன் தனக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை நம் குருதேவரிடம் கூறி பரிகாரம் வேண்டி நின்றிருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அப்பெண்மணியின் துன்பம் நீங்கவேண்டி விசேட யாகம் செய்ததுடன் காயத்திரி மந்திரத்தின் மகிமையையும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அவளுடைய பிரச்சினைகள் வெகு விரைவில் தீர்ந்துவிடுமென நல்வாக்கும் அருள்மொழிந்திருக்கிறார். நாளடைவில் காயத்திரி மாதாவின் பேரருளால் கணவனிடமிருந்து அவர் மறுபடியும் குடும்பத்துடன் சேர்ந்துவாழ இலங்கை வரவிருப்பதாகச் செய்தி வந்தது. இரண்டே வாரங்களில் கணவனும் இலங்கை வந்து, பிரிந்திருந்த தம்பதிகள் மறுபடி ஒன்று சேர்ந்தனர்.

நன்றி மறவாத அந்தக் குடும்பத்தினர் நுவரெலியாவில் தங்களுக்கு ஒரு நிலமும் பழைய வீடொன்றும் வெகுகாலமாக பராமரிப்பற்று இருப்பதாகவும் தமது வாழ்வில் சுபீட்சத்தைக் கொண்டு வந்த குருதேவருக்கு அந்த இடத்தை இலவசமாகச் சமர்ப்பிக்க தாங்கள் தீர்மானித்துள்ளதையும் அறிவித்திருக்கிறார்கள்.

எனினும் நமது சுவாமிஜி அந்த இடத்தை இலவசமாக வாங்கமறுத்து தனது பக்தர்கள் மூலமாக தனக்குக் கிடைத்த காணிக்கைப் பணத்தைக் கொடுத்து விலைக்கே வாங்கியிருக்கிறார்.

ஆனால் சுவாமிஜியிடம் இந்தத் துரதிர்ஷ்டமான பேய்கள்கூட நடமாடும் இடத்தை வாங்கவேண்டாம் என்றவர்களும் வாங்கியவுடன் பிறகு பரிகாசஞ்செய்து சிரித்தவர்களும் அநேகர்.

அவர்களில் சுவாமிக்கு மிகநெருங்கிய உறவினர்கள் நண்பர்களும் அடங்குவர். எனினும் சுவாமிஜி அடிக்கடி சொல்லும் வார்த்யைான பிராப்தம் அந்த நிலத்துக்கு காயத்திரி ஆலயத்தை பின்நாளில் தாங்க நிறையவே இருந்திருக்கின்றது.

கிறிஸ்து மொழிந்த ஒதுக்கித் தள்ளப்பட்ட கல்லே வீடு கட்டுவதற்கு மூலைக் கல்லாயிற்று என்ற வாக்கு காயத்திரிபீடம் எழும்பியதிலும் நிறைவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜிக்கு அந்த இடத்தை வாங்கியவுடன் நிறைய வேலைகள் இருந்தன. நிலத்தை பண்படுத்துவது மட்டுமல்ல. அவ்விடத்தில் ஏற்க்கனவே கட்டப்பட்டிருந்த பெரிய வீடும் மிகப் பாழடைந்திருந்தது. விரைந்து சீர்செய்வதற்கும் நமது குருதேவருக்கு பணவசதி இருக்கவில்லை. எனவே கட்டிடத்திற்கு சுண்ணாம்பு மட்டும் அடித்துவிட்டு உடனே குடியேறிவிட்டார். அங்கு அந்நாட்களில் தினசரி மாலைநேரங்களில் காயத்திரிமந்திர பாராயணமும் யாகபூஜையும் தொடங்கி நள்ளிரவு வரை நடைப்பெற்றுவந்தன. மொத்தம் நாலைந்துப் பேர்தான் கூடுவார்கள் என அவருடன் அன்பர் சின்னசாமி கூறுவார். சுவற்றில் மாட்டப்பட்டிருந்த காயத்திரிதேவியின் ஒரு சிறியபடம் மட்டுமே பூஜைசெய்ய வைக்கப்பட்டிருந்தது. சுவாமிஜி தைரியமாக அங்கு தங்கினாலும் அவருடைய சகாக்களுக்கு இரவில் அந்த இடத்தில் தூங்குவதற்கு பெரும் பயந்தான். அசுத்த ஆவிகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். அன்று இளைஞர்களாக இருந்த இன்றைய முதியவர்கள் இன்றுங்கூட அந்த மண்டபத்தில் நிகழ்ந்த பல சுவாரஸ்யமான பேய்க்கதைகளைக் கூறுவார்கள். நாளடைவில் காயத்திரி வேள்விகளில் எழுந்த பரிசுத்தமான புகைமண்டலம் அசுத்தங்களை அகற்றி தெய்வீக இலட்சுமீகரத்தை அத்திருத்தலத்தில் நிரந்தரமாக தோற்றுவித்தது.

இலங்கையின் பிரதான சைவாலயங்கள் வடக்கிலும் ,கிழக்கிலும் அல்லது தெற்கு, மேற்கில் மட்டுந்தான் இருக்கின்றன என்ற பொதுவான அபிப்பிராயத்தை சுவாமிஜி எழுப்பிய இலங்காதீஸ்வரர் ஆலயம் முற்றிலும் மாற்றிவிட்டது. அவரமைத்த ஆலயமும், அதே வளாகத்தில் அமைத்த யாகசாலை மற்றும் தியான மண்டபமும், மிகவும் சிறப்புவாய்ந்தன. தொலைவில் இருந்து தெரியும் ஆலயத்தின் கோபுரவடிவமைப்பு வட இந்தியாவின் பத்ரிநாத், கேதார்நாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் கட்டப்பட்டிருக்கும் இந்து ஆலயங்களைப் போன்றதொரு தோற்றத்தை தருவது குறிப்பிடத்தக்கது.

சுவாமிஜி ஆரம்பக் காலங்களில் ஞானந்தேடி சஞ்சரித்த நாட்களில் அவரின் மனதினிற் பதிவான வட இந்தியக் கட்டிடக்கலைகளின் பிரதிபலிப்பாகவும் இம்மண்டபம் அமைந்திருக்கலாம்.

அகிலம் புகழும் தவசிரேஷ்டர் ஸ்ரீ சிவபாலயோகியார், இந்தியாவில் நர்மதைநதியில் தான் கண்டெடுத்த சக்திவாய்ந்த சிவலிங்கத்தை இங்கு கொண்டுவந்து இவ்வாலயத்தில் 1978ம் வருடம் பிரதிஷ்டை செய்தார். 1993ம் ஆண்டு இலங்காதீஸ்வரர் ஆலயம் மறுபடியும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடந்தேறியது.

அக்காலக்கட்டங்களில் சுவாமிஜியவர்களின் ஆன்மீகப்பணிகளுக்கு முற்றிலும் உறுதுணையாக இருந்தவர்கள் ஸ்ரீமதி சீதாபாபு அம்மையாராவார். இந்தப் போற்றுதற்குரிய பெண்மணி இன்றும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்து தனது ஆன்மீகப்பணியை மிகச்சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

இங்குள்ள ஸ்ரீ முருகேசு ஆன்மீக ஆராய்வு நிலையம் தமிழ் மற்றும் சிங்களம் பேசும் மக்களும் சந்திக்கும் இடமாக அமைந்தது மட்டுமன்றி ஏனைய பௌத்த, கிறிஸ்தவ,இஸ்லாமிய அன்பர்களும் கூடும் சாலையாகவும் இருக்கின்றது. கூடவே உலகின் பலபாகங்களிருந்தும் விஜயஞ்செய்யம் சகல ஞானந்தேடும் பக்தர்களும் ஒருவரோடொருவர் தோளோடு தோள்நின்று பணிபுரியும் இடமாகவும் இன்று மாறியுள்ளது. மேலும் சமீபக்காலத்தில் சில அன்பர்களின் விடாமுயற்சியால் காயத்திரி சித்தரின் பெருமையினை நினைவுப்படுத்தும் அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டிருப்பது விஜயஞ் செய்யும் புதிய பக்தர்களுக்கு மிகுந்த நிறைவைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே காயத்திரி சித்தர் ஸ்ரீமுருகேசு அறநெறிப் பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டு 400க்கும் அதிகமான பாடசாலைச் சிறுவர்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமையன்றும் சைவசமயக் கல்வியில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் கண்காணிப்பில் விசேட பயிற்சி பெறுகின்றார்கள். மேலும் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் மற்றும் கலாசார நிகழ்வுகளிலும் இவர்கள் தேர்ச்சி பெறுகிறார்கள். காயத்திரி மந்திரத்தை முறையாக தினமும் ஓதவும் மாணவர்கள் தெரிந்துக் கொள்வதோடு வாரமொருமுறை அனைத்து இளைய சமூகத்தினருக்காகவே ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் விசேட யாகபூஜையிலும் பங்குபெறும் அரியவாய்ப்பினையும் இவர்கள் பெறுகிறார்கள். குருதேவரின் பெருவிருப்பத்திற்குரிய - அனைவருக்கும் உணவளிக்கும் - புண்யகர்மம் சிறார்களுக்கும் மட்டுமல்லாது அவர்களை அழைத்து வரும் பெற்றோர்களுக்கும் வாரந்தோறும் பகற்போசனம் பகிர்வதிலும் தொடர்ந்து நிறைவேறுகின்றது.

இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் பூஜைவழிபாடுகள் நிகழும் தருணங்களில் நமது வீட்டுக்கூரைகளில் மழை பெய்வது போன்ற சப்தமும் இலிங்கத்திலிருந்து கசியும் வியர்வையும், விசேடமாக அவதானிக்க கூடியதாக இருக்கின்றன. சிவபாலயோகி கொண்டு வந்த இலிங்கத்தை, சுவாமியவர்கள் மஹாசிவலிங்கம் என்று அழைப்பார். மேலும் இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் மூலதேவியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காயத்ரியம்மன் சிலையானது அருள்பாலிக்கும் நேரத்தில் பக்தர்களுக்கு உயிர்ப்புடன் காட்சியளித்த சம்பவத்தை சில இளைஞர்கள் கண்டுள்ளார்கள். ஸ்ரீ காயத்ரி தேவி சிலை தமிழகத்திலிருந்து, தாந்திர மஹாகாளி சிலை கேரளாவிலிருந்தும் பெறப்பட்டு சுவாமிஜியவர்கள் திருக்கரங்களால் 1996ஆம் ஆண்டு பிரதிஸ்டை செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மஹாசிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்படுவதற்கு முன் நடந்த சம்பவங்களை அநேக பக்தர்கள் விரிவாக எடுத்துக்கூறியிருக்கின்றார்கள். ஸ்ரீ சிவபாலயோகியால் தனக்கு வழங்கப்பட்ட சிவலிங்கத்தை, சுவாமிகள் கொழும்பு மாநகரில் தமக்கு வேண்டிய ஒருவரின் இல்லத்தில் தற்காலிகமாக வைத்துவிட்டு நுவரெலியாவில் அதற்கான ஆலயம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் சுவாமிகளின் தவவலிமையும் ஆன்மீக ஆற்றலையும் அநேகர் அறிந்திருக்கவில்லை.

சுவாமிஜி நுவரெலியாவில் ஆலயம் அமைக்க உத்தேசித்திருப்பதை அறிந்த சிலர் அவர்மேல் பொறாமை கொண்டு நிர்மாணப் பணிகளைத் தடுக்க முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதனால் கவலையடைந்த சிவபாலயோகியார் அந்த அரிய சிவலிங்கத்தினை மீண்டும் இந்தியாவிற்கே எடுத்துச் சென்றுவிட்டார். ஆனால் நமது முருகேசு சுவாமிகள் தனது முயற்சியை சிறிதேனும் கைவிடவில்லை. அவரின் அயராத வேண்டுதலினாலும் ஆன்மீக ஆற்றலினாலும் இந்தியாவிற்கு கொண்டு செல்லப்பட்ட சிவலிங்கம் மீண்டும் இலங்கைக்கு சிவபாலயோகியவர்களால் கொண்டுவரப்பட்டது. பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் சுவாமிகளுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி இதுவாகும்.

சுவாமிஜி, இலங்காதீஸ்வர ஆலய வேலைகளையும் ஸ்ரீ காயத்ரிபீட நிதியத்தின் அலுவல்களையும் நடாத்துவதற்கு ஒரு செயற்குழுவொன்றை நியமித்திருந்தார். வருடாவருடம் இக்குழுவினர் கூடி அங்கத்தவர்களை தெரிவுசெய்வது வழக்கமாக இருந்தது.

ஒருமுறை சுவாமிஜியின் வேலைகளுக்கு, அர்ப்பணிப்புடன் தன் பங்களிப்பினை அளித்து வந்த ஒரு புதிய அன்பருக்கு சுவாமிஜி முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பொன்றினை அளித்தார். பழைய அங்கத்தவர்களுக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் முறுமுறுத்தார்கள் சுவாமிஜி சிரித்துக்கொண்டே சீனியாரிட்டியை (அனுபவம்) விட சின்சியாரிட்டி (அர்ப்பணிப்பு) தான் முக்கியம் என்று சொன்னார்கள்.

ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமையினை உலகம் எங்கும் பரப்ப வேண்டும் என்ற எம் குருநாதரின் ஆன்மீக தாகம் இன்று இலங்கையில் பல பாகங்களிலும் மட்டுமல்லாது உலகின் பல நாடுகளிலும் காயத்ரி பீடங்களில் அமைய வழி வகுத்தது.

நாளடைவில் இலங்கையில் மலையகம் மட்டுமல்லாது, கொழும்பு, மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா பகுதிகளிலும் சர்வதேச மட்டத்தில் இந்தியா, அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, தென்னாபிரிக்கா, மலேசியா போன்ற நாடுகளிலும் காயத்ரி மகிமையை பிரவாகிக்கும் ஆசிரமங்கள் உருவாகின. சுவாமிஜி ஆஸ்ரமத்தின் கொள்கைகளை மிக எளிமையாக வகுத்துள்ளார். அவை வருமாறு:

தனக்குள் பொதிந்திருக்கும் தெய்வீக இயல்புகளை மனிதன் தூண்டியெழுப்பி கடவுளுடன் தொடர்புற வேண்டும். இறைவன் என்பது ஒரு தூய உணர்வாகும். அதுவே யாவற்றிலும் பரந்து காணப்படுகின்றது. இறைவன், ஆன்மா, சக்தி, சடம் என்பன முடிவில்லாதவைகள். கடவுளின் பிரசன்னத்தை தன்னில் உணர அமர்ந்திரு, உள்ளே செல், கடவுளைக் காண் என்ற நியதியில் சாதகம் செய்யலாம். பூசைகள் மூலமும் உபாசனைகள் மூலமும் ஒருபக்தன் ஞானகுருவிடமிருந்து முதலில் உபாசனா தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். முழுமையான உணர்வுடன் இறைவனை வணங்கினால் விரும்பிய விளைவினை அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் சாதனையைத் தொடங்குவதற்கு முன்னர் சிந்தனையை ஒருமுகப்படுத்த வேண்டும். ஆஸ்ரமத்தில் எவரும் வேண்டாதவர் எனக் கருதப்படுவதில்லை. ஒரு உண்மையான யோகியிடம் கற்கும் பொழுது குண்டலினி தானாகவே விழிப்படைந்து சாதகனுடைய யோகவழிக்கு உதவும். ஆச்சிரமம், விதியை வெல்லக்கூடிய வழிமுறைகளை விஞ்ஞான பூர்வமாக போதிக்கின்றது. ஒரு சாதகன் குடும்பஸ்த்தவராகவும், கடந்த காலத்தில் உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டவராகவும் இருக்கலாம்.

சுவாமி முருகேசு அவர்கள் மேற்கண்ட விதி முறைகளை, மனிதநேயம், கடமையுணர்வு அன்புவழி நின்று மிக இலகுவாக செயற்படுத்தி வந்தார். இன்று சுவாமியவர்கள் மகாசமாதியில் இருக்கும் தியான மண்டபமானது பதினென் சித்தர்கள் குடியிருக்கும் கோயிலாகவும் இருக்கின்றது. அத்துடன் இன்னொரு வியப்பூட்டும் நிகழ்வொன்றையும் குறிப்பிட வேண்டும். சிவபாலயோகியார் பிரதிஸ்டை செய்த சிவலிங்கம் ஆலயத்தில் பிரவேசித்தப் பின்னர், தொடந்து 280ற்கும் அதிகமான சிறியபெரிய லிங்கங்கள் ஆலயத்தை வந்தடைந்தன. இந்த லிங்கங்களில் பாதிக்கும்மேல் பல உலகநாடுகளை சென்றடைந்து அங்கிருக்கும் இலங்காதீஸ்வரர் கிளை ஆலயங்களில் குடிகொண்டுள்ளன.


அவ்விடங்களிலும் இலங்காதீஸ்வரப் பெருமானுக்கு பௌர்ணமி மற்றும் சிவராத்திரி தினங்களில் அபிஷேகத்துடன் கூடிய பெருவிழா நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் எம்பெருமானுக்கு பால் இளநீர் கொணர்ந்து தங்கள் கரங்களினால் அபிஷேகம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அத்துடன், பௌர்ணமி தினங்களிலெல்லாம் நடாத்தும் மகாயாகத்தில் பக்தர்களே ஆகுதி வழங்கவும் சுவாமிஜி ஏற்பாடு செய்து தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரி ஆலயத்தில் பக்தர்கள் கால்பதித்த மாத்திரத்திலேயே தமது சுயம் நீங்கப்பெற்று தெய்வீக காந்தசக்தியால் ஈர்க்கப்படுவதும் மனக்குறை நீங்கி ஆனந்த பரவசமடைவதும், சுவாமிகளின் அருளாசியால் துன்ப துயரங்கள் மறைவதும், கொடிய நோய்கள் விலகி மகிழ்ச்சியடைவதும் நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகளாகும்.

சித்தர்கள் இருக்கும் இடங்களில் தெய்வீக காந்தசக்தி இருக்கும். அதன் பிரபந்தத்தால் அங்குள்ள அனைத்தும் நலமடையும். நுவரெலியா ஸ்ரீலங்காதீஸ்வரர் ஆலயம் சித்தர்களின் தொடர்புடையது. அங்கும் அடிக்கடி மகரிஷிகள் சூட்சுமசரீரத்தில் விஜயஞ் செய்கின்றார்கள் என சுவாமிஜி கூறுவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (10) கிழக்கு மாகாணத்தில் காயத்திரி சித்தர்

இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் மட்டக்களப்பு நகரும் அதனையண்டியுள்ள ஏனைய கிராமங்களும் சுவாமிஜியின் விசேட அபிமானத்தைப் பெற்ற இடங்களாகும். 1990ம் வருடத்துக்குப் பின்னரே அவர் கிழக்கு மாகாணத்துக்கு அடிக்கடி விஜயங்களை மேற்க்கொண்டார். போகும் வழியில் தென்படும் நகரங்களான பண்டாரவளை, ஹல்தும்முல்லை , பதுளை ஆகிய இடங்களிலிலும் அவருக்கு அதிகமான பக்தர்களிருந்தனர். பாடல்பெற்ற திருத்தலங்களிலொன்றான கதிர்காமமும் இடையில் வருவதால் ஒரிருநாட்கள் அங்கும் தங்கி கிழக்கு மாகாண விஜயத்தைத் தொடர்வார். பெரும்பாலும் அவருடைய ஜனனதினம் வரும் நாட்களில் நிச்சயம் சித்தர் முருகேசு கதிர்காமத்தில் முருகனின் சன்னிதியில் இருப்பார் என்று அவருடைய நெருங்கிய அபிமானிகள் கூறியிருக்கிறார்கள். மற்றும் அவருடைய உடலுக்கு ஓய்வினையும் மனதிற்கு அமைதியையும் அளிக்க எண்ணி சிலபக்தர்கள் வழியில் பாசிக்குடா கடற்கரைக்கும் சிலசமயங்களில் அவரை அழைத்துச்செல்வார்கள்.

மட்டக்களப்பின் இயற்கை அழகுக்கு மேலும் பெருமை சேர்ப்பவை நகரில் அமைந்திருக்கும் அழகிய பரந்த ஏரிகளாகும். வெளிமாகாணங்களிருந்து செல்பவர்களுக்கு இந்த ஏரிகளின் நீரைத்தழுவி வீசும் இதமான தென்றல் இப்பகுதியின் உஷ்ணமான சீதோஷ்ண நிலையைத் தாங்க உதவிபுரியும். பொதுவாக அதிக வெய்யில் வாட்டும் பகுதியானாலும் வங்காள விரிகுடாவில் அடிக்கடி ஏற்படும் தாளமுக்கம் மட்டக்களப்பில் கடும் புயலையும் மழை வெள்ளத்தையும் ஏற்படுத்திவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மிகநீண்ட பாலங்களிலொன்றான கல்லடி லேடி மேனிங் பாலம் மட்டக்களப்பு ஏரியை ஊடறுத்துச் செல்லுகின்றது. பூரணைத்தினங்களில் இப்பாலத்தின் அடியில் ஏரியிலிருந்து மீன்கள் பாடல் இசைப்பதை கேட்கலாம் என கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. வியப்பூட்டும் சான்றாக இப்பாடல்களின் ஒலியை 1960ம் ஆண்டு கிறிஸ்தவக் குருவானவரான பிதா.லோங் அடிகளார் பதிவுசெய்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பினார். கிழக்குமாகாணத்தை ஆதிகாலந்தொட்டே பௌத்த சிங்களவர்கள் வாழ்ந்த இடம் என தற்போதைய இலங்கை அரசியல்வாதிகள் நிரூபிக்க முயன்றாலும் மட்டக்களப்பு தென்னிந்திய சைவத் தமிழ்மக்களும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே குடியேறி வாழ்ந்த இடம் என சரித்திரச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. மேலும் கேரளாவிலிருந்து வியாபார நிமித்தமாக வந்த மாப்பிள்ளை முஸ்லிம்கள் என அடையாளம் காணப்படும் இஸ்லாமிய சமூகத்தினரும் பெருமளவில் வாழ்கின்றனர். மலையாள மாந்திரீகத்துக்குப் பெயர்பெற்ற மட்டக்களப்பில் முஸ்லிம் மக்களின் தொகை கணிசமானது. கூடவே போர்த்துக்கேயரின் வழிவந்த “பட்டிகலோ பர்கர்” என இனங்காணப்படும் பறங்கியரும் இப்பகுதியில் இருக்கின்றனர். இவர்களுக்கே உரிய கப்ரிஞ்சா நடனம் மிகநளினமான ஆடற்கலையாகும். யாழ்நூல் எனும் தமிழ்ப் படைப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றிய இராமகிருஷ்ண மிஷன் துறவியான விபுலானந்த அடிகளார் இப்பகுதியில் பிறந்த பெருமகனாவார்.

மட்டக்களப்பு மான்மியம் என்னும் பெருநூல்பிரதேசத்தின் பெருமைகளை விரிவாகக் கூறுகின்றது.

குருநாதர் முருகேசு அவர்கள், 1987ஆம் ஆண்டு மகரிஷிகளின் ஆசியுடன், கிழக்கு மாகாணம் சென்று அம்பாரை மாவட்ட விவசாயக் கிராமமான திருக்கோயிலில் சின்னத்தோட்டம் என்னும் இடத்தில் ,ஒரு புராதன ஆலவிருட்சத்தின் நிழலில் காயத்ரி ஆலயம் ஒன்றினை அமைத்தார். இவ்வாலயம் உருவாக அயல் ஊரான தம்பிலுவிலைச் சேர்ந்த பக்தர்கள் சாம்பசிவம், மற்றும் செல்லம்மா ஆகியவர்கள் உறுதுணையாக இருந்தனர். சிலகாலஞ் செல்ல திருப்பழுகாமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் இரவீந்திரன் குடும்பத்தினர் அக்கரைப்பற்று-திருக்கோவில் வீதியை அண்டிய தம்பிலுவில் கடற்கரைப் பகுதியில் ஐந்து ஏக்கர் நிலத்தை காணிக்கையாக வாங்கியளித்தனர்.

தம்பிலுவில் காயத்ரி ஆலயமும் தபோவனமும் அவ்விடத்தில் உருவாகி இன்று அப்பகுதிவாழ் மக்களுக்கு அருளொளியளித்து வருகின்றன. காயத்திரி தபோவனத்தின் பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்களில் கந்தசாமி (கடலை) நடராஜா, ஆசிரியர் காயத்திரி-கதிர்வேல், கந்தராஜா, ஜானகியம்மாள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேலும் மட்டக்களப்பு புதுமுகத்துவாரத்தில் நாவலடிக் கடற்கரை அருகில், கட்டிடக் கலை நிபுணர்களையே வியக்க வைக்கும் சப்தரிஷிமண்டலக் கருவறையும் காயத்ரி ஆலயமும், தியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், மகாமேரு ஆலயம் என்பனவற்றையும் அமைக்க பலரும் சுவாமிஜியுடன் இணைந்து செயற்பட்டனர். இவர்களில் திருவாளர்கள் புண்ணியமூர்த்தி, இரவீந்திரன், செழியன் பேரின்பநாயகம், செல்வநாயகம், சிவபாதசுந்தரம் ,குணரத்தினம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இங்கு காயத்திரியம்மனை தரிசிக்கவரும் அநேக பக்தர்களுக்கு தேவி உயிர்ப்புடன் காட்சிதந்த சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. அதுவும் பக்திமார்க்கத்தில் கூடுதலான ஈடுபாடுகள் காட்டியிராத சிவலிங்கம் என்னும் அன்பர் ஒருவர் இந்த புண்ணியபூமிக்கு ஒருநாள் வந்தசமயத்தில் காயத்திரிதேவியவள் நிதர்சனமாக பிரதியட்சமான ஒரு அற்புத நிகழ்வை தனது குறிப்பொன்றில் எழுதியுள்ளார். கூடவே சுவாமிஜியின் விருப்பத்தின்பேரில் தனது கண்களால் கண்டு மனதில் நீக்கமற பதிவான அன்னையின் அத்திருவுருவை அதிகசிரத்தையுடன் நவீன டிஜிட்டல் உத்திகளை பாவித்து திரைச்சீலையில் வரைந்து நுவரெலியா காயத்திரியம்மன் ஆலயத்திற்கு காணிக்கையாகவும் சமர்பித்துள்ளார்.

சுவாமியவர்களின் தியானத்தில் ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மகரிஷி தோன்றி மட்டக்களப்பு சப்தரிஷிகள் மண்டல கருவறையின் மாதிரி வடிவமைப்பைக் காட்டினர். அத்துடன் இக்கட்டிடம் அமையப்போகும் நிலம் இருக்கும் இடத்தின் அடையாளத்தையும் சூட்சுமாகக் காட்டியிருக்கிறார்.

1997ம் வருடம் சுவாமி முதன் முறையாக மட்டக்களப்பு சென்று மார்ச் 13ம் திகதி சப்தரிஷிகள் மண்டலத்திற்கு அடிக்கல் நாட்டிநார் அனைத்துப் பணிகளும் பூரணமடைந்து 2004 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இங்குள்ள மகாமேருயந்திரம் 1200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோ எடையுள்ளது,. 64 தேவிகளின் சக்தி வெளிப்பாடு சப்தரிஷி மண்டலத்தின் மூலமாக நடைபெறுகிறது என குருநாதர் கூறுவார்.

இக்கட்டிடம் கட்டப்பட்ட நாள்களில் அமைவிடத்தில் அதிசயிக்கத்தக்க விதமாய் கருடாழ்வார் நடுவானத்தில் வந்து நின்று அவர் நிழல் பூமியில் பட்டவிதமாய் அமைந்த சம்பவத்தை இன்றும் அனேக அடியார்கள் நினைவு கூறுகின்றனர்.

அத்துடன் மட்டக்களப்பில் சப்தரிஷி மண்டலத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் இந்தியாவில் நடைப்பெற்ற ஒரு சம்பவத்தையும் குறிப்பிடவேண்டும். ஆந்திர மாநிலத்தில் வாசஞ்செய்த ஜெகத்குரு சித்தேஸ்வரநந்தாபாரதி சுவாமிகள் ஒருநாள் யாகம் வளர்த்து பூஜை செய்து கொண்டிருந்த போது யாகச்சுவாலையில் ஒரு ரிஷியின் உருவம் தோன்றியது. அங்கு குழுமியிருந்த பக்தர்கள் அந்த உருவைக் கண்டு மனம் குழம்பினர். பக்தர்களை அமைதிப்படுத்திய சித்தேஷ்வரநந்தா இவ்வுருவுக்குரியவர் இலங்கையைச் சேர்ந்த காயத்ரிசித்தர் முருகேசு எனக்கூறினார்கள். சிறிது நேரத்தில் காயத்ரிசித்தரின் உருவம் யாகசுவாலையிலிருந்து மறைந்துவிட அடுத்து அவ்விடத்தில் சித்தேஸ்வரநந்தா சுவாமிகளின் குருநாதர் மௌனகுரு சுவாமிகளும் தோன்றினார்.

அக்கினியில் தோன்றிய மௌனகுரு சுவாமிகள் இலங்கையில் மட்டக்களப்பில் முருகேசு சுவாமிகள் சப்தரிஷிகள் மண்டலம் ஒன்று எழுப்பியிருப்பதாகவும் தமது சீடன் சித்தேஷ்வரனந்தா சுவாமிகள் அங்கு சென்று அதன் கும்பாபிஷேகத்தை நடத்திக் கொடுக்கவும் ஆணையிட்டார். அக்கட்டளைப்படி சித்தேஷ்வரனந்தா சுவாமிகள் இலங்கை வந்து கும்பாபிஷேகத்தை நடத்தினார்.

கிழக்கு மாகாணத்தில் நமது காயத்திரி சித்தரின் பணிகள் இதன்பிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விரிவடைந்தன. நாளடைவில் நமது சுவாமிஜியின் விருப்பப்படி திருக்கோணமலையிலும், தம்பிலுவிலும் உருவான மருத்துவசாலைகள், சிறுவர்விடுதிகள, முதியோர்விடுதிகள் முதலியன அப்பகுதி மக்களின் தேவைகளை நிவர்த்திச் செய்தன. சுவாமிகளின் இம்முயற்சிகளுக்கு பக்த அன்பர்கள் பலரும் உறுதுணையாக நின்றனர்.

காயத்திரி சித்தர் ஆலயங்களை மயானங்களுக்கு அயலிலேயே நிர்மாணித்துள்ளார்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக் கொண்டாட்டங்களையும் விசேட யாகப்பூஜைகளையும் தம்பிலுவில் கடற்கரையில் நடத்துவார்.

-திருகோணமலையில் விஸ்வபத்திர கோணேஸ்வர ஆலயத்தில் 2002ம் ஆண்டு காயத்திரி பூஜையும் குருவழிபாடும் ஆரம்பமாயிற்று. காலக்கிரமத்தில் பக்தர் சண்முகராஜா உடையார் கன்னியாவிலுள்ள தனது ஐந்து ஏக்கர் நிலத்தை காயத்திரி பீடத்துக்கு காணிக்கையாக அளித்தார். அதன் பின் சைவசமய பக்தர்களுடன் கிறிஸ்தவ அன்பர்களும் இஸ்லாமிய நண்பர்களுங்கூட ஆலயம் அமைக்க நிலத்தை சமப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். திருவாளர்கள் இலங்கானேசன், வாசுதேவன், சத்தியனாதன், உதயன், அன்டனி ஆகியோருடன் காயத்திரிபீட அறங்காவலர் சபை உருப்பினர் வேல்மாணிக்கம் திருகோணமலை ஆத்மயோகஞானசபை கட்டிடங்களை நிர்மாணித்து நடத்துகின்றார்,

காயத்திரி சித்தர் முருகேசுவை உலுக்கியெடுத்த பேரதிர்ச்சி ஒன்றும் கிழக்கு மாகாணத்திலேயே காத்திருந்தது. 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி பூரணைத்தினத்தன்று சுனாமி ஆழிப்பேரலை உலகை அதிரச்செய்தது. இந்தியாவின் கரையோரப் பகுதிகள் இந்தோனேசியா மற்றும் இலங்கையில் தென்கிழக்குப் பகுதிகள் மிகமோசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். உடமைகள் பல அழிந்தன. சங்க இலக்கியத்தில் பூம்புகார் நகரை அழித்த கடற்கோளை பற்றி வாசித்து மட்டுமே அறிந்த மக்கள் அதனை நிஜத்திலும் அனுபவித்தனர்.

சுவாமிஜி அவர்கள் மிகவும் மனம் நொந்துபோனார். நுவரெலியாவிலிருந்து தனது பக்தர்க் குழுவுடன் மட்டக்களப்பு பகுதிகளுக்குச் சென்று அணர்த்த நிவாரண வேலைகளில் ஈடுபட்டார். குடும்பங்களை இழந்து தவித்த தனிமனிதர்களின் குறைகளைக் கேட்டார். மனைவி, கணவன் மற்றும் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் இழந்து தவித்த குடும்பத்தினரை ஆறுதற்படுத்தினார். உணவு, உடை,மருந்து , மற்றும் பொருட்கள் சேகரித்து துயருண்ட மக்களுக்கு உதவினார். அவரால் மனநிம்மதியும் பொருளுதவியும் பெற்ற மக்கள் அநேகர்.

பக்தர் தயாளராஜா மகரிஷி முருகேசு இயற்கை அனர்த்தங்களையும் தவிர்க்கக் கூடிய சக்தி வாய்ந்தவர் என்பதை வலியுறுத்துவார். அவரின் யாகவேள்விகளுக்கு அரசு கூடிய ஆதரவு வழங்கியிருந்தால் இலங்கை நாட்டின் அனேக பிரச்சனைகளை தீர்த்திருக்கலாம் என்றும் சொல்வார். இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய நீலத்திருக்குவளை ஒன்று சுவாமிஜிடம் இருந்தது என்று நம்பப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 மக்கள் பணியே மகேசன் சேவை

சுவாமிஜியின் பக்தர்களாகவும் நண்பர்களாகவும் மற்றும் அபிமானிகளாகவும் அநேகர் இருந்தனர். சுவாமிஜி தனது அபிமானிகளின் மூலமாக அநேக சமூகப்பணிகளை ஆற்றிவந்தார். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் கர்னல் மாணிக்கராசா ஜெயக்குமார் ஆவார். பல தேயிலைத் தோட்டங்களுக்கு நிர்வாகியாகவும் கூடவே இலங்கை இராணுவத்தின் நுவரெலியா மாவட்டக் கட்டளையதிகாரியாகவும் இவர் பணியாற்றி வந்தார். இவருடைய துணைவியார் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். 1983 ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களிலும் 1989 இல் நடந்த தீவிரவாதப் பிரச்சினை சமயங்களிலும் சுவாமிஜியின் ஆசியுடன் இவர் பெரும் பணியாற்றினார். சுவாமிஜி அவர்கள் மகாசமாதி அடைவதற்கு பல வருடங்களுக்கு முன்னரே நான் நிரந்தரமாக தங்கப்போகும் இடம் என தற்போது அவர் சமாதியிலிருக்குமிடத்தை அவரே அடையாளங் காட்டிய சம்பவத்தை ஜெயக்குமார் நினைவு கூறுவதுண்டு.

1983ல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் மகரிஷியை மிகவும் மனச்சஞ்சலத்தில் ஆழ்த்தியது. இக்கலவரத்தில் ஆலயம் அமைந்திருந்த நுவரெலியா பகுதியிலும் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. மக்கள் அல்லோலக் கல்லோலப்பட்டனர். ஆலயத்தின் அயல் கிராமத்தில் கூட பதின்மூன்று தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்நாட்களில் சுவாமிஜி அமைதி காத்து தியானம் புரிந்து தன்னைச் சூழ இருந்தவர்களுக்கு தைரியம் ஊட்டிக் கொண்டிருந்தார் இச்சந்தர்ப்பங்களில் சுவாமிக்கு மிக நெருங்கிய சிங்கள அன்பர்கள் பலரும் நுவரெலியா மாவட்ட அரச அதிபரும் உறுதுணையாக இருந்தனர்.

மகரிஷி முருகேசு தென்னிந்தியாவில் பவானி நகரில் செயற்ப்பட்டு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தின் சக்தி நிலை சங்கத்தினரின் ஆலோசகர்களில் ஒருவராவார். இச் சங்கத்தின் ஸ்தாபகர் ஞானத்தந்தை சுப்பிரமணியம் அவர்களுடன் சுவாமிஜி நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

சுவாமிஜி கலைஞர்களிடமும் பேரன்பும் மிக அபிமானமும் கொணடவர். உலகம் புகழும் கலைஞர் இசைஞானி இளையராஜா சுவாமிஜியுடன் மிகநெருங்கிய தொடர்பை வைத்திருந்தார். இளையராஜா தனது மிகக்கடினமான பணிகளுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கி, இலங்கை வந்து இலங்காதீஸ்வர ஆலயக் கும்பாபிஷேக திருப்பணிக்காக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேசமண்டபத்தில் இசை நிகழ்ச்சியொன்றை அளித்தமை நினைவுகூறத்தக்கது.

சுவாமிஜியின் கொழும்பு வாசஸ்தலத்தின் அருகில் வாழ்ந்த பௌத்த அயலவர்களான பராக்கிரம, வட்டறக்க, விஜயரட்டன, போன்ற பக்தர்கள் ஏனைய சிங்கள சமூகத்தினர் மத்தியில் சுவாமிஜியின் புகழைப் பரப்பினர். தூரத்து காலி மாவட்ட பகுதிகளிலும் காயத்திரி என்ற பௌத்த யுவதியொருவர் குருதேவரின் மிக அன்புக்குரிய பக்தையாக இருந்தா. சுவாமிஜி பௌத்த மத கோட்பாடுகளை மிக மதித்ததோடு அச்சமயத்தைச் சார்ந்த துறவிகளுடனும் மதபீடங்களுடனும் நெருங்கிய நட்பினை பாராட்டி வந்தார். தனது ஆசிரமத்தில் உருவாக்கிய புத்தபகவானின் உருவச்சிலை ஒன்றினை மடுல்சீமையில் உள்ள பௌத்த ஆலயத்தின் குருவான ஞானஸ்ரீ அவர்களுக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்.

சுவாமிஜியின் தீவிர பக்தரான ஹல்துமுல்லை தோட்டநிர்வாகி சண்முகம் என்பவரும் சுவாமிஜியின் பணிகளுக்கு மிகவும் உறுதுணையாயிருந்தார்.

இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளில் சுவாமிஜிக்கு அவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காயத்திரி குடும்பத்தினர்
(பெண்கள்)



தாந்திர மஹாகாளி
முன்னிலையில்




அறங்காவலர் குழுவினர்
(யாகபூஜை)



காயத்திரி குடும்பத்தினர்
(ஆண்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்மயோக ஞானசபா மண்டபம்
திருகோணமலை



மகாமேரு யந்திரம்
நாவலடி - மட்டக்களப்பு



சப்தரிஷி மண்டலம்
நாவலடி - மட்டக்களப்பு



தம்பிலுவில் காயத்திரி குடும்பத்தினர்
கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாடு இல்லையென்றாலும், தன்னை அணுகும் அரசியல்வாதிகளை சுவாமிஜி மதித்து வந்தார். உலகப்புகழ்ப் பெற்றத் தொழிற்சங்கவாதியும் அரசியல் பிரமுகருமான சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களும் கூடவே இலங்கையின் அன்றைய ஜனாதிபதிகள் அனைவரும் சுவாமிஜியை மிக அறிந்தவர்களாக இருந்தனர். சுவாமிஜி தமது மனதில் படும் உண்மைகளை ஆணித்தரமாக எடுத்துரைப்பார். ஒரு சிலரை அவரின் வெளிப்படையான கருத்துகள் சங்கடப்படுத்தினாலும் அவர்கள் சுவாமிஜியை மிகவும் மதித்து வந்தனர்.

ஒரு சமயம் அன்றைய இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஒரு அம்மையாரின் சகோதரர் இலங்காதீஸ்வரர் ஆலயத்திற்கு வந்திருந்தார். பூஜையின் முடிவில் சுவாமிஜி கபினட் அமைச்சரான அந்தப் பிரமுகரை நோக்கி ," வடக்கு கிழக்கில் நடக்கும் தேவையற்ற இந்தப் போரை உடனே நிறுத்த உனது அக்காவிடம் கூறு ! என்று வலியுறுத்தினார்.

சுவாமிஜி மலையகத் தேயிலைத்தோட்ட தொழிலாளர்களின் சுபீட்சத்துக்காக பெருந்தாகம் கொண்டிருந்தார். மலையக சமூகத்தினரின் குடும்பத்தில் சுகவாழ்வு, பொருளாதாரநிறைவு, சமூக அபிவிருத்தி, கல்வியறிவு, அதற்கும் மேலான ஆன்மீக நிறைவினை அவர் வலியுறுத்தி தனது உரைகளிலும் எழுத்திலும் வெளிப்படுத்தி வந்தார். தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளையும் உன்னிப்பாக கவனித்து அறிந்து கொள்வார். சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவற்றின் தலைவர்களை தனது பேச்சாற்றல் மூலமாக நெறிப்படுத்தவும் தவறியதில்லை.

சுவாமிஜி இயற்கை விவசாயம் செய்பவர்களுடனும் மிக ஈடுபாடுள்ளவர். சுவாமிஜியுடனான தொடர்பை மிக நெருக்கமாக ஏற்படுத்திக் கொண்டவர்கள் ஊவாமாகாண பகுதியில் வாழ்ந்த ஒரு தாழிலார்கள் அனைவரும் சுவாமிஜியினால் ஈர்க்கப்பட்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலைச் சமூகத்தினராகும். அதன் நிர்வாக அதிகாரி முதல் உத்தியோகத்தர், தொழிலாளர்கள் அனைவரும் சுவாமிஜியினால் ஈர்க்கப்பட்டவர்கள்.

1992ம் வருடம் அந்தத் தோட்ட நிர்வாகத்தினர் தொழிளாளர்களுக்கான அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கும் பொழுது, அத்தோட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. தேயிலைப்பயிர் காடுமண்டியிருந்தது. தொழிலாளர்கள் மதுவெறியும், வறுமையும், சுகாதாரமின்மையும் நிறைந்து அவதியுற்றிருந்தார்கள்.

அவர்களுடைய வாழ்வை அபிவிருத்தி செய்ய எடுத்த முயற்சிகளுக்கும் அனேக தடைகள் ஏற்பட்டன. அங்கு பணிபுரிந்த சமூக சேவகர் ஒருவர், சுவாமிஜியை இங்கு அழைத்து வந்து அவருடைய திருப்பாதங்களை இவ்விடங்களில் பதியச்செய்வோம், அவரை இம்மக்களுக்கு ஆசிமொழியும் வழங்கச் செய்வோம். அதன்பின் நடப்பதை பாருங்கள் என்று சொன்னார். அதன்படி 1993ல் நடந்த சுவாமிஜியின் வருகையாலும் அவரளித்த நல்வாக்கினாலும் அச் சமூகத்தினரின் வாழ்வில், இலட்சுமியும் சரஸ்வதியும் குடியமர்ந்ததை இன்று வியப்புடன் காணலாம்.

இச்சமூகம் சுவாமிஜியின் ஆசியால் 150 வருடங்களாக ஏனைய மலையகத்தினர் பெறமுடியாத அவிபிருத்தியை 10 வருடங்களுக்குள், அடைந்தது. தேயிலை சமூகங்களுக்கே முன்மாதிரியான ஒரு சமூக அபிவிருத்தி அமைப்பும் சுவாமிஜியின் ஆசியினால் உருவானது. ஓவ்வொரு புது வருடமும் முதல் நாளன்று, இந்த தோட்ட மக்கள் சிங்கள கிராமத்தவர்களுடன் சேர்ந்து இன,மத,பேதம் பாராது நுவரெலியா இலங்காதீஸ்வர ஆலயத்திற்கு யாத்திரையாக சென்று அதிகாலமே சிரமதானப் பணியில் ஈடுபடத்தொடங்கிவிடுவார்கள். அந்நேரத்தில், ஆலயத்தையொட்டியுள்ள தியான மண்டபத்தில் சுவாமிஜி யாகபூஜையை நடத்திக்கொண்டிருப்பார். சுவாமிஜியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமாக இருந்த ஒரு சில பக்தர்களுக்கு யாகம் நடக்கும் வேளையில் ஒரு கூட்டம் சிரமதானம் செய்வது உசிதமாகப் தெரியவில்லை. அதனை அவர்கள் சுவாமிஜியிடம் முறையிட்டனர். சுவாமிஜி சிரித்துவிட்டு அவர்கள் வேறொரு இடத்தில் சிரமதானம் செய்வதும் எனது யாகத்துக்கு ஒரு பங்களிப்புத் தான் என்று கூறினார். எந்தவொரு காரியத்தையும் மிக யதார்த்தமாக பார்ப்பதில் சுவாமிஜிக்கு இணை அவரே தான்.

சுவாமிஜியின் கிழக்கு மாகாண விஜயத்தின்போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் இன்னொருவர் நினைவு கூர்ந்தார். சுவாமிஜியின் தீவிரபக்தர்கள் பலர் ஒன்றுகூடி தமது ஆலயத்தில் ஏற்பாடு செய்திருந்த ஒரு மாபெரும் வைபவம் நடந்த நேரம்.அத்தருணத்தில் அந்த வெகுதீவிர பக்தர்கள் நண்பர்கள் ஊர் பெருமக்கள் புடைசூழ ஆலய வாசலில சுவாமிஜியை வரவேற்க குழுமி இருந்தனர். அனைவர் உள்ளத்திலும் சொல்லிலும் செயலிலும் காயத்ரி சித்தரை காணப்போகும் பரவசமும் பதட்டமும் பொங்கி வழிந்துக் கொண்டிருந்தன.

சுவாமிஜி குறிப்பிட்ட நேரத்தில் வாகனமொன்றில் வந்திறங்கினார். பாதபூஜை, கும்பாராதனை செய்து வரவேற்பதற்கு ஆலய வாசலில் ஒரு விஷேடக் குழுவினர் பெருமிதத்துடன் காத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவரோ அவர்களைப் பொருட்படுத்தாமல் ஆலயத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த வேலியைத் தாண்டி அயலிடம் ஒன்றுக்குள் போய்விட்டார்.


அங்கிருந்த அனைவரும் அவ்வேளையில்தான் வேலிக்கு அப்பால் வைபவத்துக்கு அழைக்கப்படாத ஏழைகளும் பாமரர்களுமான ஒரு பெரியகூட்டத்தினர் நமது சுவாமிஜியின் தரிசனம் வேண்டி ஒரு குழந்தைகளின் துடிப்புடனும் எதிர்பார்ப்புடனும் காத்திருப்பதைக் கவனித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா ஏற்பாட்டாளர்கள் செய்ய மறந்துவிட்ட அக்காரியத்தை அன்னை காயத்ரி தனது மகன் முருகேசு சித்தர் மூலமாக அக்கணத்தில் செய்தாள். அந்த பக்த ஏழை அடியார்களை சுவாமிஜி வருந்தி தனது வைபவத்துக்கு அழைத்து அவர்களுடனே கூட ஆலயத்திற்குள் பிரவேசித்தார். முடிவில் அந்த விழா மிக வெற்றிகரமாக நடந்தேறியது.

- சுவாமிஜியின் விருந்தோம்பல் பண்பினை வியக்காதர்களே இல்லையெனலாம். தன்னைத் தேடி வருபவரெவர்களையும் அவர் உபசரிக்கும் பாங்கே அலாதி. வந்தவர்கள் திரும்ப விடைபெறும்போது தினமும் என்னிடம் வந்து போங்கப்பா என்று கூறி ஆசிர்வதித்து அனுப்பி வைப்பார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 தெய்வமனிதர்

ஒரு சுவாரஸ்யமான சம்பவம் . ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, கிறீஸ்தவ அன்பர் ஒருவர் காலைநேரத்தில் சுவாமிஜியை சந்திக்கச் சென்றார். சுவாமிஜி அவரை அன்றைய முழுநாளும் தன்னுடனேயே தங்குமாறு வலியுறுத்தினார். அந்த மனிதர் அன்று தான் தேவாலயத்திற்கு சென்றிருக்கவில்லையே என்ற நெருடலுடன் அமர்ந்திருந்தார். இரவு உணவருந்தும் நேரம் வந்தது. பெரும்பாலும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் நமது குருதேவர் பக்தர்களுக்கு தன் கைகளாலேயே உணவு பறிமாறுவார். அன்றைய இரவு அவர் சுடப்பட்டிருந்த கோதுமை ரொட்டியை குழம்பில் தேய்த்து அந்த அன்பரிடம் கொடுத்து “ இது உங்கள் தேவாலய திருவிருந்து – ஹோலி–கம்யூனியன், இராப்போஜனம்- எனக் கூறி சாப்பிடச் சொன்னார்கள். குருநாதர் முருகேசுவை நேசிப்பவர்களை அவர் கண்கள் எப்போதும் மேற்பார்வை செய்து கொண்டிருக்கும் என்பதற்கு ஆதாரமாக இப்படியான எத்தனையோ அற்புதங்கள் நூற்றுக்கணக்கில் நிகழ்ந்து கொண்டேதான் இருந்தன.

மகரிஷியவர்கள் சமாதியடைந்து மறு ஆண்டில் அவர் நினைவாக காயத்திரி சித்தர் ஸ்ரீமுருகேசு மகரிஷி அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு மிகச்சிறப்பாக நடைப்பெற்று வருகின்றது. சுவாமிஜிக்கு குழந்தைகள் சிறுவர்கள் என்றால் அலாதிப்பிரியம். அவர்களுடன் சேர்ந்து குறும்பு கிண்டலுடன் பேசிக்கொண்டிருப்பார். பெரியவர்கள் யாரும் அந்தவேளையில் குறுக்கிடமுடியாது. 1975 ஆண்டுக்குப் பின் நுவரெலியா காயத்திரி ஆலயம் நிர்மாணிக்கப்படும் சமையத்திலும் பெரும்பாலும் சிறுவர்களும் இளைஞர்களுமே தளம்வெட்டுவது போன்ற அடிப்படை வேலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துமுடித்தார்கள் என்பார்கள். தின்பண்டங்களும் தேநீரும் பகலுணவும் சுவாமிஜியால் அவர்களுக்குத் தாராளமாக வழங்கப்பட்டதை பெரியவர்களான பின்னும் இன்றும் நினைவுகூர்ந்து மகிழ்வார்கள்.

சுவாமிஜி எதனையும் மிக யதார்த்தமாக சிந்திப்பார். பலருக்கு அவருடைய சிந்தனைகளும் செயலும் புதுமையாகவும் கொஞ்சம் வித்தியாசமாகவும் பட்டாலும் அவருடைய பாணியே தனிதான். சுவாமிஜியின் சன்னிதானத்திற்கு அடிக்கடி வந்துபோகும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனின் செயல்களில் திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. படிப்பிலும் விளையாட்டிலும் சிறுவர்களுக்கேயுரிய ஏனைய பொழுதுபோக்குகளிலும் கவனஞ்செலுத்திக்கொண்டிருந்த அவன் அடிக்கடி தனிமையை நாடத்தொடங்கினான்.

பூஜையறையில் நெடுநேரம் செலவிடுவதும் ஆலயத்துக்கு வந்தால் அங்கேயே தங்கவிரும்புவதுமாக அவனுடைய நடவடிக்கைகள் அமைந்திருந்தன. அவனுடைய பெற்றோர்கள் ஆரம்பத்தில் அச்சிறுவனைப் பற்றி குருதேவரிடம் சொல்லத் தயக்கம் காட்டினார்கள். ஒருவேலை எங்கே நமது சுவாமி அவனை ஆஸ்ரமத்தில் தன்னுடனே இருக்கச் சொல்லிவிடுவாரோ என்றுகூட நினைத்தனர். எனினும் பையனின் பக்திமார்க்க நடவடிக்கைகள் அளவுக்கு மிஞ்சிவிடவே ஒருநாள் தயக்கத்துடன் சுவாமிஜியின் காதில் சங்கதியைப் போட்டுவைத்தனர். சுவாமிஜி கொஞ்சநேரம் மௌனமாகவிருந்துவிட்டு அவனைப் பார்த்து கேலியாக வாய்விட்டுச் சிரித்தார். தனது அறையினுள் சென்று கொஞ்சம் விபூதியை கொண்டுவந்து அவன் நெற்றியில் தாராளமாகப் பூசினார். அன்றுமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்குடும்பத்தினர் வீடு திரும்பியபொழுது மகன் செய்த முதல் காரியம் டெலிவிஷன் பெட்டியின் முன் அமர்ந்து நாடகம் பார்த்ததுதான். அடுத்த நாள்முதல் அவனுடைய நடவடிக்கைகள் வழமைப்போல் ஒரு சிறுவனுக்கு உரியதாக மாறின. சுவாமியவர்கள் எப்போதுமே தனது பக்தர்களை கண்முடித்தனமான பக்திமார்க்கத்தில் ஈடுபாடு காட்ட அனுமதிப்பதேயில்லை. மதபக்தியைவிட குடும்ப ஐக்கியமும் அன்புணர்வுமே அவசியம் என வலியுருத்துவார்.

மனிதநேயத்துக்கு மாறான எந்த மதக்கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளவேமாட்டார். பௌத்தர்கள் என தம்மை அடையாளங் காட்டிக் கொள்ளும் பலரின் இனத்துவேசத்தையும் பெரும்பாலான இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் நியாயப்படுத்தும் மதவேறுபாட்டையும் அநேக இந்துக்களிடையே புரையோடிக்கிடக்கும் சாதிப்பிரிவினைகளையும் கேலிசெய்வது மட்டுமல்லாது கடுமையாக விமரிசிக்கவும் தவறமாட்டார்.

ஒரேநேரத்தில் பலவிடங்களில் நமது மகரிஷி முருகேசு தனது பக்தர்களுக்கு தரிசனந்தந்த சம்பவங்கள் பல உள்ளன. விசேடமாக பூரணைத்தினங்களில் அவர் நுவரெலியாவில் யாகபூஜைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அதேவேளையில் மட்டக்களப்பிலும், தம்பிலுவிலும் திருகோணமலையிலும் கொழும்பிலும் ஏன் பலவெளிநாடுகளிலுங் கூட, எங்களுடனும் இருந்தாரே என்று வியப்புடனும் பரவசத்துடன் பல அன்பர்கள் சாட்சிபகர்ந்திருக்கிறார்கள். இலங்கையில் மலையகப் பகுதிகளில் உள்ளூராட்சி செயலாளராக பணிபுரிந்த செல்வராஜவர்களும் துணைவியார் புஷ்பாவும் குருநாதரின் நீண்டக்கால் பக்தர்கள். இவர்களிருவரும் தங்களுடைய மகளின் திருமணவைபவத்தை தமிழகத்தில் நடத்த ஒழுங்குகள் செய்திருந்தார்கள்.

அவர்கள் நமது சுவாமிகளும் கட்டாயம் மணநாளன்று இந்தியாவில் தங்களுடன் இருக்கவேண்டுமென பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியிருந்தார்கள். திருமண அழைப்பிதழை அவரிடம் கையளிக்கவந்த மணப்பெண்ணிடம் நான் உனது மணநாளில் அந்த மண்டபத்தில் சமூகமளிப்பேனென உறுதியளித்திருக்கிறார். திருமணநாள் வந்தது. எனினும் அச்சந்தர்ப்பத்தில் நமது குருதேவர் பிரயாணஞ்செய்யும் நிலையிலிருக்கவில்லை. சுவாமிஜி தமிழகம் போகாமல் இலங்கையில்தான் இருந்திருக்கிறார்.

ஆனால் திருமாங்கல்யம் முடித்து விருந்துநடக்கும் சமயத்தில் நீண்டத்தாடியுடனும் உருத்திராட்ச மாலையுடனும் ஒரு பெரியவர் வந்து செல்வராஜின் அருகிலமர்ந்து அவரைப் பார்த்த புன்னகைத்தபடி உணவருந்தியிருக்கிறார். போசனவேளை முடிந்தவுடன் செல்வராஜ் அப்பெரியவரிடம் பேசவிரும்பித் தேடியபொழுது அவரைக் காணவில்லை. யோசனையில் ஆழ்ந்த செல்வராஜவர்களுக்கு அந்தப் பெரியவரின் முகம் மனக்கண்ணில் தெளிவடையத் தொடங்கியது. நுவரெலியா யாகமண்டபத்தில் இருக்கும் ஈஸ்வரபட்டர் மகரிஷியின் உருவப்படம் நினைவுக்கு வந்தது. தன்னால் சமூகமளிக்கவியலாத அந்த வைபவத்திற்கு தனது ஆன்மீக சகோதரனான ஈஸ்வரபட்டரை நமது குருதேவர் அனுப்பியிருப்பதை மணப்பெண்ணின் பெற்றோர் அறிந்துகொண்டார்கள்.

துர்த்தேவதைகளின் பிடியில் அவதியுற்ற ஒரு இந்தியாவைச் சேர்ந்த ஒரு இளம் பெண்மணியின் அனுபவம். அத்தீயசக்திகள் அவளை மிகவும் அலைக்கழித்து, பலதடவைகள் நெருப்பில் தள்ளியும் மாடியிலிருந்து குப்புறவிழவும் செய்திருக்கின்றன மகரிஷியிடம் அப்பெண்ணின் உறவினர்கள் மிகுந்த கவலையுடன் முறையிட்டனர். சுவாமிஜியின் அருளால் அப்பெண் அக்கட்டிலிருந்து விடுதலையடைந்து இன்றும் நலமாக வாழ்கிறாள். இப்படியான அருட் சம்பவங்கள் பல நூற்றுக்கணக்கில் நடந்துள்ளன.

ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. மனிதநேயம்

மகரிஷி முருகேசு மனிதநேயமிக்கவர். அநேகர் கடவுளுக்கு மிகநெருக்கமாக சீவித்தாலும் மனிதர்களிடமிருந்து அதிக தூரத்தில் இருப்பார்கள். ஆனால் நமது குருநாதர் மக்கள்சேவையே மகேசன்சேவை என்பதனை தனது சொல்லாலும் செயலாலும் நிருபித்து வந்ததார். அதனைப் பிரதிபலிக்கும் பலநிகழ்வுகளில் பின்வரும் சம்பவம் நடந்ததை பக்தரொருவர் நினைவுகூர்ந்தார்.

1999ம் ஆண்டில் பதுளைப் பகுதியில் சுவாமிஜியின் நெருங்கிய அபிமானியொருவரின் வீட்டுக்கருகிலிருந்த ஆலயத்தில் யாகபூஜையொன்று நடந்தது. அங்கு குழுமியிருந்த அநேக ஏழை பக்தர்களுக்கு சுவாமிஜியின் தரிசனம் மிக மகிழ்வைத் தந்தது . பூஜை நிறைவேறிய பின்பு அந்த பணக்கார பக்தரின் வீட்டுக்கு சுவாமி பகலுணவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு மிக தடல்புடலாக சுவாமிஜிக்கு விருப்பமான உணவு பதார்த்தங்கள் தயாராகிக் கொண்டிருந்தன. சுவாமிஜியின் முழு ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளவும் அவர் மனதில் விஷேட இடம் பிடித்துக்கொள்ளவும் அவ்விடத்தில் உள்ள அனைவரும் முயல்வது சுவாமிஜிக்கு தெரிந்தது.

நமது குருநாதர் சற்று முன் நடந்த யாகபூஜை ஏற்பாட்டாளரை அழைத்து ஆலயத்தில் இருந்த அந்த ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதா எனக் கேட்டார். அவர்கள் இல்லை என மன்னிப்புகோரி விழித்த போது " எனக்கு நீங்கள் கொடுப்பது விருந்து. ஆனால் அந்த ஏழை எளியவர்களுக்கும் தூரந் தொலைவிலிருந்து வந்தவர்களுக்கும் சோறும் இரசமும் கொடுத்தாலே அது மகேஸ்வர பூஜை ஆகியிருக்கும். எனக்கு விருந்து செய்யும் ஆர்வத்தில் மகேஸ்வரபூஜை செய்த புண்ணியத்தை இழந்து விட்டீர்களேயப்பா!'' என்றாறார்.

சுவாமிஜி கொல்லாமை, புலால் உண்ணாமையை வலியுறுத்துபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அவைகளுக்கும் மேலாக மனிதநேயத்தை அவர் அனுஷ்டித்து வருபவர் .

சுவாமிஜியின் அன்புக்கு மிகப்பாத்திரமான ஒருவர் புலால் உண்ணாதவர். கூடவே மாமிச உணவு உண்பவர்களை தாழ்வாகவும் நினைப்பவர்.

சுவாமிஜி மற்ற ஊர்களுக்கு விஜயஞ் செய்யும் சமயங்களில் நுவரெலியாவில் இருக்கும் தனது அயலவர்களில் ஒரு இளைஞர்க் குழுவை தன்னுடன் சேர்த்துக் கொள்வார். இவர்கள் அவ்வளவு கல்வி அறிவுடையவர்கள் அல்ல. மேலும் மிக வறிய குடும்பத்தில் பிறந்தவர்கள். நாட்கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளிகளின் பிள்ளைகள். ஒரு நாள் பகல் நேரம். சுவாமிஜிக்கும் கூடவந்தர்களுக்கும் உணவு தயாரகிக் கொண்டிருந்தது. திடீரென்று சுவாமிஜி புலால் உண்ணாத அந்த அன்பரிடம், ஆறு நூறு ரூபா நோட்டுக்களைக் கொடுத்து இந்த பையன்களுக்கு ஒட்டலில் உணவு வாங்கி கொடுக்கச் சொன்னார்.

அவ்வன்பர் சுவாமிஜி! ஓட்டல் சாப்பாடு எதற்கு? இன்னும் சிறிது நேரத்தில் இங்குதான் அறுசுவை உணவு கிடைக்குமே என்றார். சுவாமிஜி கேலிச் சிரிப்புடன் உங்கள் வடை, பாயாசம் வாழைக்காய்ப் பொரியல், தயிர்ப்பச்சடி எல்லாவற்றையும் அந்தப்பசங்கள் ருசிக்கமாட்டார்கள். முடியுமானால் அவர்களை ஒரு இஸ்ஸாமிய ஹோட்டலுக்கு அனுப்பி உணவருந்த வையுங்கள். அவர்கள் நாயன்மார்களப்பா! கண்ணப்ப நாயன்மார்கள் என்று கூறிச் சிரித்தார்கள். மகரிஷியுடன் நெடுங்காலம் வாழ்ந்த நண்பர்களும் குடும்பத்தினரும், அவரை உரிமையுடன் அண்ணா எனவே அழைப்பார்கள். அவர்களில் அநேகர் சுவாமிகள் தம்மிடம் காட்டியப் பரிவை இன்றும் நன்றியுடன் நினைவு கூறுவதுண்டு. .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 உலக ஞானி

உலக ஆன்மீகப் பாராளுமன்றத்தினர் நமது சுவாமிஜியை தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்து கௌரவப்படுத்தினர். சுவாமிஜியின் உலக ஆன்மீகப் பாராளுமன்ற கலந்துரையாடல் வேளைகளில் அவருடன் இருந்தவர் திருமதி. கதிரவேல்பிள்ளை என்னும் வைத்தியராவார்.

1994 ஏப்ரல் 7ம் திகதி இல் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆன்மீகப் பாராளுன்றம் (விஸ்வ உணாயன் ஷம்சாட்) கூடியபொழுது, 171 நாடுகளிலிருந்து பிரசித்திப்பெற்ற ஆன்மீக ஞானிகள் பலரும் வருகை தந்திருந்தனர். அவர்கள் தாம் கற்றறிந்த அனேக சாதனைகளை சபையினருக்கு நேரடியாக நிருபித்துக்காட்டினர் . ஒருவர் ஆகாயத்தில் பறந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். மற்றுமொருவர் ஒரு சடலத்திற்கு உயிருட்டி நடமாடச் செய்தார். இன்னொருவர் பிரமாண்டமான மாளிகையொன்றை கண்ணிமைப்பதற்குள் கட்டியெழுப்பினார். சுவாமி முருகேசு அவர்கள் எவ்வித சித்துக்களையும் காட்டி தன்னை நிருபிக்க விரும்பாமல் ஆன்மீக உரையொன்றினை மட்டும் மிகச்சுருக்கமாக ஆற்றினார்.

இறுதியாக அவ்வருடத்திற்கான உலக ஆன்மீகத் தலைவரைத் தெரிவுசெய்யும் நேரம் வந்தது. விழாவின் ஏற்பாட்டாளர் எழுந்து இப்பொழுது நான் மலர்க்குவியல் ஒன்றினை மானசீகமாக வீசுவேன், அவை எவருடைய பாதங்களில் வந்து விழுகின்றனவோ அவரே இவ்வருட தலைவராக அங்கீகரிக்கப்படுவார் என அறிவித்தார். பிறகு அவர் மானசீகமாக மலர்க்குவியலை வீசிய வேளையில் அன்னை காயத்திரிதேவியின் சித்தப்படியே அம்மலர்க் குவியல் நிதர்சனமான நமது சித்தர் முருகேசு மகரிஷியின் திருப்பாதங்களில் விழுந்து, அனைவர் முன்னிலையிலும் அவரையே அந்த ஆண்டின் உலக ஆன்மீகப் பாராளுமன்றத் தலைவர் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங் காட்டியது. ஆன்மீகப் பாராளுமன்றம் உலக அபிவிருத்தித் துறையில் சுவாமிஜிக்கு கலாநிதி பட்டம் வழங்கியதுடன் தத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் அவரை மகாமேதையாக அங்கீகரித்தது.

மேலும விஸ்வ உனாயன் ரட்னா எனும் கௌரவத்தையும் மகா அவதார் எனும் ஆன்மீக அங்கீகாரத்தையும் பிரம்மஸ்ரீயாக ஆன்மீகப் பதக்கமும் - விஸ்வ அத்யாத்மிக் என புனிதராகவும் அங்கீகரிக்கப்பட்டார்.

ஆதிமகாபரம், ஜெகத்குரு என்றும் அறிஞர்களால் அழைக்கப்பட்டார். ஆன்மீக உலகின் வித்வ தகைமையில் உபவேந்தராகவும் , ஆன்மீக நட்சத்திரங்கள் பத்தினையும் பெற்றவராகவும் உலகப் பிரஜையாகவும் - சமசாத் அடையாளமாக அத்யாத்மிக ஜகத் நிர்மன் அதிகாரி எனவும் சொல்லப்பட்டார். எனினும் காயத்திரி சாதனாவின் தந்தை என்று உலக ஆன்மீக பாராளுமன்றத்தினர் அளித்த கௌரவமே குருதேவருக்கு சாலப்பொருந்தும்.

சுவாமியிடம் காயத்திரி தீட்சைப் பெற்ற ஒரு பெண்மணியின் கதையிது. இலங்கையரான இவர் ஏழு வருடங்கள் அமெரிக்காவில் தங்கி அங்கு கல்வியை இடைநிறுத்திய இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரியராக இருந்தார். அம்மாணவர்கள் அடிக்கடி குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள். சமூக சட்டவிதிகளுக்கு அடங்குபவர்கள் அல்ல. தன்னிச்சைப்படி நடப்பவர்கள். அவர்களை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவது மலையைக் கிள்ளி எலியைப்பிடிக்க முயற்சிக்கும் செயலுக்கு ஒப்பானது. சிரமமான காரியந்தான் ஆனால் செய்துமுடிக்க இயலும் என்று ஆங்கில மொழியில் பழமொழியுண்டு.

இந்த ஆசிரியை அமெரிக்காவிலிருந்தபடியே மானசீகமாக மகரிஷி முருகேசுவை நினைத்து தனது பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வடைய உருகி வேண்டுதல் செய்துவந்தார். நாளடைவில் நமது குருநாதரின் அருளால் ஒரு ஆன்மீக வழிகாட்டி அந்த தொலைதேசத்தில் இந்த அம்மையாருக்குக் கிடைத்தார். அவர் யூத இனத்தை சேர்ந்தவரும் கிறிஸ்துவின் அபிஷேகம் பெற்றவருமானவர். சுவாமிஜியின் மனித நேயம் அந்த யூத ஆசிரியரின் பிரார்த்தனைக் குழுவிலும் வெளிப்பட்டு அப்பெண்மணியை ஆட்கொண்டது.

பிரதியுபகாரம் கருதாத நிபர்ந்தனையற்ற அன்பை செலுத்தவும் பகிர்ந்து கொள்ளவும் காயத்திரி சித்தர் உதாரணப் புருஷராகத் திகழ்ந்தார். அந்த அன்புத்தீயானது தன்னையும் பற்றிக் கொண்டு அந்த முரட்டு மாணவர்களை மனித நேயம் உள்ள வெற்றிகரமான பிரஜைகளாக மாற்றத் தனக்கு சக்தியூட்டிய அற்புதத்தை அப்பெண்மனி அடிக்கடி பகிர்ந்துக் கொள்வார். அத்துடன் அவர்களின் தியான நேரங்களில் இயேசுநாதர் அந்த யூத ஆன்மீககுருவில் பிரத்தியட்சமாகி காயத்ரிமந்திர மகிமையையும் எடுத்துரைத்து, இலங்கையில் வாழும் முருகேசு மஹரிஷி எனது பிரியமான குமாரன் எனக்கூறியதையும் அறிவித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 அருட்சம்பவங்கள்

மகரிஷி முருகேசுவிடம் பூரணமாக சரணடைந்தவர்கள் தாம் பெற்ற ஆசீர்வாதங்களை அடிக்கடி ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள். சுவாமிஜியின் ஆசிகளை வேண்டி, பூரணைத் திங்கள் மற்றும் ஏனைய யாகபூஜைகளிலும் முழுமையாக ஈடுபாடுடைய ஒரு குடும்பத்தினர் அடைந்த அற்புத நன்மைகளை அடிக்கடி மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொள்வார்கள். . அவர்களுக்கு ஒரு மகனும் மகளும் இருந்தனர். ஐந்து வயதாகியும் அந்த மகனுக்கு சரளமாக பேசும் ஆற்றல் இல்லாமலிருந்தது. பெற்றோர் கவலையை தம்மனதில் சுமந்தவாரே, இலங்காதீஸ்வரர் ஆலயத்திற்கு அடிக்கடி சென்றுவந்தார்கள். ஒருநாள் பூரணைத் தின யாகபூஜைக்குப் முடிந்தபிறகு சுவாமிகள் தமது வழமையான சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்தார். சுற்றி பக்தர்களின் குடும்பத்தினர் அமர்ந்திருந்தனர். குருநாதர் அவ்வேளை கண் விழித்து பேசவியலாத அந்தச் சிறுவனை தன்னருகில் அழைத்தார். தனக்கு அருந்த வைத்திருந்த சூடான பசும்பாலை அவனுக்கு ஊற்றிக் கொடுத்தார். அவன் உடனே தனது தாயைப் பார்த்து பேசிய முதல் வார்த்தை அம்மா! ஆத்தித்தா என்பதாகும். அதன் பிறகு சுவாமிஜி கண்களில் கிண்டலுடன் அவனுக்கு ஒரு வாழைப்பழத்தையும் கொடுத்தார். அவன் அம்மா உரிச்சித்தா! என்று சொன்னான்.

அச்சம்பவம் அக்குடும்பத்தினரை சுவாமிஜியின் மகாசக்தியை உணரவைத்தது. அத்துடன் நுற்றுக்கணக்கானோரை அவர்களுக்கூடாக சுவாமியின்பால் ஈர்க்கவும் வழிவகுத்தது. அச்சிறுவன் வளர்ந்து, இன்று வெளிநாட்டு பல்கலைக் கழகமொன்றில் படித்துக் கொண்டிருக்கிறான்.

இன்னொரு பௌத்த அன்பரின் மகள் மூளைக்காய்ச்சல் நோயால் அவதியுற்றுக் கொண்டிருந்தாள். மறுநாள் காலை ஏழுமணிக்கு முன் அவளின் உயிர்பிரிந்து விடும் என்ற வைத்தியர்களின் அபிப்பிராயத்தை உறவினர்கள் அறிந்து, மிகுந்த மனத்துயரில் மூழ்கினர். இச்செய்தியை சுவாமியிடம் மிகுந்த கவலையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிட்டனர். குருநாதர் சிறிது நேரம் மௌனமாக தியானத்தில் ஆழ்ந்திருந்தார்கள். பின்பு அப்பக்தர்களை பார்த்து நாளை காலை ஐந்து மணிவரை பொறுத்திருங்கள் எனக்கூறினார். மறுநாள் காலை ஐந்து மணியளவில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த அவ்விளம் பெண் திடீரென கண்விழித்து அம்மா! என அழைத்தாள்.

இன்னொரு அன்பரது குழந்தைக்கு கண்பார்வை முற்றாகவே இல்லாமல் இருந்தது. சுவாமிஜி அக்குழந்தையை ஆசீர்வதித்து அனுப்பினார். அக்குழந்தை இன்று பார்வை பெற்று நலமாக இருக்கிறாள்.

ஒரு பௌத்த அன்பரது மூன்று வயதுக் குழந்தை, திறந்த கண் மூடாமலும் வாய் பேச முடியாமலும் வளர்ச்சியும் குன்றி இருந்தது. சுவாமிஜி அக்குழந்தையை ஆசீர்வதித்து மூலிகை மருந்து ஒன்றை கொடுத்தார். அக்குழந்தை குணமாகி வளர்ந்து இன்று ஆரோக்கியமுள்ள இளம் பெண்ணாக இருக்கிறாள்.

கிழக்கு மாகாண காயத்திரி ஆச்சிரமப் பணிகளுக்கு சுவாமிஜிக்கு மிக உறுதுணையாக இருந்தவர் சுவாமிஜியிடம் பூரண சரணடைந்த அன்பர் ஒருவராகும். இவர் இலங்கை அரசாங்கத்தில் பெரும்பதவி வகித்தவர். இவர்களுடைய வாழ்வில் நடந்த ஒரு துயர் சம்பவமும், அதன் பிறகு நடந்தவையும் சுவாமிஜியின்பால் அவர்கள் ஈர்க்கப்படுவதற்கு காரணிகளாக அமைந்தன.

சுவாமிஜியை முதன்முதலாக இவர்கள் சந்திப்பதற்கு முன் அவகளின் கடைசி மகள் அகாலமாக இறந்துவிட்டாள். இத்துயர் பெற்றோர்களை பெருந்துன்பத்தில் ஆழ்த்தியிருந்தது. அவர்கள் சுவாமியை சந்தித்தபோது, பாரம் மிகுந்த மனதுடன் தங்கள் கதையை அவரிடம் கூறினார்கள். சுவாமிஜி, கலங்க வேண்டாம்! அவள் மீண்டும் உங்கள் வீட்டில் பிறப்பாள் என்று சொன்னார்கள். சுவாமிஜியின் அருள்வாக்கு பலித்தது, சிலகாலத்திற்கு பிறகு ஒரு பெண்குழந்தை அவர்களுக்குப் பிறந்து அவள் இன்று மிகச்சிறப்புடன் வாழ்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு காயத்ரி ஆச்சிரமத்தில் வேலை செய்துவந்த ஒருவருக்கு இதயத்தில் துவாரம் இருக்கின்றதென மருத்துவாகள் கூறியிருந்தனர். சுவாமிஜி அவரை அழைத்து வருமாறு கூறி, ஒரு மூலிகை மருந்தை ஆசீர்வதித்து கொடுத்தார். அவர் இம்மருந்தை உட்கொள்ளத் தொடங்கியதும் அவரின் இதயத்துவாரம் அடைப்பட்டுப் போயிருந்தது மருத்துவப் பரிசோதனையின் பின் தெரியவந்தது .

அமெரிக்காவில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ பெண்ணொருவருக்கு நெடுங்காலம் குழந்தைப்பேறு இல்லாமலிருந்தது. சுவாமிஜியின் சக்தியை அறிந்த அவர், இலங்கைக்கு கணவருடன் வந்து தன் குறையைச் சொல்லி அழுதாள். சுவாமிஜி அவளை ஆசீர்வதித்து குழந்தைப்பேறு கிடைக்குமென அருள்வாக்கு மொழிந்தார். அவள் மிகுந்த நம்பிக்கையுடன் திரும்பிச் சென்றாள். எனினும் கருத்தரிப்பதற்கு மிகவும் தாமதமாயிற்று. ஒருநாள் அப்பெண் மிகப்பதற்றத்துடன் சுவாமிஜியுடன் தொலைபேசியில் தொடர்புக் கொண்டாள். சுவாமிஜி அப்பெண்ணை ஒரு குறிப்பிட்ட நாளில் தனியே அமர்ந்து தியானம் செய்யப் பணித்தார். அதேநாளில் சுவாமிஜியும் இலங்கையில் தனது நுவரெலியா ஆச்சிரமத்தில் இருந்தவாறே தியானமூலமாக அவளை ஆசீர்வதித்தார். இறையருள் சுவாமிஜியின் அருள்வாக்கின் மூலம் அன்றைய தினமே அவளை கருத்தரிக்கச் செய்தது. இன்று அத்தம்பதிகளுக்கு ஒரு அழகான குழந்தை இருக்கின்றது.



# 16 மகாசமாதியில் காயத்திரி சித்தர்

2007ம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டுக்குப் பிறகு மகரிஷி முருகேசு சுவாமிஜியவர்கள் அடிக்கடி உடல் உபாதைக்குள்ளானார்கள். சுகம் நலிவடைந்து பெரும்பாலும் தனிமையில் தனது நேரங்கழிக்க விரும்பினார்கள். பொதுவாக நமது குருதேவரின் அன்றாடப் பணிகள் மிக அனேகம். தினமும் நூற்றுக்கணக்கான மக்களும், பூரணைத் தினங்களில் ஆயிரக்கணக்கானோரும், வெளியூர்களுக்கு விஜயஞ்செய்யும் சமயங்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் அவரைச் சந்தித்து தங்கள் குறைகளையும், தேவைகளையும் அவரின் காலடியில் கொட்டி சுவாமிஜியின் ஆலோசனைகள் ஆசிகளுடன் பலர் பொருளுதவிகளையும் வேண்டி நிற்பார்கள்.

அந்த இலட்சோபலட்ச மனிதர்களின் மனப்பாரங்கள், உடல் உபாதைகள் அனைத்தையும் அவர் தனக்குள் ஏற்றுக்கொண்டு சுமந்தார். இந்த பாரங்கள் தனது மனதையும் உடலையும் மிக அழுத்தி நலிவடையச் செய்கின்ற உண்மையை அவர் தெரிந்தும் வைத்திருந்தார்.

குருதேவர் அவரது பாதங்களினூடாக தங்களுடைய வலிகளை ஏற்று சுமக்கின்றார் என்ற உண்மையை உணர்ந்த சில அன்பர்கள் சுவாமிஜியின் பாதத்தை தொடுவதை அவர் மீது கொண்டிருந்த அன்பு மிகுதியால் தவிர்த்தும் வந்தனர்.

அனைவரின் நோய் நொடிகளையும் தமது அருளாசிகளால் தீர்த்த மகரிஷிக்கு தனது நோயைத் தடுத்திருக்க இயலாதாவென கேட்டவர்களும் இருந்தனர். ஆனால் சுவாமிஜியும் ஸ்ரீரமணர், ராமகிருஸ்ண பரமஹம்சரைப் போன்றே தனது சக்திகளை தன் சுயத்துக்காக பயன்படுத்தாமல் உலகோரின் நலனுக்காகவே அளித்து வந்தார்கள். அத்துடன் தனக்குக் கிடைத்த பொருளையும், பணத்தையுங் கூட அவர் எதுவித வீண் ஆடம்பரங்களுக்கு விரயஞ்செய்யவில்லை. அவர் அணிந்து வந்த உடையினைப் போன்றே தமது உள்ளத்தாலும் மிக மிக எளிமையான வாழ்வினையே நடத்திவந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குருதேவர் அவரைத்தேடி வருபவர்களை பக்தர்களாக மட்டுமே நினைத்ததில்லை. அவர்களை காயத்திரி குடும்பத்தைச் சேர்ந்த ஞானக் குழந்தைகளாகவே உறவு பாராட்டி வந்தார்.

இக் குடும்பத்தினர் அடிக்கடி காயத்திரி சன்னிதானத்தில் கூடி அன்றைய பூஜை அபிஷேகம், பிரார்த்தனை பஜனை யாகம் முடிந்து கலந்து கொள்பவர்களுக்கு அன்னதானம் ஆகியவற்றிற்கு தங்கள் பங்களிப்பையும் அனுசரணையையும் அளிப்பது தனக்கு மகிழ்ச்சியும் தருவதோடு அவ்வன்பர்களின் குடும்பங்களுக்கும் நிரந்தர சௌபாக்கியங்களையும் அளிக்கும் என்று கூறுவார்.

சுவாமிஜி அனைவரையுங் கவரும் மிக அழகான தோற்றங் கொண்டவர். புராணங்களில் குருமுனியென உருவகிக்கப்பெற்ற அகஸ்திய மாமகரிஷியைப் போன்றே அவருடைய குருப்பரம்பரையின் வழிவந்த முருகேசு சுவாமியவர்களும் சிறிய உருவம் கொண்டவர்.

முதிர்வயதிலுங் கூட வெள்ளிக் கம்பிகளால் முடிசூடினாற்போல் காணப்பட்ட அவருடைய தலைமயிர்கள் சிறிதேனும் உதிர்ந்திருக்கவில்லை. வடதுருவத்திலிருந்து வந்த ஒரு நத்தார் தாத்தாவைப் போன்று வெண்தாடியுடன் தோற்றமளிப்பார். எவரையும் கருணையால் இரட்சிக்கும் ஒளிவீசும் கண்கள், அடியார்களை கட்டும் அன்புகுரல். அத்துடன் சுறுசுறுப்பாக இயங்குவார். வேகமாக நடப்பார். அகன்ற தோள்களுடன் பரந்த மார்பும் ஒரு பளுதூக்கும் வீரனைப் போன்ற உறுதியான கரங்களும் புஜங்களும் கொண்டவர். எனினும் இந்த உருவத்தில் ஒரு அன்னையின் மென்மை பளிச்சிடும் . அவர் முற்றிலும் தாயுமானவரே என்பது பூரணமான உண்மையாகும்.

24.09.2007 திங்கட்கிழமை மாலை 4.10 நிமிடமளவில் மகரிஷி முருகேசு இந்தியாவில் உள்ள விஜயா மருத்துவமனையில் இறைஜோதியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயத்திரி சித்தர் ஸ்ரீ முருகேசு மகரிஷி
அறநெறிப் பள்ளி மாணவர்கள் - நுவரெலியா



கிழக்கு மாகாண பள்ளி மாணவர்களுடன்




குருகுல மாணவர்கள் பஜனை



வாங்கப்பா சாப்பிடலாம் !
(அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பகலுணவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குருதேவரின் ஸ்ரீ பாதங்கள்



108 பாணலிங்கங்கள்



இலங்காதீஸ்வரர் ஆலயம்
நுவரெலியா



காயத்திரி சித்தரின் மகா சமாதி ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றானார். அவ்வேளை அவர் அருகில் ஸ்ரீ சங்கரானந்தா சுவாமிகள், அடியான் ஞானசேகரன், பக்தர் ஜனனி ஸ்ரீரதன் பெறாமகன் சந்திரமோகன் குருதேவரை ஐம்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிந்த ஜீவராணி அம்மையார் கூடவே மற்றும் பல இந்திய மெய்யன்பர்களும் இருந்தனர்.

இறுதிவரை கூடவேயிருந்த சந்திரமோகன் அவர்கள் காயத்ரிபீடத்தின் நிர்வாக காரியங்களை இன்றும் நடாத்தி வருகின்றார்.இவர் சுவாமிஜியின் இளைய சகோதரர் சக்திவேலின் புதல்வராவார். தனது ஐந்தாவது வயதுமுதல் சுவாமிஜியுடன் வாழ்ந்து பெற்ற அனுபவங்கள் இவரால் சுவாமிஜியின் பணிகளை தொடர்ந்து காத்து வளர்க்க உதவுகின்றன.

மஹரிஷியவர்கள் ஜீவசமாதியடைந்த மறுநாள், அவரின் புனித ஸ்ரீதேகம் ஆகாய மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. சுவாமிஜியின் மகாசமாதி மங்களாபிஷேக தினத்தன்று ஆயிரமாயிரம் பக்தர்கள் நுவரெலியா ஸ்ரீநகரில் கூடினர்.

மகாசமாதி மங்களாபிஷேகங்களை இரண்டாயிரத்தேழாம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் இருபத்தாறாம் நாள், பூரணைத்தினத்தன்று ஸ்ரீ இராஜ்குமார் சுவாமிகளின் வழி நடத்தலில் நியமப்படி நடந்தேறின.

காயத்திரி சித்தர் முருகேசு மகரிஷிகளின் இடத்தை உலகில் எவராலும் நிரப்ப முடியாவிட்டாலும் அவர் இன்றுங்கூட பலரையும் புதுமையாக வழி நடத்துவதையும் மேலும் அவர் தான் தெரிந்துக்கொண்ட அநேகரில் வாழ்ந்து கிரியைகள் செய்வதையும், வியப்புடன் அவதானிக்க முடிகின்றது.

மானுடர்களிடமிருந்து யாதொன்றையாவது எதிர்ப்பார்த்தல் நமக்கு ஏமாற்றத்தை தரலாம். ஆனால் உண்மையாக குருவிடம் முழு நம்பிக்கை வைப்பது நம்மை துன்பப்படுத்தாது.

நம்பிக்கை என்பது ஒரு முடிவல்ல. அது ஒரு நீண்ட ஆரோக்கியமான பயணமேயாகும். எதிர்ப்பார்த்தல் என்பது கேள்வி எனின் நம்பிக்கையோ அக் கேள்விக்கான பதில் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்திரி சித்தரின் சமாதி மண்டபத்திற்கு எதிர்பார்ப்புடன் வருபவர்களில் ஒரு சிலர் தாங்கள் நினைத்த காரியத்தை அடையாமற் போனதை எண்ணி சங்கடப்பட்ட சந்தர்ப்பங்கள் சிலவுண்டு. எனினும் நம்பிக்கையுடன் வந்தவர்கள் ஏமாற்றத்துடன திரும்பிய சரித்திரம் எதுவும் கிடையாது.

காலையிலிருந்து வெளியில் உழைத்து காய்ந்த உடலுடன் மாலையில் வீடு திரும்பும் தாயின் மார்பில் உதடுகளை வைத்தவுடன் குழந்தையால் ஈரப்பாலினை வயிறுமுட்ட சுவைக்க முடிகிறதே அது எதனால்? பதட்டமான எதிர்பார்பினாலா? இல்லை வெறும் குழந்தைத்தனமான நம்பிக்கை ஒன்றினால் மாத்திரமே.

மனிதர்களிடமும் மனுஷிகளிடமும் வேண்டுமானால் எதையாவது எதிர்ப்பார்த்து ஏமாற்றமும் அடையாலம். ஆனால் தாயுமானவர்களிடம் நம்பிக்கையை மாத்திரமே கொள்வோமா?

ஆங்கிலத்தில் கூறபட்ட ஒரு முதுமொழியின்படி, மனிதர்களில் எவரும் முற்றும் கருமையானவர்கள் அல்ல, கூடவே பூரணமான வெள்ளை நிறத்தவர்களுமல்ல. மனிதர்கள் சாம்பல் நிறமானவர்கள். கருப்புடன் வெள்ளையும், வெண்மையில் கருப்பும் கலந்த சாம்பல் நிறமே நல்லனவையும் கூடவே தீயனவையும் இயல்பாக கொண்டிருக்கும் மனிதர்களுக்கு உதாரணமாகும். காயத்ரி சித்தர் மஹரிஷி முருகேசு அவர்கள் இந்த இருசாராரையும் கலந்தணைத்துக் கொண்டு, தனது பிறவியின் நோக்கத்தை முழு மனிதகுலத்திற்கும் நிறைவேற்றியளிப்பதில் மிக அருள் பெற்றவராக இருந்தார்.

ஓம் முருகேஸ்வராய நமஹ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரிஷி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகளின் திருப்பாத பூஜை.

ஓம் தாயே நமஹ!

தந்தையே நமஹ!

சற்குருவே நமஹ!

ஆனந்த மானந்த கரம் ப்ரசன்னம்
ஞான ஸ்வரூபம் நிஜ போத ரூபம்
யோகீந்த்ர மீட்யம் பவரோக வைத்யம்
ஸ்ரீ ஸத்குரும் நித்யமஹம் பஜாமி
குரோர் பிரம்மா குரோர் விஷ்ணு குருர் தேவோ மகேஷ்வரஹ,
குருர் சாட்ஷாத் பரப்பிரம்மம் தஸ்மை
ஸ்ரீ குர்வே நமஹ!

குரு தேவா
என் உடல் உமக்கு அடிமையாகவும்
உன் உருவம் என் பார்வையிலும்
உன் புனிதமான வரலாறு என் நாவினிலும்
உன் பெருமைக்குரிய செயல்கள் என் செவிகளிலும்
உன் சந்தன வாசனை என் சுவாசத்திலும்
எனது செயல்கள் உனது வசமாகவும்
என்றும் எம்முள் நிலைத்திருக்க
வேண்டுகின்றேன் ஐயனே
சரணம் சரணம் சரணம்

ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளக்கு

ஜோதி ஜோதி ஜோதி ஜோதி
ஜோதியே ஜெக ஜோதியே
ஆதி ஆதி ஆதி ஆதி
ஆதியே அருளாதியே
ஜோதி ஜோதி

நீதி நிலவி அன்று மின்றும்
நின்றிலங்கும் ஜோதியே
நிமல வடிவில் உலகம் முழுதும்
நிறைந்த எங்கள் ஜோதியே
ஜோதி ஜோதி

விண்ணுலகமும் மண்ணுயிர்களும்
வேதவிதியும் ஜோதியே
கண்ணுள்ளாடும் மணியும் ஒளியும்
கருணை வடிவம் ஜோதியே
ஜோதி ஜோதி

அன்புமயமும் அறிவிலுயர்வும்
ஆத்ம ஞானமும் ஜோதியே
அரிய தபசு புரிய நமதுள்
எரியும் ஜோதி ஜோதியே
ஜோதி ஜோதி

திருபெருகிய அருளொளிமய
தீப ஜோதி ஜோதியே
கிருபை பெருகி குருவருள் பெற
வருக வருக ஜோதியே
ஜோதி ஜோதி

கணபதியோடு முருகனும்
கலைவாணியும் பரம் ஜோதியே
கதிர்மதியொடு உலகளாவிய
காரணப் பொருள் ஜோதியே.
ஜோதி ஜோதி

ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மஹரிஷி முருகேசு நாமாவளி

1. ஓம் மூலாதார கணபதியே நமஹ!
2. ஓம் காளிமுத்து சந்தனம்மா புத்ராய நமஹ!
3. ஓம் சிவபூமியாம் இலங்காபுரியில் அவதாரமானவரே நமஹ!
4. ஓம் அகத்தியரால் அருளாசிப் பெற்றவரே நமஹ!
5. ஓம் கண்ணையா மகாயோகியின் சீடரே நமஹ!
6. ஓம் உலக ஆன்மீக சபையின் தலைவரே நமஹ!
7. ஓம் உலக ஆன்மீக ஆய்வுக்கலாநிதியே நமஹ!
8. ஓம் மஹா அவதார தேவனே நமஹ!
9. ஓம் பிரம்ம ரிஷியே நமஹ!
10. ஓம் ஆதி மஹா பரம ஜெகத் குருவே நமஹ!
11. ஓம் ஞானாநந்த தபோ சீடரே நமஹ!
12. ஓம் சிவாநத்த முருகேசுவே நமஹ!
13. ஓம் ஈஸ்வரப்பட்டரின் வழித்தோன்றலே நமஹ!
14. ஓம் காயத்ரி உபாசகாய நமஹ!
15. ஓம் சர்வ ஞான சொருபாய நமஹ!
16. ஓம் கொல்லிமலை சித்தரின் அருளாசிப் பெற்றவரே நமஹ!
17. ஓம் சீதாப்பிராட்டியின் அருளாசிப் பெற்றவரே நமஹ!
18. ஓம் சிவானந்தரின் ஞான வழித்தோன்றலே நமஹ!
19. ஓம் ஸ்ரீமாலி சித்தர் வழி தாந்திரிக் யோகியே நமஹ!
20. ஓம் அஸ்வாரூட யோகியின் அருளாசிப் பெற்றவரே நமஹ!
21. ஓம் முன்வினை போக்கும் முதலே நமஹ!
22. ஓம் கிரியாபாபா தருஷ்னாய நமஹ!
23. ஓம் பிருந்தாபவனில் ராதை அருள் பெற்றவரே நமஹ!
24. ஓம் காகபுஜண்டர் அருளாசியாளனே நமஹ!
25. ஓம் போகர் மகரிஷியின் மந்திரக்கோல் பெற்றவரே நமஹ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஓம் சிவபாலயோகி லிங்கம் பெற்றவரே நமஹ!

27. ஓம் காயத்ரிபீட பீடாதிபதியே நமஹ!

28. ஓம் காயத்ரி தபோவன சற்குருவே நமஹ!

29. ஓம் காயத்ரி ஆத்மயோக ஞானசபா ஸ்தாபகரே நமஹ!

30. ஓம் சப்தரிஷி வளாக மகரிஷியே நமஹ!

31. ஓம் ஸ்ரீ லங்காதீஸ்வர ஸ்தாபகரே நமஹ!

32. ஓம் ஸ்ரீ பசுபதீஸ்வர லிங்கப் பிரதிஸ்டாய நமஹ!

33. ஓம் ஆன்மீக ஆய்வுமையக் குருவே நமஹ!

34. ஓம் சித்தத்தில் உறைந்த சித்தா நமஹ!

35. ஓம் ஐந்தெழுத்து மந்திரத்திற்கு உரியவரே நமஹ!

36. ஓம் யாகத்தில் பிரிய சித்தரே நமஹ!

37. ஓம் நற்குணங்கள் தருபவரே நமஹ!

38. ஓம் மும் மூர்த்தியும் ஆனவரே நமஹ!

39. ஓம் பஞ்ச பூத தத்துவமானவரே நமஹ!

40. ஓம் சஞ்சீவினிமை நாயகனே நமஹ!

41. ஓம் யோக சாதனையால் அறியப்படுபவரே நமஹ!

42. ஓம் நோய்களை களைபவரே நமஹ!

43. ஓம் தன தான்யம் அளிப்பவரே நமஹ!

44. ஓம் அன்னதானப் பிரபுவே நமஹ!

45. ஓம் யாத்திரையின் பாதுகாவலனே நமஹ!

46. ஓம் பஜனையால் புகழ்பாடப்படுபவரே நமஹ!

47. ஓம் கற்பக விருட்சமே நமஹ!

48. ஓம் காமதேனுவாய் வரம் தருபவரே நமஹ!

49. ஓம் ஆதி சக்தியானவரே நமஹ!

50. ஓம் எழில் உருவான வடிவுடையோனே நமஹ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. ஓம் அன்புருவான அன்னையே நமஹ!

52. ஓம் தேடி வருவோரை தேற்றுவோய் நமஹ!

53. ஓம் அருட் பெரும் ஜோதி வள்ளளே நமஹ!

54. ஓம் திரிகால ஞானியே நமஹ!

55. ஓம் உயிரும் உடலும் ஆனோய் நமஹ!

56. ஓம் காயத்ரிமந்திரத்தை அகிலத்தில் பரப்புபவரே நமஹ!

57. ஓம் ஆன்மீக காவியம் படைப்பவரே நமஹ!

58. ஓம் சித்த வைத்தியாய நமஹ!

59. ஓம் ஸப்த ரவி மகாபிரபுவே நமஹ!

60. ஓம் நவகோள்களின் அருட்சக்தியாளரே நமஹ!

61. ஓம் சகல கலைகள் அறிந்தவரே நமஹ!

62. ஓம் அஷ்டசித்திகளை தருபவரே நமஹ!

63. ஓம் அருள் ஞானம் அருள்பவரே நமஹ!

64. ஓம் ஆத்ம ஞான சற்குருவே நமஹ!

65. ஓம் கஜமுத்து நாயகா நமஹ!

66. ஓம் புலிப்பாணி அருளாசியானவரே நமஹ!

67. ஓம் காயத்ரியின் மறுவடிவமே நமஹ!

68. ஓம் பக்த வத்ஸலனே நமஹ!

69. ஓம் சப்தரிஷிகள் தொடர்பாளரே நமஹ!

70. ஓம் ஆன்மீக அறிவுவள்ளலே நமஹ!

71. ஓம் சூக்சும வடிவத்தில் தோன்றுபவரே நமஹ!

72. ஓம் வான்மீகிமகரிஷியின் அட்சயப்பாத்திரம் பெற்றவரே நமஹ!

73. ஓம் வணங்குவோருக்கு குலதெய்வமானவரே நமஹ!

74. ஓம் கொம்புத் தேங்காய் பெற்றவரே நமஹ!

75. ஓம் திருமூலர் பாசாணலிங்கம் பெற்றவரே நமஹ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. ஓம் நவபாஷாண நாயகனே நமஹ!

77. ஓம் ரசவாத யோகம் கற்றவரே நமஹ!

78. ஓம் மானச லோக தொடர்பாளரே நமஹ!

79. ஓம் வியாசரின் பிச்சாப்பாத்திரம் பெற்றவரே நமஹ!

80. ஓம் பக்தர்களின் பாவசாபம் அகற்றுபவரே நமஹ!

81. ஓம் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே நமஹ!

82. ஓம் பக்தர் இருதயத்தில் குடி கொண்டவரே நமஹ!

83. ஓம் இறை இன்பம் கொடுப்பவரே நமஹ!

84. ஓம் தூய்மையான மனதில் உறைபவரே நமஹ!

85. ஓம் சச்சிதானந்த குருவே நமஹ!

86. ஓம் அகிலம் போற்றும் மகரிஷியே நமஹ!

87. ஓம் தியானத்தின் மூலப்பொருளே நமஹ!

88. ஓம் காயத்தை திரியாக்கியவரே நமஹ!

89. ஓம் எல்லாப் பிழையும் பொறுப்பவரே நமஹ!

90. ஓம் உக்ரதவ யோகியே நமஹ!

91. ஓம் சூக்சுமதாரிகள் வசிக்கும் உடலோய் நமஹ!

92. ஓம் யோகசாதனை பிறப்பே நமஹ!

93. ஓம் சுப மங்களம் அருள்பவரே நமஹ!

94. ஓம் உலகம் போற்றும் லிங்க பீட நாயகனே நமஹ!

95. ஓம் ஸர்வ அவதார சக்தி ஸத்ரூபாய நமஹ!

96. ஓம் பரமானந்த சொரூபனே நமஹ!

97. ஓம் ஸர்வ யோக சித்தராய நமஹ!

98. ஓம் ஞானியர் உள்ளத்தில் இன்பம் அளிப்பவரே நமஹ!

99. ஓம் வெண்மை உடை உடுப்பவரே நமஹ!

100. ஓம் இளஞ் சூரிய நிறங்கொண்டவரே நமஹ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. ஓம் குழந்தை மனம் கொண்டவரே நமஹ!

102 .ஓம் ஆன்மீக அருள் வழிப் பேரரசே நமஹ!

103. ஓம் மலர்பாதங் கொண்ட மாகானே நமஹ!


104. ஓம் மகரிஷிகள் வழி வள்ளளே நமஹ!

105. ஓம் தேவதைகள் பூஜிக்கும் மூர்த்தியே நமஹ!

106. ஓம் மனுவை காக்க குரு உரு எடுத்தோய் நமஹ!

107. ஓம் கணம் மறவாத வரம் தரும் யோகியே நமஹ!

108 ஓம் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சற்குருவே நமஹ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி சித்தரின் ஆன்மிக படைப்புக்கள்

01. ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமை
02. ஞான குரு
03. மனித காந்தம்
04. எளிய முறை யோக பயிற்சி
05. சகல தெய்வ உபாசனா பத்ததி
06. காயத்ரி உபாசனா பத்ததி
07. காயத்ரி இராமாயனம்
08. காயத்ரி கீதை
09. காயத்திரி மூலம் குண்டலினி விழிப்பு
10. பிரபஞ்சம் இன்பமயம்
11. மனித உடலில் தெய்வஞானம்
12. தியானம்
13. சூட்சும் திருஷ்டி விஞ்ஞானம்
14. மானச யோகம்
15. யாக விஞ்ஞானம்
17. பஜ கோவிந்தம்
18. ஷட்பதீ
19. ஸ்ரீ லலிதா பஞ்சரத்னம், விளக்கவுரை
20. காயத்ரி குப்த விஞ்ஞாபனம்
21. ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர் 1996
22. ஸப்திரிஷிகள் மண்டலம் கும்பாபிஷேக சிறப்பு மலர் 2004
23. பேரருள் சிறப்பு மலர்

## English

1. Spiritual Teaching of Swami Murugesu
2. The Great Science and Power of Gayathri
3. Spiritual Tenants of Sri Gayathiri Peetam
4. Veda Manthra
5. Science of Clairvoyance
6. idol Worship
7. Human Magnetism
8. Cosmo mystic Meditation




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 பாணலிங்களுக்கான மகா சிவாலயம்

## - உத்தேச வரைபடம் -



காயத்திரி சித்தர் உலக ஆன்மீக அதிசயமாக எதிர்காலத்தில் விளங்கும் என தீர்க்கதரிசனமாக உரைத்த 108 இலிங்களுக்கான மகா சிவாலயத்தின் உத்தேச வரைபடமும் இந்தியாவிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் வந்து சேர்ந்த பாணலிங்கங்களும்.

**இம் மகாசிவாலயத்தின் நிர்மாண பணிகளில் பங்குபெற பிராப்தம் உடையோர் தயவு செய்து காயத்திரி பீட நிர்வாக அறங்காவலர் ஸ்ரீ சக்திவேல் சந்திரமோகன் அவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டுகின்றோம். (077-3249554, 052-2222609)**



இந்நூலாசிரியர் இராஜேந்திரநாத் கொட்வின்-சாமுவேல் காயத்திரிசித்தர் ஸ்ரீ முருகேசு மகரிஷியவர்களை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் அறிந்தவர். நடைமுறை மதவாதங்களிலிருந்து அனைவரும் விடுதலையடைந்து மீண்டும் பாரம்பரிய இறைக்கொள்கைகளைக் கடைப்பிடிக்க விரும்புபவர்.

நம்மில் நாம் நேசம் கொள்ளும் விதமாகவே அயலவர்களையும் நேசிக்க வலியுறுத்தும் காயத்திரி சித்தரின் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டவர். மக்கள் பணியையே மகேசன் இட்ட ஆணையாக ஏற்று, இலங்கையிலும் பல ஐரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் பல குழுவினருக்கு சமூகப்பணிகளில் பயிற்சியளித்துள்ளார். பல தொண்டு நிறுவனங்களுக்கும் ஏனைய சமயத் தாபனங்களுக்கும் ஆலோசகர். அனுபவம் வாய்ந்த மனநல ஆற்றுப்படுத்துனர். ஆங்கிலம், தமிழ், சிங்களம் மும்மொழிகளிலும் சமூக அபிவிருத்திக் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் சரிதைகளையும் எழுதிள்ளார். மக்கள் பணி இயக்கமான வெண்சிலுவை இணையத்தின் ஸ்தாபகரான இவர் ஒரு இயேசு உபாசகருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org